


வரலாற்றுப் பெருமைமிக்க

# மாவைக் கந்தன் ஆலயம்

# திருத்தல வரலாறு

(ஆவணக் களஞ்சியம்)

வெளியீடு:

சைவத்திரு கா. சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பெருமைமிக்க
மாவைக் கந்தன் ஆலயம்
திருத்தல வரலாறு
(ஆவணக் களஞ்சியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகா சரணம்

# வரலாற்றுப் பெருமைமிக்க
# மாவைக் கந்தன் ஆலயம்

# திருத்தல வரலாறு

## (ஆவணக் களஞ்சியம்)

பெருவணக்கத்திற்குரிய மாவை ஆதீனகர்த்தா

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா**

பிரதம சிவாச்சாரியார்

அவர்களின்

திருவருள் ஆசியுடன்

வெளியீடு:

**சைவத்திரு கா. சிவபாலன்**

**2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : வரலாற்றுப் பெருமை மிக்க **மாவைக் கந்தன் ஆலயம் திருத்தல வரலாறு.** (ஆவணக் களஞ்சியம்) |
| பதிப்பு | : 2010ம் ஆண்டு, ஆடி மாதம். |
| பதிப்பாசிரியர் | : சைவத்திரு. கா. சிவபாலன் |
| பதிப்புரிமை | : மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் மாவை ஆதீனம். |
| நூலின் அளவு | : 1/8 |
| பக்கம் | : i - xvi + 158 |
| அச்சு எழுத்து அளவு | : 11 புள்ளி |
| அச்சிட்டோர் | : அனுஷ் பிரிண்டர்ஸ், கொழும்பு-11. |
| விலை | : ரூபா. 250.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


**ஆசியுரை** - *மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்* vii

**அணிந்துரை** - *நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்* ix

**கோவில் பற்றிய ஒரு குறிப்பு** - *பேராசிரியர் கா. சிவத்தம்பி* xi

**பதிப்புரை** - *கா. சிவபாலன்* xiv

**மாவைக் கந்தசுவாமியார் ஆலய கட்டிய இறுதி வாசகங்கள்** *01*

**கந்தபுராணக் கவிமலர்கள்** *02*

**மாவிட்டபுர காலம்** *03*

**மாவிட்டபுர தல எல்லைகள்** *04*

**வானளாவும் மேற்கு வாயில் இராஜ கோபுரம்** *05*

**கோவிற் கடவை** *06*

**மாவை ஆதீன நிர்வாக பரிபாலனம்** *07*

**மாவை ஆதீனத்தின் ஆறாவது ஆதீனகர்த்தா**
- *பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள்* *08*

**சிதம்பர தீட்சிதர்கள்** *11*

**மாவை ஆதீன வம்சாவழி ஒரு பார்வை** *12*

**ஏழாவது ஆதீனகர்த்தா**
**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்** *15*

**கந்தபுராண ஏடு** *18*

**மஹோற்சவ கால விழாக்கள்** *19*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹோற்சவ கால வாகன ஒழுங்குகள் 22

திருமடங்கள் 23

காணி நிலச் சொத்துக்கள் 24

மாவைக் கந்தன்மீது பாமாலை பாடிய புலவர்கள் 25

மாவை முருகன் பற்றிய செய்திகள் இடம்பெறும் நூல்கள் 28

மாவைக் கந்தன் வரலாறு கூறும் நூல்கள் 29

மாவை ஆதீன வெளியீடுகள் 30

மாவைப்பதியில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களும்,
முருக பக்தி கொண்ட அறிஞர்களும் 31

மாவிட்டபுரத் திருத்தலமும் அரசியற் தலைவர்களும் 32

மாவைக் கந்தன் ஆதீனமும் பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை அவர்களும் 33

மாவைக் கந்தன் ஆதீனமும் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரும் 35

மாவைக் கந்தன் மகேஸ்வர பூசை தொண்டர் சபை 37

மாவிட்டபுரக் காங்கேயன் மூர்த்தி - நா. கதிரவேற்பிள்ளை 38

மாவையில் அருள்பாலிக்கும் கோயிற் கடவை வெள்ளி வேலவன் 42

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன்
மாவிட்டபுரத் தொடர்பு
- கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 53

மாவை ஆதீன மகா மண்டப கருங்கல் திருப்பணி
- மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் 55

மாவை முருகன் பிள்ளைத் தமிழ் - சு. நடேசபிள்ளை 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவை சுப்பிரமணியக் கடவுள் பதிகம்**
- பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் 68

**மாவை யமக அந்தாதி** 70

**மாவை தண்டபாணி பதிகம்** 76

**மாவை முருகன் தல வரலாறு** 77

**கந்தரலங்கார விரிவுரைச் சிறப்பு** 80

**கந்தர் மாவை வெண்பா** 82

**வாழ்வு பெற்ற வல்லி** 86

**கோவிற் கடவை** - கி. வா. ஜகந்நாதன் 89

**மாருதப்புரவீகவல்லி** - மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் 92

**மாவை முருகன் கவிப்பூங்கொத்து** 99

**சித்திர கவி** - திரு. அ. சின்னத்தம்பி 102

**மாவை நகர் முருகவேள் பதிகம்** - க. சோமசுந்தரப் புலவர் 103

**மாவைக் கலிவெண்பா** - ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் 110

**மாவைச் சுப்பிரமணிய தோத்திர விருத்தம்**
- பிரம்மஸ்ரீ சி. கணேசையர் 113

**மாவைக் கந்தன்மேற் கவிதை** 118

**யாழ்ப்பாண வைபவ கௌமுதி** - ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை 119

**மகா கும்பாபிஷேகம் - 1978** 121

**உற்சவ மூர்த்திகள் கும்பாபிஷேகம் 2002**
- மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் 134



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவைக் கந்தசுவாமி பேரிற் பாடிய ஊஞ்சற் பாக்கள்** 137

**மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்** 140

**வடக்கில் பெருமைபெற்று விளங்கும் மாவிட்டபுரம்**

**கந்தசுவாமி கோயில்** - சைவத்திரு கா. சிவபாலன் 142

**யாழ். குடாநாட்டின் கீர்த்தி மிக்க முப்பெரும்**

**முருக ஷேத்திரங்கள்** - ஊரெழு அ. கனகசூரியர் 144

**தீயவை அகற்றும் மாவையூர் முருகன்**
- புலவர் ம. பார்வதி நாதசிவம் 146

**A Humble appeal** - Maharajasri S. D. Shanmuganatha Kurukkal 148

**கோவில் அமைப்பு மாதிரி வரைபடம்** 157




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போதைய ஆதீனகர்த்தாவின் பாட்டனார்
"இரத்தினக் குருக்கள்" என அழைக்கப் பெறும்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போதைய ஆதீனகர்த்தாவின் தந்தையார்
பிரம்மஸ்ரீ க. துரைச்சாமிக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவை ஆதீனகர்த்தா

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை ஆதீனகர்த்தா, பிரதம குருக்கள்
மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

"மாண்டு மாண்டு பிறந்திட நேரினும் மாதவ!
மற்றொரு பற்றின்றி ஊன்று பாதத்
துறங்கிட வேண்டுமே"

எனும் சிந்தனைக் கனவோடு தினமும் சிவப்பொலிவுடன் நடமாடும் மட்டுவில் தந்த தவச்செல்வன் கா. சிவபாலன் "நேசத்தாலரன் நீள்கழல் போற்றுவார், பாசத்தாற் றுயர் பாரினிலெய்திடார்" என்பதற்கிணங்க நல்வினை, தீவினைகளை அற்பமெனத் தள்ளிவிட்டு சாந்தசொரூபியாக தெல்லிப்பழை துர்க்கையம்பாள் ஆலய வளாகத்தில் மௌனத்தோடும், பணிவன்போடும், சமநோக்குடனும், வையகம் சிவநெறி சார்ந்த சிவதர்மாக்களோடு இனிதே உயர்வு பெறவேண்டு மென்ற சிந்தனையூற்றுகளோடு காட்சிதந்து நிற்பதும் ஓர் தவச்செயலே, இத்தகைய ஞானச்சுடர் பிரகாசிப்பதற்கு சிவபாலனது சிவதர்ம சேவைகளே உந்துசக்தியாக மருவி நிற்கின்றன.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் காரியஸ்தராக துர்க்கையம்பாள் ஆலயத்தில் வெகு காலமாக உடனிருந்து, பணியாற்றி, ஓய்வு நேரங்களில் சமய அறிவுரைகளை அவரிடம் கேட்டறிந்து தக்கதோர் சான்றோனாக வளர்ந்து பாரினில் ஆற்ற வேண்டிய சமயத் தொண்டுகள், சமயாசாரங்கள், அறநெறிகள் என்பனவற்றை ஞாலத்தோரும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற பெருவிருப்பத்தைக் கொண்டு அதன்வழி செயலாற்றும் இப்புண்ணிய தர்மவான், வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்டிருக்கும் புராதன ஆலய வரலாறுகளையும் அழியவிடாது சகலரும் அவற்றை அறிந்து கொள்ளல் அவசியம் என்பதனை நெடுங் காலமாக மனதில் பதித்துக் கொண்டமைகூட ஓர் பாக்கியமே. அதற்கான தேடுதல்களை சேமித்து, செயலில் செயற்பட இப்போ மாவிட்டபுரம் திருத்தல வரலாற்றை நூலுருவில் பதித்து வெளியீடு செய்ய முனைந்திருப்பதும் தக்கதோர் சிவபுண்ணியச் செயலாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகளை தம்மகத்தே சேமித்து வைத்திருக்கும் ஆலயங்களின் தொன்மைகளை சிதைத்தும் தத்தம் இடத்திற்கமையவும், மேலைத்தேய பண்பாடற்ற கலாசாரங்களை முன்வைத்தும், வரலாறுகளை புதுப்புது வியாக்கியானங்களோடு இணைத்தும் சைவசமயப் பண்பாடு, கலாசாரங் களை சீரழிக்கும் வகையில்தான் இக்கால வரலாற்று நூலாசிரியர்கள் தத்தம் இழிதொழிலை முன்னெடுத்து வளர்த்து வருவதை இன்றைய காலங்களில் காண முடிகின்றது. இதற்கு கலைக் களஞ்சியங்களாக விளங்க வேண்டிய பல்கலைக்கழகங்கள் கூட இவர்களோடு அணி சேர்ந்து நிற்பதையும் காணமுடிகின்றது. சைவத்தமிழும், சிவத்தமிழ் சமூகமும் தத்தம் ஆதிசமய ஞானமும், பண்பாடும், கலாசாரங்களும் அழிந்து போகவிட்டால், வருங்காலம் அதுவும் இக்கலியுகத்தில் பாரிய தாக்கமும், சேதமும், அழிவும் நிச்சயமாக வளரும் என்பதில் ஐயமேயில்லை.

இவ்வேளையில்தான் சிவதொண்டன் கா. சிவபாலன் அவர்கள் ஓர் வரலாற்று நூலை, எத்தனையோ சான்றுகளைச் சேகரித்து சைவ உலகிற்கு தரும் புண்ணிய கைங்கரியத்தில் முனைந்து அதை நினைவுபடுத்தி எமது கரங்களிற்குத் தருகின்றார். ஆக்கமும், ஊக்கமும், சிரத்தையுங் கொண்டு நேரகாலங்களையும் பாராது, சிரமங்களையும் பொருட்படுத்தாது அருமையானதோர் மாவிட்டபுரத்தல வரலாற்றுப் பதிவுகளை வெளிக்கொணர்ந்ததும் ஓர் சிவபுண்ணியச் செயலாகவே மதிக்கப்படுகிறது. அவர்தம் தொண்டு அபரிமிதமானது, அவசியமு மானது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களது நெடுங்கால விருப்பமும் இப்போ ஓர்வகையில் நிறைவுபடுத்தப்படுகிறது.

மாவிட்டபுரம் திருத்தல வரலாற்றை மறைத்துவிட வேண்டுமென்ற சிந்தனைகளுக்கு உயிரூட்டி நிற்கும் ஆயர்கள் சிலசமயம் இந்நூலை வாசிக்க ஏக்கங்கொண்டு எதையும் முன்னகர்த்த முற்படுவர். அது கைகூடாத வகையில்தான் கா. சிவபாலன் அவர்களது மாவிட்டபுரம் திருத்தல வரலாற்று நூல் இப்போ வெளிவருகிறது. சைவ உலகம் இதற்கு பெருநன்றிகளை எப்போதும், எந்நேரமும் வழங்கி நிற்கும் என்பது திண்ணம். நூலாசிரியர் கா. சிவபாலன் அவர்கள் நீடூழி வாழ்ந்து நன்னெறிகளின் துணைகளோடு இன்னுமிருக்கும் மாவை திருத்தல வரலாற்று நூல்களை வெளிக்கொணர வேண்டுமென இரந்து, அதற்காக மாவைக்கந்தன் இவருக்கு ஆரோக்கியமான வாழ்வோடு, அறிவுச் சிந்தனைகளையும் வழங்கி ஆற்றுப்படுத்திட திருவருள் காட்ட வேண்டுமென யான் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஓய்வு பெற்ற
### மாண்புமிகு உச்ச நீதிமன்ற
### நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

இன்று இந்த நாட்டின் சரித்திரம் சகதலப்புரட்டர்கள் கைகளில் சிக்கி திரிபுபடுத்தப்பட்டு வருகிறது. தமிழன் கி.பி. பத்தாம் நூற்றாண்டில்த் தான் இலங்கையில் நிரந்தரமாகக் காலடி எடுத்து வைத்தான்; அதற்கு முன்னரே சிங்கள மக்கள் வடகிழக்கில் குடிகொண்டிருந்தனர்; அங்கு வாழ்ந்து வந்த அந்த அப்பாவிச் சிங்கள மக்களை அடித்துத் துரத்தியே தமிழர்கள் நாட்டின் வடகிழக்கைக் கைப்பற்றி இதுகாறும் வாழ்ந்து வந்துள்ளனர்; இனியும் இந்நிலை நீடிக்கக் கூடாது என்றெல்லாம் சிங்கள மக்கள் மனதில் வெறுப்பையும் வெறிக்குணத்தையும் வளர்க்கப் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் சிங்களவர்கள் எனப்படுபவர் ஆதித் திராவிடர் வழிவந்தவரே. பழந்திராவிட மொழிகளுடன் பாளிமொழிச் சார்பால் ஏற்பட்டதே சிங்கள மொழி. மொழி வேறு; இனம் வேறு. இங்கு மொழி வழியில் ஒரு இன வேறுபாட்டை உட்புகுத்தியுள்ளார்கள். விஜயன் பற்றிய மகாவம்ச ஆரியர் கதை கற்பனையே, பௌத்தமதம் வடகிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு காலகட்டத்தில் நிலைத்திருந்ததாலேயே அங்கு பௌத்த மதச் சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதே ஒழிய வடகிழக்கில் சிங்கள மக்கள் பெரும்பான்மையராய் ஒருபோதும் குடியிருக்கவில்லை என்ற சரித்திர உண்மைகளை வெளிப்படுத்த அறிவுடையோர் தயங்குகிறார்கள். இதனால் பொய்கள் உண்மைபோல் உலவி வருகின்றன.

இந்த அணிந்துரை எழுதுவதற்கு முன்னைய தினம் நீலன் திருச்செல்வம் ஞாபகார்த்தப் பேச்சில் இந்தியாவின் தலைசிறந்த புராதன சரித்திரவியலாளர் பேராசிரியர் ரொமீலா தாபர் அவர்கள் ஆரியர், திராவிடர் என்ற இன வேறுபாடு சரித்திரத்தில் காணப்படாத ஒன்று என்றும் அவரவர்கள் தமது சொந்தக் காரணங்களுக்காக உலவவிட்டு வந்துள்ள கற்பனையுரை அதுவென்றுங் கூறினார்.

தமிழர்கள் தங்கள் சரித்திரங்களை ஆவணப்படுத்தாததால் அவர்களின் பூர்வீகம் பற்றிய அறிவு மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆலயங்கள் பற்றியும் அவற்றின் வரலாறு பற்றியும் எம்மிடம் தற்போது இருக்கும் நிரூபணங்களை மையமாக வைத்து அவற்றை ஆவணப்படுத்தி வைத்தல் முக்கியம் என்ற எண்ணம் நண்பர் சிவபாலனுக்கு ஏற்பட்டமையையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். திரு. சிவபாலன் அவர்கள் என் பழைய நண்பர். நான் மல்லாகம் நீதிபதியாக 1982ல் பதவி பெற்ற போதிருந்தே அவரைத் தெரியும். சிவநெறி சார்ந்தவர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு திரு. சிவபாலன் அவர்கள். அவர் மாவிட்டபுரத் திருத்தல வரலாற்றுப் பதிவுகளை வெளிக்கொணரும் வண்ணம் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

நான் சில வருடங்களுக்கு முன் மாவை ஆதீனத்திற்கு சென்றிருந்தபோது மஹாராஜஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவைச் சந்திக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நான் மல்லாகத்தில் நீதிபதியாக இருந்தபோது ஏற்படுத்திக் கொண்ட அறிமுகத்தைப் புதுப்பிக்க இந்தச் சந்திப்பு உதவியது.

மாவைக் கந்தன் கோயிலின் சிறப்புக்களில் ஒன்று என்னவென்றால் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தான் அங்கு ஆதீனகர்த்தாக்களாகவும், பூஜை செய்பவர்களாகவும் விளங்குகிறார்கள்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுடன் சுமார் இருநூறு வருட காலம் தொடர்பு வைத்திருக்கும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இருந்து கொண்டு இந்த இறைபணியில் நண்பர் சிவபாலன் அவர்கள் ஈடுபட்டமை சாலப் பொருந்தியதே.

இந்நூல் ஆவணக் களஞ்சியமாக பெரியோர்களின் பாடல்கள், கட்டுரைகளை உள்ளடக்கிய ஒரு நூலாக வெளிவருகிறது. எனினும் நண்பர் சிவபாலன் அவர்கள் யாழ் மண்ணின் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்கள் பற்றி ஆராய்ந்து அவரின் நீண்ட ஒரு கட்டுரையாக, அவரின் சொந்தப் படைப்பாக யாழ் புராதன ஆலயங்களின் திருத்தல வரலாற்று நூலொன்றை வெளியிட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அது அவரால் முடியும். அப்பாவிபோல் காட்சியளிக்கும் அவர் நினைத்தால் அவரால் முடியாததொன்றில்லை.

நண்பர் சிவபாலன் அவர்கள் நோய்நொடியின்றி பல காலம் வாழ்ந்து சைவத்திற்குந் தமிழுக்குந் தொண்டு செய்ய அம்பாள் அருள் புரிவாளாக!

ஓம் ஃதும் துர்க்காயை நமஹ!

**க. வி. விக்னேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துச் சைவ ஐதீகத்திலும், வரலாற்றிலும் மையப்புள்ளிகளில் ஒன்றாக விளங்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பற்றிய ஒரு குறிப்பு.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்

இலங்கையிலுள்ள முக்கிய முருகன் ஆலயங்களாக கதிர்காமம் முருகன் கோயில், தொண்டமானாற்றுச் செல்வச்சந்நிதி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில். மண்டூர் முருகன் கோயில், உகந்தை முருகன் கோயில், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோயில் முதலியனவற்றை கொள்ளும் மரபுண்டு. கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்களைப் போன்றல்லாது மாவிட்டபுரத்தில் சிவாகம பத்ததிகளுக்கிசையவே பூசைகள் நடைபெறுகின்றன. மாவிட்டபுரக் கோயிலின் மிக முக்கியமான வைபவம் என்று கொள்ளத்தக்கது ஆடி அமாவாசை அன்று மாவிட்டபுரத்து முருகனை கீரிமலைக்கு கொண்டு சென்று அங்கு சமுத்திர கண்டகி தீர்த்தக்கரையில் கொண்டாடப்படும் தீர்த்தமாகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் மகோற்சவ நிறைவு விழாவாகக் கொண்டாடப்படுவது ஆடி அமாவாசை ஆகும். அமாவாசை விரதம் பிடிக்காதவர்கள் தீர்த்தத்தன்று விரதமிருப்பர். வருடாந்த மகோற்சவத்தின் நிறைவாக ஆடி அமாவாசைத் தீர்த்தம் அமையும். யாழ்ப்பாண வரலாற்றில் மாவிட்டபுரக் கோயிலின் தோற்றம் பற்றிய ஐதீகமொன்று ஜனரஞ்சகமாகப் போற்றப்படுவதாகும். அரசிளங்குமரி ஒருத்தி குதிரைமுகத்தோடு பிறந்ததாகவும், மாவிட்டபுரத்திலுள்ள முருகன் ஆலயத்திற்கு வந்து தொழுதால் அக்குதிரை முகம் மாறுமென்றும் நம்பிக்கை இருந்ததாகக் கூறப்படுகின்றது. அதன்படி அவ்வரசிளங்குமரி மாவிட்டபுரத்திலுள்ள முருகன் ஆலயத்திற்கு வந்து முருகனை வணங்கி குதிரை முகம் நீங்கப் பெற்றாளென்று அவ்வைதீகம் கூறும். மாவிட்டபுரம் என்ற சொற்றொடரிலேயே அவ்வைதீகம் பேணப்படுவதாகக் கூறுவர். மா (குதிரை) (முகம்) விட்ட (விடுபட்டதான) புரம் (நகர்) என அது விரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரம் என்பதற்கு கோயில் என்ற கருத்தும் உண்டெென்பது தமிழ் லெக்ஸிக்கன் (Tamil Lexicon) கல்லாடத்தை மேற்கோள்காட்டிக் கூறும். எனவே மாவிட்டபுரம் என்பது குதிரை (முகம்) விடுபட்டுப்போன கோயில் என்ற கருத்தினை உடையது. மாவிட்டபுரத்தைப் பொறுத்தவரை மிகமிக முக்கியமான அம்சம். அது பிராமணர்களால் முகாமை செய்யப்படுவதாகும். யாழ்ப்பாணத்துக் கோயில்களுள் இது ஓரளவு வேறுபாடான முறைமையாகும்.

பிராமணர்களே முகாமையாளர்களாக இருக்கும் யாழ்ப்பாணத்துச் சைவக் கோயில்கள் மிக மிகக்குறைவு. யாழ்ப்பாணத்தில் கோயில்கள் சிலவற்றின் மகோற்சவ காலத்தின் பொழுது மாவிட்டபுரத்துக் குருக்கள் மார்வந்து அவ்மகோற்சவங்களை நடத்தும் மரபு உண்டு. மாவிட்ட புரத்தின் இந்த முக்கியத்துவம் காரணமாக அங்கு பிராமணக் குடும்பங்களும் பல வசித்து வருவதையும் காணலாம். இணுவில், மாவிட்டபுரம் ஆகிய இடங்களிலே இத்தகைய பிராமணக் குடும்பங்கள் உள்ளன.

தீபகற்ப நிலையில் இன்று நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விதந்தோதப்படுவது யாவர்க்கும் தெரிந்ததே. நல்லூர்க் கோவில் திருவிழாக்கள் முன்னர் மாவிட்டபுரக் கோயில் திருவிழாக் காலத்திலேயே நடைபெற்றனவென்பது பற்றிய ஆறுமுகநாவலர் குறிப்பொன்று உண்டு. தெல்லிப்பழையிலுள்ள கோயில்களுள் மாவிட்டபுரம் கோயில், துர்க்கையம்மன் கோயிலும் பெரிதும் பிரசித்தமானவை. ஆடியமாவாசையோடு தீர்த்தத் திருவிழா நடைபெறுவதால் இக்கோயில் தீபகற்பம் முழுவதிலுமே பெரும் பெயர் பெற்றுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைப்பற்றிப் பேசும் பொழுது 1968 இல் அங்கு நடந்த தீண்டாமை எதிர்ப்பியக்கம் வரலாற்றுப் பிரசித்தமானவொன்றாகும். முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் சுந்தரலிங்கம் அக்கோயிலுக்குள் தீண்டப்படாதோர் வருவதை எதிர்த்தார். அந்நிலைப்பாடு யாழ்ப்பாண வரலாற்றிலேயே மிகப் பெரிய தீண்டாமை எதிர்ப்பியக்கமாக மாறியது. யாழ்ப்பாணத்தின் முற்போக்குச் சக்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் சுந்தரலிங்கம் எடுத்த நிலைப்பாட்டினை எதிர்த்தனர். அந்த எதிர்ப்பியக்கத்தின் பிரதான வெளிப்பாடு 'கந்தன் கருணை' என்ற நாடகம் ஆகும்.

இவ்வாறாக சமூக அரசியலில் முக்கியத்துவம் பெறும் இக்கோயில் பக்தர்களின் விசுவாசத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து தீபகற்பம் முழுவதிலுமே முக்கியமானவோர் இடத்தைப் பெறுகின்றது. மாவிட்டபுரக் கோயில் கோபுரம் மிகப் பிரசித்தமானது. இக்கோயில் அமைப்புப் பற்றிய விபரங்கள் யாவற்றையும் அறிந்திலேன். ஆகையால் அவைபற்றி எழுதாது விடுகிறேன். ஆனால் மாவிட்டபுரத் திருவிழாக் காலங்களில் தெல்லிப்பழைக்கு அப்பாலுள்ள கிராமத்தவர்களும் விரதமிருப்பது ஊரறிந்த விடயமாகும்.

மாவிட்டபுரம் பற்றியெழுந்த நூல்கள் பற்றிய விபரங்களும் என்னிடமில்லை. இவ்விடத்தில் வரலாறு சம்பந்தமானவொரு முக்கிய கருத்தினை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன். வரலாறெழுதியதில் (Local History) எனப்படும் உள்ளூர் வரலாறு மிக முக்கியமான வொன்றாகும். நாட்டின் பொதுப்படையான வரலாற்றில் ஓர் அங்கமாக உள்ளூர் வரலாற்றையும், உள்ளூர் வரலாறுகளின் ஒருங்கிணைக்கப் பட்ட வடிவாக நாட்டின் வரலாற்றையும் அறிந்து கொள்ளும் வகையில் வரலாறு அமைதல் வேண்டும். இக்கண்ணோட்டத்திலே நோக்கும் போது எம்மிடம் உள்ளூர் வரலாறுகள் இன்னும் தோன்றவில்லையே என்பதே தெரியவருகிறது. இதனால் கோயில்கள், மடங்கள், ஊர் நிறுவனங்கள் ஆகியனவற்றின் பெருநிலை முக்கியத்துவம் தெரியாமலே போய்விடுகின்றது. மாவிட்டபுரமும் இந்நிலைக்கு ஆட்பட்டுள்ளதென்பது மனவருத்தம் தரும் உண்மையாகும்.

எனது மாவிட்டபுரம் முருகனைப்பற்றிய நூலொன்றினை பதிப்பித்து வெளியிடும் கா. சிவபாலன் யாழ்ப்பாணத்து கோயில்களைப் பற்றி நன்கு அறிந்தவர். திருவாட்டி தங்கம்மா அப்பாக்குட்டியின் நேரடி நிர்வாகத்தில் வளர்ந்தவர். இவர் விருட்சமாக ஓங்கி வளர்ந்து உதாரண புருடராக விளங்குகின்றார். அவருக்கு என் வாழ்த்துக்கள்.

**கார்த்திகேசு சிவத்தம்பி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

"மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள்" என்கிறார் அருணகிரிநாதர். வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுப் பெருமையும் மிகுந்தது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில். ஈழநாட்டில் உள்ள பிரபல முருக ஷேத்திரங்களில் முதன்மையானது. மாவைக்கந்தன் ஆலய திருத்தல வரலாறு மிகவும் நீண்டது, நெடியது. 7ம் நூற்றாண்டு முதல் இன்று 21ம் நூற்றாண்டுவரை முருகப் பெருமானை போற்றிப் புகழ்ந்த எண்ணிறைந்த அடியார்கள் பலர் அமரநாட்டவர்கள் ஆகிவிட்டனர்.

தமிழ் அரசர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளுக்கும், "யாழ்ப்பாணம்" என்ற பெயர் உண்டாவதற்கும் முந்தியது "மாவிட்டபுரம்" என்பார் பண்டிதமணி சி. க. அவர்கள். இத்துணை வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மாவை முருகன் திருத்தலம் பற்றிய நூல் ஒன்று வெளியிட வேண்டுமென்ற எண்ணம் உதித்தது. கடந்த 2009ம் ஆண்டு துர்க்கை அம்பாளின் ஆவணித் திருவோண தீர்த்த உற்சவ நாளில் உதயமானது. இரண்டு மாதங்களுக்கு மேலாக மாவிட்டபுரம் கோயில் சம்பந்தமான நூல்களைத் தேடிய தேடல்கள் கிடைத்தன. வணக்கத்துக்குரிய மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவிடம் அணுகி அனுமதி கேட்டேன். குருக்கள் ஐயா அவர்களும் அனுமதி வழங்கி பல புத்தகங்களைத் தேடித்தந்து எனக்கு உற்சாகமூட்டினார். இவ் அருமையான நூல்களை நான்கு மாதங்களாக வரிவரியாகப் படித்தேன். இவற்றில் குறிப்பு எடுத்து நூல் எழுத முயற்சித்தேன். எதை எழுதுவது எதை விடுவது என்ற சர்ச்சை என் மனதை உறுத்தியது. முருகனை நினைந்து ஒரு முடிவை எடுத்தேன். மாவை முருகப் பெருமான்மீது பேரறிஞர்களும், புலமை மிகுந்த பண்டித வித்துவான்களும் "மொழிக்குத்துணை முருகா என்னும் நாமங்கள்" என அருணகிரியார் போல முருகன் புகழைப் பரக்கப் பரக்க பாடியுள்ளார்கள். எனவே இவர்களுடைய கருத்துச் செறிந்த மிக ஆழம் மிகுந்த செந்தமிழ் இலக்கண மரபுக்கமைந்த விடயங்களை தொகுத்து ஆவணக் களஞ்சியமாக வெளியிடுகின்றேன். இதனால் சில விடயங்கள் கூறியவை கூறலாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இவ்வறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு காலங்களில் பாடியும் எழுதியும் இருக்கிறார்கள். வரலாற்றுப் பெருமை மிக்க மாவை முருகன் ஆலய திருத்தல வரலாற்று ஆதாரங்களையும், ஆவணங்களையும் பாதுகாத்தல் எம்மவர்களாகிய சைவப் பெருமக்களின் பெரும் கடனாகும்.

இக்காலத்தில் சரித்திர வரலாறுகளையும், சான்றுகளையும் மறைக்கப்படும் இந்நேரத்தில் இத்தகைய ஆவணங்களை களஞ்சியமாக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

என் பெருமதிப்புக்கும் வணக்கத்துக்குமுரிய மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா முன்னின்று பல ஆவணங்களைத் தந்து உதவினார்கள். என் நூலாக்க முயற்சிக்கு சுதந்திரமாகச் செயற்பட அனுமதி வழங்கினார்கள். குருக்கள் ஐயா மாவை முருகனுக்குத் தொண்டுகள் செய்துவிட்டு தினமும் மாலைப் பொழுதில் மல்லாகம் பழம்பதி பிள்ளையார் கோயில் முன்றிலில் அமைந்த வீட்டிலேயே தங்குவார்கள். அவரை நாடி அவர் இல்லம் பல தடவைகள் சென்றேன். ஐயா அவர்கள் தமது உடல்நலத்தையும் பொருள் செய்யாது எம்மைக் கண்டவுடன் அன்பாக வரவேற்பார்கள். இது என் தவப் பேறாகும். குருக்கள் ஐயா மாவைமுருகன் திருத்தலத்தை நிர்வகிக்க பெரிய பெரிய கஷ்டங்களை எல்லாம் சந்தித்தவர். இவற்றை எல்லாம் பெரிதாக நினைத்து "நமக்கு கஷ்டம், நமக்கு துன்பம்" என்பதைப் பாராட்டாமல் சைவ உலகின் நன்மையின் பொருட்டு மாவைமுருகப் பெருமானை, மனத்துயர் அகற்றும் முருகப் பெருமானை தினமும் சென்று பூசனை செய்து, வழிபாடு செய்து தொண்டு புரிந்தே வருவார்.

பெரியபுராணத்துக்கு காவிய நாயகன் சுந்தரமூர்த்தி நாயனார் என தெய்வச் சேக்கிழார் பாடியுள்ளார். இதேபோன்று தில்லைவாழ் அந்தணர் பரம்பரையில் வழிவந்த சிதம்பரதல தீட்சிதராகிய மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா அவர்களே இந்நூலின் காவிய நாயகர் ஆவார். மாவைத் திருமுருகனுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த குருக்கள் ஐயா அவர்களுக்கு நன்றி சொல்ல எனக்குத் தகுதியின்மையால் அவர்களை வணங்குகின்றேன். அவசரயுகமாகிய கலியுக தர்மத்திலே இந்நூலை ஒரு பூரணமான தொகுப்பாக யான் கருதவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலுக்கு சிறப்புரை வழங்கியவர்கள் இருவர். இவர்களில் ஒருவர் மேன்மைகொள் சைவநீதியை உலகெலாம் விளங்கச் செய்யும் உச்ச நீதிமன்ற நீதியரசர். மாட்சிமை மிகுந்த ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதியரசர் திரு. க. வி. விக்கினேஸ்வரன் ஐயா அவர்கள் நாவலர் பெருமானின் நீதியைத் தொடர்ந்தவர். நீதியைக் கடவுளாகக் கண்டவர். நீதியரசர் ஐயா அவர்களை அறிமுகஞ் செய்து வைத்தவர் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் ஆவர்.

மற்றையவர் ஈழத்துப் புலமை மையத்தின் தமிழ் பேரறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஐயா அவர்கள். யோகசுவாமிகளின் அருளாசி பெற்று திரு. வி. க. விருது பெற்ற தமிழ் சான்றோன். உலகத் தமிழர் செம்மொழி மாநாட்டின் அழைப்பின் பேரில் கோயம்புத்தூர் சென்று ஈழத்தமிழ் மொழிச் சிறப்பை தமிழ் முழக்கம் செய்த பெருந்தகை. தேமதுரத் தமிழோசையை உலகெலாம் பரப்பியவர். பெருமதிப்புக்குரிய பேராசிரியர் ஐயாவை அறிமுகஞ்செய்து வைத்தவர் தமிழ் மூதறிஞர் பண்டிதமணி அவர்கள்.

இவர்கள் இருவரையும் யான் அறிமுகஞ் செய்து வைக்க வேண்டிய தேவையில்லை. அகில உலகுக்கும் அறிமுகமானவர்கள். தனித்தனியாக இருவருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். மாவை முருகப் பெருமான் இவர்களுக்கு திருவருள் புரிவார். மாவை ஆதீனகர்த்தா குருக்கள் ஐயா அவர்களின் நல்லாசிகள் கிடைப்பதாக.

மேலும் ஒரு ஆங்கில நூல் BARRICADES AT THE ROYAL TEMPLE என்ற பெயரில் GAYDE FONTGALLAND என்பவரால் எழுதி வெளியிடப் பெற்றமை அறிய முடிகின்றது.

மாவைக் கந்தன் ஆலய வரலாற்றுப் பதிவேடுகளை அச்சுப் பதிக்கும் முயற்சியில் பல்வேறு சிரமங்களுக்கும் மத்தியில் இந்நூலை வெளியிட உதவிய கொழும்பு-11, "அனுஷ் பிரின்டர்ஸ்" திரு. கு. அருளானந்தம் அவர்களுக்கு மாவைக் கந்தன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**கா. சிவபாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்



# மாவைக் கந்தசுவாமியார் ஆலய கட்டிய இறுதி வாசகங்கள்

ஸ்ரீ/ரகாணனபுரி மஹாவல்லி கஜவல்லி ஸமேத சிவசுப்ரமண்ய பரமேஸ்வரஸ்ய தேவாலய ஸ்தாபனகர்த்தா பிரபோஹோ மாருதப் புரவீகவல்லி நாமதேய நங்கைஶ்ரீ ஸ"முகா சிவதர்ம பரிபாலன வோதோக்த மஹா பிரதாப மஹாவல்லி கஜவல்லி ஸமேத சிவசுப்ரமண்ய பரமேஸ்வரஸ்ய ஸ்தாபனாசார்ய குருஹு" காஸ்யப கோத்ரோத்பவாய மஹாராஜஶ்ரீ பெரிய மனத்துள்ளார் தீஷிதஸ் ஸ"முஹா.

சிவதர்ம பரிபாலன வோதோகத் மஹாப்ராதாப வீரசூட மஹாவல்லி கஜவல்லி ஸமேத சிவசுப்ரமண்ய பரமே..ஸ்வரஸ்ய பாதார விந்யாத் தியானாதிரூட பரம்பராதித்ய காஸ்யப கோத்ரோத்பவாய மஹாராஜஶ்ரீ குமாரசாமி சபாபதி தீஷிதஸ் ஸ"முஹா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கந்தபுராணக் கவிமலர்கள்

**(நயவு செய்து தினமும் பாராயணஞ் செய்க)**

*திருச்சிற்றம்பலம்*

1. திகட சக்கர செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின் மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

2. உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலினோடு
வச்சிர மருப்பினொற்றை மணிகொள் கிம்புரிவயங்க
மெய்ச் செவிக் கவரி தூங்க வேளமா முகங் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்கர கணபதிக் கன்பு செய்வாம்.

3. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

4. இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னிணைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல் கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவோரே

5. வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவிட்டபுர காலம்

**மா**வைக்கந்தன் திருத்தல வரலாறு ஒன்றை மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் 1965ம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இதன் பிரகாரம் மாவிட்டபுர காலம், அதன் சிறப்பு என்பனவற்றை கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களில் இருந்து அறியலாம் எனச் சுட்டிக் காட்டியுள்ளர்கள்.

ஈழநாட்டிலே பல அரசர்களின் அரசாட்சிக் காலங்களில் சைவத்துக்கும், தமிழுக்கும் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏற்பட்டது. சோழர் காலம், பல்லவர் காலம், பாண்டியர் காலம், வன்னியர் காலம், கண்டி அரசர்களின் காலம் என்பனவற்றில் பல மாற்றங்களைக் கண்டோம். மாவிட்டபுர காலம் 7ம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 8ம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்கின்றனர். இன்றைய கந்தரோடையை பண்டைய காலத்தில் கதிரமலை என அழைக்கப்பட்டது. "உக்கிர சிங்கன்" என்னும் அரசகுமாரன் ஈழநாட்டின் வடபாகத்தை அரசாண்டான். இவன் கதிரமலையைத் தலைநகராகக் கொண்டான். சோழ மகாராசாவாகிய இவரே மாருதப்புரவீகவல்லியைத் திருமணம் செய்தான். இதனால் போலும் மாருதப்புரவீகவல்லிக்கு உதவியாக இருந்து கோயிலைக் கட்டுவித்தான். வல்லிபுரக் குறிஞ்சியாகிய சிங்கை நகருக்கு தமது ஆட்சியை மாற்றிக் கொண்டார். மாருதப்புரவீகவல்லிக்கு மகனாகப் பிறந்தான் பாலசிங்கன்.

இசையிலும், கவிதையிலும் வல்லவனாக விளங்கிய வீரராகவனுக்கு யாழ்பாடிக்கு பரிசிலாக வழங்கினான். இப்பரிசில் வழங்கியவன் பாலசிங்கனே என்பதாகும். யாழ்பாடியாகிய வீரராகவனும், அந்தக்கவி வீரராகவனுமாகிய கவிஞனும் ஒருவரல்லர் எனவும் இவர்கள் இருவருமே வெவ்வேறு காலங்களில் வாழ்ந்தார்கள் என்று அறிஞர்களின் கருத்துக்களால் அறிய முடிகின்றது.

மாவிட்டபுர காலம் ஏழாம் நூற்றாண்டு என்றும் முதல்முறையாக இங்கு முருகனுக்கு ஆறுகாலம் நித்திய பூசைகள் நடைபெற்றதாகவும், மூன்று திருவீதிகளோடு மகோற்சவம் நடைபெற்றதாகவும் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவிட்டபுர தல எல்லைகள்

**வ**ரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு செல்லும் பிரதான நெடுஞ்சாலையில் 10வது மைல் தூரத்தில் உள்ளது. இதன் எல்லைகளாக காங்கேசன்துறைப் பட்டினசபை, தெல்லிப்பழை, மயிலிட்டி, ஊராட்சி மன்றங்கள் ஆகியவற்றை மாவிட்டபுரம் கொண்டிருக்கிறது. காங்கேசன் துறை வீதி வழியாகவும், புகையிரத மார்க்கமாகவும் செல்வார்கள். மாவிட்டபுரம் புகையிரத நிலையத்தில் இறங்கியும் (தற்பொழுது இல்லை) சென்று மாவை முருகனை வழிபாடு செய்யலாம். இதன் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் பலாலி விமான நிலையம் உண்டு. கீரிமலை நன்னீரூற்று மாவிட்டபுரத்துக்கு மேற்கே ஒன்றரை மைல் தூரத்தில் இருப்பது சிறப்பைத் தருகின்றது.

மாவிட்டபுரம் திருத்தலத்துக்கு அருகே, தையிட்டி, வீமன்காமம், வறுத்தலை விளான், கட்டுவன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை, அளவெட்டி, கொல்லங்கலட்டி, பன்னாலை, இளவாலை, கருகம்பானை, நகுலேஸ்வரம், மயிலிட்டி ஆகிய கிராமங்கள் சூழ்ந்து உள்ளன. இதனால் இங்கு வாழும் மக்கள் எல்லாம் மாவை முருகனின் அடியார் கூட்டமாக காட்சித் தருகின்றனர்.

**முருகன் வணக்கம்**

*மருகனே செந்தில் முதல்வனே மாயோன்*
*மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்*
*தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்*
*நம்பியே கைதொழுவேன் நான்.*

-நக்கீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வானளாவும் மேற்கு வாயில் இராஜ கோபுரம்

**யா**ழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமையப் பெற்ற இவ் இராஜ கோபுரம் 74 அடி உயரமாக ஓங்கி உயர்ந்து காணப்படுகின்றது. முருக வழிபாட்டுத் தலங்களில் ஞானப் பெருங் கோயிலாக புதுமைக்கும் புதுமையாக, பழமைக்கும் பழமையாக காட்சி கொடுப்பது இராஜ கோபுரம். வரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தின் அடையாளச் சின்னமாக விளங்குகின்றது. "தூலலிங்கம்" என அழைக்கப்படும் இராஜ கோபுரத்தினால் சிறப்புப் பெற்ற மாவிட்டபுர தலம் பல வரலாற்றுச் சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. "இரத்தினக் குருக்கள்" என அடியார்களால் அன்பாக அழைக்கப்பெறும் சுப்பிரமணியக் குருக்களின் பெருமுயற்சியினால் இராஜ கோபுரம் உருவாகியது. இக்கோபுரத் திருப்பணி வேலைகள் யாவும் இரங்கூன் பண்டாரம் என்னும் பெரியவரால் மேற்கொள்ளப்பட்டன. இரங்கூன் பண்டாரம் எனக் கூறப்படுபவர் அருள்திரு நாகலிங்க தேசிகராவர். இந்த புண்ணியவானால் இராஜ கோபுரத்தைப் பரிபாலிக்க ஒரு அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளையே காங்கேசன்துறையில் அமைந்துள்ள நாகலிங் கேசுவர மடாலய பரிபாலன அறக்கட்டளை யாகும். இந்த இராஜ கோபுரம் மாவிட்டபுரத்துக்கு மட்டுமல்லாமல் ஈழநாட்டுக்கே பெருமை தரும் பெருங் கோபுரமாக மிளிர்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோவிற் கடவை

**மா**வைக்கந்தன் திருத்தலத்தையும் அதனை அடுத்துள்ள பகுதிகளையும் சேர்ந்த நிலப்பரப்புக்கு "கோயிற் கடவை" என்று பெயர் பெறுகின்றது. "கோயிற் கடவை" என்ற நூலை எழுதி மாவிட்டபுரம் பாரதி இல்லத்தில் உள்ள பிரம்மஸ்ரீ இரா. சுந்தரராஜசர்மா அவர்கள் நூலை வெளியிட்டார். இங்கு மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் சிறப்புக்களை எல்லாம் எடுத்துக் காட்டியுள்ளார். மாவை முருகன் காங்கேசன் துறைமுகத்தில் இறங்கிய சரித்திரம் உணர்த்தப்பட்டிருக்கிறது. மாவை முருகன் காங்கேசன் துறையில் தெப்பத் திருவிழாவை நடாத்திய மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் ஐயாவின் சிறப்புக்களை எடுத்துக் கூறியுள்ளார். மேலும் மாவை முருகன் கரந்திருக்கும் செய்தியை சபாபதிக் குருக்களின் கனவிலே முருகப் பெருமான் தோன்றி உணர்த்தியுள்ளார். இதன் பெறுபேறாக கோயிலின் புனருத்தாரணத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விளாங்குளம் என்னும் இடத்தில் இருந்து கருங்கல் எடுக்கப்பட்டு கருங்கற் திருப்பணியாக ஆலயம் கட்டப்பட்டது. ஆனி உத்தர நாளில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இப்பணி 1782ல் ஆரம்பிக்கப்பட்டதாக யாழ்ப்பாணம் கச்சேரியில் கோயிற் பதியில் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

மேலும் முன்னர் "கீரிமலை சிவன் கோவில் திருத்தம்பலேஸ்வரன் கோயில்" என அழைக்கப்பட்டது. இதற்கு சமீபத்தில் கதிரையாண்டவர் கோவிலையும் கட்டுவித்ததோடு, கோவில்களை முறையாக நிர்வகிக்கக் காசிப்பிராமணரான நீலகண்டாசாரியாரின் மூன்றாங்குமரன் வாமதேவா சாரியனையும், அவன் கன்னியாகிய விசாலாட்சி அம்மையையும் அழைப்பித்து அங்கீகாரம் முதலிய செய்ய வேண்டிய பல வசதிகளையும் கொடுத்துதவினான். இவ்விடத்தை மக்கள் "கோவிற்கடவை" என வழங்கலாயினர் என மாவிட்டபுரத் தலவரலாற்று நூலில் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா குறிப்பிடுகின்றார். கோவிற் கடவையே இன்று மாவிட்டபுரமாகக் காட்சி தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆதீன நிர்வாக பரிபாலனம்

***மா***வை ஆதீனம் குருக்கள்மார் பரம்பரைக் கோயிலாக நிர்வாகப் பரிபாலனம் செய்யப்பட்டு வந்து இருக்கிறது. ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள்தான் ஆதீன கர்த்தாவாகவும் பூஜை செய்பவர்களாகவும் விளங்குகிறார்கள். தந்தை வழி, வழி முறையாகவும், முதலாம் தாரத்து மூத்த புதல்வனுக்கு ஆதீன கர்த்தா உரிமை சென்றுள்ளது. கோயில் பரிபாலனம், *1954*ம் ஆண்டு மாவட்ட நீதிமன்ற தீர்மானம் *16608*ம் இலக்கத் தீர்வின் பிரகாரம் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

இரத்தினக் குருக்கள் ஐயாவைத் தொடர்ந்து சிவஸ்ரீ. சு. துரைச்சாமிக் குருக்கள் ஐயா அவர்கள் பரிபாலனம் செய்தார். கோயில் இருக்கும் வளவுக் காணியின் பெயர் **கொவ்வாங்கட்டு வளவு** என்பதாகும். கோயிலுக்குரிய நட்சத்திரம் சுவாதி எனவும் தலவிருட்சம் காஞ்சிமா எனவும் கீரிமலைக் கடல் புண்ணிய கண்டகி தீர்த்தம் எனவும் கொண்டு பெருமை பெறுகின்றது. மாவைத்தலம் இன்று மாவை ஆதீனத்தை நிர்வாக பரிபாலனஞ் செய்து வருபவர் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா அவர்கள். ஆதீனத்தின் பெருமை கொண்டு "**மாவைக் கந்தன் ஆலய திருப்பணிச் சபை**" என்னும் பெயரில் *07-06-1975*ம் ஆண்டிலிருந்து மாவை ஆதீன கர்த்தா தலைமையில் தர்மப் பணிகளையும், புனருத்தாரணத் திருப்பணி வேலைகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குருக்கள் ஐயா அவர்களின் மூத்த மகன் மாவை ஆதீன இளவரசு இரத்தினசபாபதிக் குருக்களும் இளைய மகனும் பக்கபலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவை ஆதீனத்தின் ஆறாவது ஆதீன கர்த்தா

## பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் ஐயா

ஈழ நாட்டிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் விசேடம் உடையது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இவ்ஆதீனத்தைக் கட்டிக்காத்து நற்பணி ஆற்றி வரும் அந்தணப் பெருமக்கள் வைதீக வாழ்க்கை கொண்டவர்கள். இவர்கள் ரிஷி கோத்திரமாக காசிப தோத்திரத்தையும் போதாயன சூத்திரத்தையும் சார்ந்தவர்கள். சிதம்பரம் தில்லை வாழ் மூவாயிரவர் அந்தண முதல்வர்களாக தீட்சிதர்கள் வழிவந்தவர்கள். இவ்வழித் தோன்றல் வழிவந்தவர் மாவை ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள். குருக்கள் ஐயா தமது இளமைக் கல்வியை வடலியடைப்பு, அருணாசல சாஸ்திரிகள், நீர்வேலி சிவசங்கர பண்டிதர் என்போரிடம் வேத சிவாகமங்களையும், தமிழையும் கற்றார். மகாஜனாக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரிகளில் ஆங்கிலத்தையும், கணிதத்தையும் கற்றார்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியின் பின் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்தது. இக்காலத்தில் அந்தணர்களுக்கு எல்லாம் அரசர் போல கொலுவிருந்தவர் இரத்தினக் குருக்கள் என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டிருந்தவர். சாமிக் குருக்கள், சுப்பிரமணியக் குருக்கள் இவர் இந்நிலையில்லாத நில உலகில் 85 ஆண்டுகள் வாழ்ந்தார். குருக்கள் அவர்கள் சமய, சமூக அபிவிருத்திப் பணிகளில் கொண்ட ஈடுபாடு காரணமாக பல பிரமுகர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி இருந்தார். வட இலங்கைக்கு வருகின்ற மகா தேசாதிபதிகள், பிரதமந்திரிமார், வெளிநாட்டு பிரமுகர்கள், மாவை ஆதீனத்துக்கு வழிபட விஜயம் செய்வார்கள். இதனால் ஆதீனத்தாருடன் வரவேற்பு உபசாரங்களை ஏற்றிருக்கின்றார்கள். மாவை ஆதீனத்தின் விருந்தோம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு அன்றும், இன்றும் சைவப் பெரும்பான்மையாக மேலோங்கி நிற்கின்றது.

8ம் நூற்றாண்டில் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியும் அவரின் அமைச்சரான புவனேகபாகுவும். மாவிட்டபுரத்துக்கு விஜயம் செய்தனர். அவ்வேளையில் ஆதீன கர்த்தாவாக விளங்கிய சின்ன மனத்துள்ளார் என்றும் சிதம்பர தீட்சிதர் விருந்து அளித்துள்ளார். அவ் விருந்துபசாரத்தை பாராட்டி அமைச்சர் புவனேகபாகு ஒவ்வொரு வகை உணவுக்கும் ஒவ்வொரு பாடலைப் பாடிப் போற்றி இருக்கிறார்.

### விருந்து

சிங்கையாரிய மகாராசனும், புவனேகபாகு மந்திரியும் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனமுஞ் செய்துகொண்டு அவ்வாலய விசாரணையை அரசாட்சி விசாரணைக்குள்ளாக்கிக் கொண்டு கந்தசுவாமி கோவிலில் வந்து பெரியமனத்துள்ளாரின் குமாரர் சிதம்பர தீட்சிதரின் மகன் சின்னமனத்துள்ளார். விருந்திட உண்டு இளைப்பாறினார்கள். அவ்விருந்து மகாவுசிதமாயிருந்ததினால் புவனேகபாகு அவ்விருந்திற் பரிமாறிய ஒவ்வொரு பதார்த்தத்திற்கும் ஒவ்வொரு பாட்டுச் சொன்னான். அவற்றுட் இருபாடல்களையும் இங்கு காண்போம்.

### வெண்பா

க. இன்னமுத விண்டுவி(ண்)ணோர்க்
கீந்தசெய லன்னதுவாம்
மன்னவனுந் தொக்க வரூதினியு(ம்)
- நன்னரு(ண்)ண
அன்னமளித் திந்நாளி
லாதரவு தந்துநின்ற
சின்ன மனத்தான் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. சின்ன மனத்தான்

செயும்விருந்திற் சாற்றுருசி

அன்னதனை விண்ணோ ரறிந்திருந்தால்

- முன்னலைவாய்

வெற்பதனைக் காவியுய்த்து

வேலைகடைந் தேயுலைதல்

அற்பமெனத் தள்ளுவரே யாம்.

இப்படியே பாட்டுக்களுஞ் சொல்லிக் கொண்டு தேவாலயத்தைப் பற்றிய ஒழுங்குகளும் பண்ணிக் கொண்டு திரும்பினான்.

இவ்வாறாக விருந்துபசார பண்பை மேற்கொண்டு வந்த குருக்கள் அவர்கள்.

இவரது தந்தையாரான இரத்தினக் குருக்கள் 46 ஆண்டுகள் மாவை முருகன் ஆலயத்தில் ஆதீன கர்த்தாவாக விளங்கியவர். பிரம்மஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் அவர்கள் 28-11-1943ம் ஆண்டு ஆதீன கர்த்தா பொறுப்பாளராக மேற்கொண்டு முப்பத்து மூன்று ஆண்டுகள் பரிபாலனம் செய்த பெருமைக்குரியவர்.

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி சைவப் பெருமகனாகிய முதலியார் விசுவானந்த பிள்ளை அவர்கள் உபயமாக குறையாக இருக்கிற வெள்ளிக் கொடித் தம்பத்தை இளவாலை தம்பு கனகரத்தினம் அவர்கள் உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டமை குருக்கள் ஐயா அவர்களின் பெரும் பணியை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிதம்பர தீட்சிகர்கள்

**மா**விட்டபுரம் ஆதீன பூசகர்கள் அனைவரும் தில்லைவாழ் சிதம்பர தீட்சிதர்கள் என்பது அறிய முடிகின்றது. 7ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டுவரை சிதம்பரத்தல தீட்சிதர்கள்தான் பூஜை வழிபாடுகள் செய்தனர். 15ம் நூற்றாண்டு முதல் 300 வருட காலம் சிதம்பரத் தீட்சிதர்கள் தொடர்புகள் அற்றதாக காணமுடிகின்றது. இதனை ஆய்வாளர்களின் ஆய்வுக்கு விட்டுள்ளேன். இதனால் இன்றுவரை ஆதீன பூசகர்களான மஹாராஜஸ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களும் சிதம்பரத்தல தீட்சிதர் ஆவார். எனவே இங்கு பூசை செய்யும் அந்தணர்கள் அனைவரும் தீட்சிதர்கள் என்பதால் பெருமை பெறுகின்றோம்.

# திருத் தொண்டத் தொகை – சுந்தரர் தேவாரம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

- பாடல் 7617



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆதீன வம்சாவழி – ஒரு பார்வை
## சிதம்பரதல தீட்சிதர் வழிவந்தோர்

| எண் | ஆதீன வம்சாவழி பெயர்கள் | காலம் ஆரம்பம் | பூர்த்தி | வருஷம் தொகை |
|---|---|---|---|---|
| 01. | தீக்ஷிதர் பெரியமனதுள்ளார் | 02-06-789 | 30-11-829 | 40 |
| 02. | தீக்ஷிதர் சிதம்பரம் | 30-11-829 | 07-01-870 | 41 |
| 03. | தீக்ஷிதர் சினைமனதுள்ளார் | 07-01-870 | 13-07-915 | 45 |
| 04. | தீக்ஷிதர் சி. பரமேஸ்வரன் | 13-07-915 | 18-08-952 | 37 |
| 05. | தீக்ஷிதர் ப. சுப்ரமண்யர் | 18-08-952 | 23-06-984 | 32 |
| 06. | தீக்ஷிதர் சு. சிதம்பர சுப்ரமணியர் | 23-06-984 | 18-02-1011 | 27 |
| 07. | தீக்ஷிதர் சி. நடனசபாபதி | 18-02-1011 | 11-01-1050 | 39 |
| 08. | தீக்ஷிதர் ந. சிதம்பர நடேசன் | 11-01-1050 | 05-06-1076 | 26 |
| 09. | தீக்ஷிதர் சி. பரமேஸ்வரா | 05-06-1076 | 02-11-1102 | 26 |
| 10. | தீக்ஷிதர் ப. சபாபதி | 02-11-1102 | 21-12-1132 | 30 |
| 11. | தீக்ஷிதர் ச. வாமதேவர் | 21-12-1132 | 29-11-1153 | 21 |
| 12. | தீக்ஷிதர் ச. ஈசானசிவம் (தம்பியார்) | 29-11-1153 | 10-05-1186 | 33 |
| 13. | தீக்ஷிதர் நடராஜ சுந்தரம் | 10-5-1186 | 03-04-1217 | 31 |
| 14. | தீக்ஷிதர் ந. சுவாமிநாதர் | 03-04-1217 | 12-07-1251 | 34 |
| 15. | தீக்ஷிதர் சு. சிதம்பரேஸ்வரர் | 12-07-1251 | 01-11-1289 | 38 |
| 16. | தீக்ஷிதர் சி. நடராஜசிவம் (தம்பியார்) | 01-11-1289 | 07-01-1320 | 31 |
| 17. | சி. நடனசபாபதி | 07-01-1320 | 18-02-1354 | 34 |
| 18. | த. சிவாகம சுந்தரி (மகள்) | 18-02-1354 | 10-03-1374 | 20 |
| 19. | தீக்ஷிதர் ஜம்புநாதர் | 10-03-1374 | 01-05-1404 | 30 |
| 20. | தீக்ஷிதர் ஜ. சபாநாயகர் (தம்பியார்) | 01-05-1404 | 12-09-1414 | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| எண் | ஆதீன வம்சாவழி பெயர்கள் | காலம் ஆரம்பம் | பூர்த்தி | வருஷம் தொகை |
|---|---|---|---|---|
| 21. | தீக்ஷிதர் சுவாமிநாதர் | 12-09-1414 | 03-06-1453 | 39 |
| 22. | தீக்ஷிதர் சு. ஈசானசிவம் | 03-06-1453 | 13-02-1492 | 36 |
| 23. | தீக்ஷிதர் ஈ. பரமேஸ்வரன் | 13-02-1492 | 09-01-1535 | 43 |
| 24. | தீக்ஷிதர் ப. ஹேரம்பர் | 09-01-1535 | 01-06-1577 | 42 |
| | மிலேசர் படையெடுப்பில் தலைமறைவு வாழ்வு 44 வருடம். (கிழக்கே கரவெட்டியிலும், தெற்கே அராலியிலும் தலைமறைவு வாழ்வு) | | | |
| 25. | தீக்ஷிதர் ஷேரம்பர் (இளையமகன், மருமகள்) விசாலாட்சி விஸ்வநாதன் | 19-05-1605 | 12-12-1621 | 16 |
| 26. | தீக்ஷிதர் விஸ்வநாதர் சோமசுந்தரம் | 12-12-1621 | 09-08-1661 | 40 |
| 27. | தீக்ஷிதர் கௌரிசங்கரர் | 09-08-1661 | 21-07-1688 | 27 |
| 28. | தீக்ஷிதர் கொ. சிவசங்கரநாதன் | 21-07-1688 | 09-08-1718 | 30 |
| 29. | தீக்ஷிதர் சி. சுவாமிநாதர் | 09-08-1718 | 10-07-1751 | 33 |
| 30. | தீக்ஷிதர் சு. சபாநாயகம் | 10-07-1751 | 07-08-1771 | 20 |
| | பறங்கியர்கால ஆட்சி அமைதியான மௌன வாழ்க்கை. | | | |
| 31. | தீக்ஷிதர் க. குமாரசாமி | 07-08-1771 | 03-05-1779 | 8 |
| 32. | தீக்ஷிதர் கு. சபாபதிகுரு | 03-05-1779 | 27-12-1825 | 46 |
| | (15 வயதில் தம்பியார்) 1789 ஆனி உத்தரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது | | | |
| 33. | கு. சொக்கநாதக் குரு (மகன்) | 27-12-1850 | 27-12-1850 | 25 |
| 34. | சபாபதி குரு (மகள்) | 27-12-1850 | 27-12-1875 | 25 |
| 35. | வேதநாயகியம்மாள் சாமிக் குருக்கள் | 27-12-1875 | 06-09-1897 | 22 |
| 36. | சா. சுப்ரமண்ய குரு | 06-09-1897 | 28-11-1943 | 46 |
| | 1927ல் ஆனி சுவாதியில் கருங்கல் மூலஸ்தானம் பூர்த்தி செய்து மகா கும்பாபிஷேகம் | | | |
| 37. | சு. துரைசாமிக் குரு | 28-11-1943 | 27-11-1976 | 33 |
| 38. | து. ஷண்முகநாத குரு | 27-11-1976 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பரம்பரைப் பட்டோலை ஓர் ஏட்டுச் சுவடியில் பதியப்பட்டு 915ல் கார்த்திகை மாதத்திலிருந்து பதியப்பட்டு, 1789வரை பதிவுகளுண்டு. பாதுகாத்து வரப்பட்டது. 1990-10-20ம் திகதியில் ஆலயவளாகத்தினுள் இராணுவம் புகுந்ததால் சகல ஆவணங்கள், நூல்கள், ஏட்டுச் சுவடிகள், ஆபரணாதிகள், தட்டுமுட்டு தளபாடங்கள், தேர், வாகனங்கள் அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு அங்கிருந்து உயிர் பாதுகாப்பிற்காக வெளியேறினோம். 1996-05-20ம் திகதியில் ஆலயத்திற்கு அழைத்து சென்ற இராணுவம் அங்கு ஆலய வளாகம் இடிந்தும் நொறுங்கியும் சகல ஆவணங்கள், ஏட்டுச் சுவடிகள், மற்றும் பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டுமிருந்தன. இதில் மேற்குறித்த எமது ஆதீன பரம்பரை ஏடும் மறைந்துவிட்டது. 1789லிருந்து தொடர்ந்து வந்த ஆதீன கர்த்தாக்கள் வரிசைகள் உறுதி மூலம் நியமனம் பெற்றனர். அவ்வுறுதிகளின் நகல் ஆலயத்தில் உள்ளது.

1964ம் ஆண்டில் புலவர் ஜகன்நாதன் அவர்கள் இங்கு வந்தபோது இந்த ஏட்டுச்சுவடியின் விபரங்களையும் எடுத்து வைத்திருந்தார். அதோடு வேறு ஏட்டுப் பிரதிகளது விபரங்களையும் குறிப் பெடுத்திருந்தார். இவற்றிலிருந்து பெறப்பட்டவை என்பதனை அறியத் தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஏழாவது ஆதீன கர்த்தா
# மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

இன்றைய மாவை ஆதீனத்துக்கு ஆதீன கர்த்தாவாக விளங்குபவர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா அவர்கள். இவர் சிதம்பரத் தீட்சிதர் பெரிய மனத்துள்ளார் வழித்தோன்றலாகவும், சபாபதி ஐயர் அவர்களின் பரம்பரையில் ஏழாவது வழித்தோன்றலாகவும் விளங்குகின்றார். முருகன்மீது பக்தியும் பாசமுங் கொண்டு தன்னலமற்ற அரும்பெரும் பணிகளினால் மாவை முருகன் அடிமையாக தொண்டு ஆற்றுகிறார். அரச பிராமணர்களாக காட்சியளித்த "இரத்தினக் குருக்கள்" என அழைக்கப்படும் சாமிக் குருக்கள் இவரின் பாட்டனார். சிவஸ்ரீ. சு. துரைச்சாமிக் குருக்களுக்கும் நாராயணி அம்மையாருக்கும் சிரேஷ்ட புத்திரராக 07-05-1927ல் அவதரித்தவர். கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை கற்றார். சைவப் பெரியார் திரு. விநாயக மூர்த்தி அவர்களே இவரின் முதல் ஆசிரியர். காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, வீமன்காமம் ஆங்கில வித்தியாசாலை, சைவப் பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் தொடக்கிவைத்த திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி என்பனவற்றில் கல்வியைக் கற்றார். சமஸ்கிருதத்தை தந்தையாரிடமும், பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள், மாமனாரான சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் என்பவரிடம் கற்றார். தமிழ் மொழிக் கல்வியை பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் கொக்குவில் குமாரசாமிப் புலவர், பண்டிதர். இ. நமசிவாயம், வித்துவான் க. வேந்தனார் என்போரிடம் கற்றார். ஆங்கிலக் கல்வியை திரு. S. சிவபாதசுந்தரம், M. A., திரு. அம்பலவாணர், M. A, திரு. G. A. இரத்தினவரதர் என்போரிடம் கற்றார். இதனால் தமிழிலும், ஆங்கிலத்திலும், சமஸ்கிருதத்திலும் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராக விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள் ஐயா அவர்களுக்கு உபநயனச் சடங்கை 1943ம் ஆண்டு மாவை ஆதீனத்திலே பெரிய தந்தையாரான சிவஸ்ரீ. குமாரசாமிக் குருக்கள் ஐயா குருவாக நின்று சிறப்புறச் செய்து வைத்தார். 1950ம் ஆண்டு ஐப்பசியில் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் ஐயாவின் தவப்புதல்வி நகுலேஸ்வரி அவர்களுக்கும் ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவுக்கும் திருமணம் நடைபெற்றது. 1954ம் ஆண்டு அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள் ஐயா அவர்கள் ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவுக்கு சிவாச்சாரியார் அபிஷேகம் செய்து வைத்தார். சிவாச்சாரியர் அபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. குருக்களைப் பல்லக்கில் வைத்து அடியார்கள் உலாவந்த காட்சி பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இதே ஆண்டில் மாவை முருகனுக்கு வெள்ளியால் செய்யப் பெற்ற கொடித்தம்பம் நிறுவப்பட்டது. இந்த ஆண்டிலேயே குருக்கள் அவர்களும் கொடியேற்று வைபவத்தை நடாத்தி இரத்தினக் குருக்களுக்கு பின் 19ஆண்டுகள் கொடியேற்றிய பெருமை இவரையே சாரும்.

எழுத்துத் துறையில் முன்னோடியாகவும், மந்திரங்களை உச்சாடனம் செய்வதிலும் வல்லமை பெற்றவராகவும், ஆங்கில மொழியை சரளமாகப் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவராகக் காட்சி தரும் அந்தணப் பெரியோன் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா விளங்கின்றார். மாவை ஆதீன கர்த்தாவின் பணிகளுக்கு மாவை முத்தமிழ் மன்றமும், குரும்பசிட்டி சன்மார்க்க சபையும் பக்க பலமாக இருந்தமை நினைவு கூரத்தக்கன.

கிரியைகளைச் சிறப்பாகச் செய்வதிலும், மந்திரங்களைச் சுத்தமாக உச்சாடனம் செய்வதிலும் வல்லவரான குருக்கள் ஐயா பல மகா கும்பாபிஷேகங்களைச் செய்துள்ளார்கள். இவற்றில் விசேடமாக ஹற்றன் மாணிக்கப் பிள்ளையார் கோவில், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் என்பவற்றைக் குறிப்பிடாமல் விடமுடியாது.

பலவகைச் சிறப்புக்களையும் கொண்ட மாவை ஆதீனகர்த்தா அவர்களும் முகாந்திரம் சதாசிவ ஐயர் ஞாபகார்த்த விழாவின் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் பெரும் சிவாச்சாரியார்கள் மத்தியில் பிரம்மஸ்ரீ. சீதாராம சாஸ்திரிகள் அவர்களினால் "சிவாகம வித்தியா பூஷனம்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்து கலாசார அமைச்சு "விவேக சூடாமணி" என்ற பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

1976ம் அண்டு மார்கழி மாதம் முதல் மாவை ஆதீனப் பொறுப்பை ஏற்ற ஆதீனகர்த்தா இற்றைவரை நடாத்தி வருகின்ற பெருமை இவருக்குண்டு. 1990ம் ஆண்டு அக்டோபர் 20ம் திகதிக்குப் பின்வந்த காலங்களில் குருக்கள் ஐயா பல்வேறு சோதனைகளையும், வேதனை களையும் சந்தித்தார். எத்தனைத் துன்பங்கள் வந்தபோதிலும் மாவை ஆதீனத்தை மகோன்னத நிலைபெற மாவை முருகப் பெருமானை வேண்டுதல் செய்து போராடி வருகின்றார். 1995ம் ஆண்டு யாழ் மண்ணைவிட்டு வடமராட்சியில் சாமியன் அரசடி வைரவர் ஆலயத்தில் இடம்பெயர்ந்து வாழ்ந்த போதிலும் மாவை முருகனையே நித்தம் நினைந்து வாழ்ந்தார். பின்னர் யாழ் வந்ததும் கோவிலை நடைமுறைப்படுத்த பெரும் முயற்சி செய்து 1996ல் பூஜைகளை மேற்கொள்ள ஆவன செய்தார்.

மாவை முருகப் பெருமானுக்கு நித்திய நைமித்திய பூஜைகள் நடைபெறவும், மகாகும்பாபிஷேகப் பெருவிழாவை அடியார்கள் தரிசிக்கவும் மாவை முருகனை அனுதினமும் பிரார்த்தித்த வண்ணம் இருக்கின்றார் குருக்கள் ஐயா.

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அந்தணர் களுக்குள்ளே தனித்துவம் பெற்றவர். செந்தண்மை பூண்டொழுகும் உயர்ந்தோன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண ஏடு


**க**ந்தபுராணம் பிறந்தகமான இந்தியாவிலும் பார்க்க புக்ககமான யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்றது. 11ம் நூற்றாண்டில் கந்தபுராண ஏடு காஞ்சியில் அரங்கேறியது. இதேபோன்று மாவிட்டபுரம் திருத்தலத்திலும் ஒரு கந்தபுராண ஏடு அரங்கேறியது. கொச்சிக் கணேச ஐயர் அவர்களே இங்கு கொண்டுவந்து அரங்கேற்றியதாக அதே ஏட்டில் பதிவு உண்டு. 1990ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதியில் இடம்பெற்ற கலவரத்தால் மாவை ஆதீனமும், அடியார்களும் இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

இதனால் இந்த கந்தபுராண ஏடும், மற்றும் சிற்பம், சோதிடம், வைத்தியம், இலக்கணம், இலக்கியம், ஓவியம், மாந்திரீகம் போன்ற பல்துறைசார்ந்த ஏடுகளும் காணாமல் போய் தொலைந்துவிட்டன.

யாழ் மாவட்ட அரசாங்க செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபராகப் பணியாற்றி, அமரத்துவம் அடைந்த திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் எங்கேயோ இருந்து எடுத்து, திருச்செந்தூர் புராண ஏடு, அகத்தியர் ஆரூடம், மருத்துவ ஏடு என்பனவற்றை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவிடம் ஒப்படைத்தமை போற்றுதற்குரியது. ஆயினும் மாவைக்கந்தன் ஆதீனத்தில் இருந்த கந்தபுராண ஏடுகளை இழந்தமையையிட்டு ஆதீனகர்த்தா மனக்கவலை யுடன் தான் இன்றும் கூறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கார்த்திகைத்
திருவிழா.



திருக்கார்த்திகைத்
திருவிழா காவடியாட்டக்
காட்சிகள்.




வேட்டைத் திருவிழாக்
காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளிக் கொடித் தம்பம்



கீரிமலை நகுலேஸ்வர ஆலய சிற்ப விமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடும்பன் வாகனத் திருவிழா.




தேரோடும் திருவீதியில் அடியார்களின் அங்கப் பிரதிட்டை காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990 முதல் 1997 வரையுள்ள மாவை ஆலயத்தின் இருண்ட காலம். இக்காலம் இராணுவ முகாமாக காட்சி தரும் துன்பியல் காட்சி.



மாவிட்டபுர திருத்தலத்தின் பெரிய சப்பறம் திருவீதி உலா வரும் காட்சி - இறுதியாக 1990ம் ஆண்டுவரை பாவனையில் இருந்தது. இன்று முழுமையாக அழிவுக்கு உட்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்வச கால விழாக்கள்

## தெய்வ ஊர்திகள்

முருகப் பெருமானுடைய தெய்வ ஊர்தி மயில் வாகனம். இந்த மயில் வகைகள் மூன்று உண்டு. ஓங்கார மயூரம், அமரேந்திர மயூரம், அசுரேந்திர மயூரம் என மூன்று வகையான மயில் வாகனத்தில் முருகன் திருவிழாக் காலங்களில் எழுந்தருளி வரும் ஒற்றைக் குதிரை வாகனம் பாயும் இரட்டைக் குதிரை வாகனம், இடப வாகனம் இரண்டும், மகர வாகனம், ஆட்டுக்கடா, கம்ச வாகனம், சிம்மாசனம், கேடயங்கள் மூன்று கோயில் உட்பிரகார வீதியில் அமைந்த வாகன சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் யாழ்ப்பாணத்தில் சிறந்த கலைஞர்களான சிற்பிமார்களினால் உருவாக்கப்பட்டமையாகும்.

## கைலாச வாகனம்

**1982**ம் ஆண்டு இலட்சுமண ஸ்தபதியால் புதிதாக ஒரு கைலாச வாகனம் உருவாக்கப்பட்டது. மகோற்சவ காலங்களில் முருகப் பெருமான் கைலாச வாகனத்தில் எழுந்தருளுவார். மற்றைய காலங்களில் மூன்றாம் வீதியால் அமைந்த வாகனக் கொட்டகையில் வைக்கப்பட்டிருக்கும்.

## திருமஞ்சம்

**1983**ம் ஆண்டு சிற்பசாஸ்திர ஆகம வழிகளுக்கு அமைவாக இலட்சுமண ஸ்தபதியால் புதிய மஞ்சம் உருவாக்கப்பட்டது. இம் மஞ்சத்திலே சண்முகப் பெருமான் தைப்பூச நன்னாளில் திருவீதி வருவார். மேலும் மகோற்சவ காலங்களில் 10ம் திருவிழாவன்று முத்துக் குமார சுவாமியார் எழுந்தருளி திருவீதி உலாவாக பவனி வருவார்.

## சப்பறம்

“சப்பறம்” என்பது “சப்பை இரதம்” என்பதன் திரிபுச் சொல்லாகும். மாவை முருகன் ஆலயத்தில் மகோற்சவம் நடைபெறும் 25 நாட்களில் 23ம் நாள் சப்பறம் இழுக்கப்படுகின்றது. இலங்கையிலுள்ள சைவாலயங்களில் உள்ள சப்பறம் எல்லாவற்றிலும் மிகவும் உயரமானது 66’ உயரமும் 9 தட்டுக்களும் 8 சப்பறச் சில்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தப்பட்ட மிகப் பெரிய சப்பறம் என குறிப்பிடத்தக்கது. சப்பறத்தை இழுப்பதற்கு 108' நீளமுள்ள 6 பெரிய வடம் கொண்டு அடியார்களினால் இழுக்கப் படுகின்றது. மேலும் மகோற்சவ காலங்களில் பளிங்குச் சப்பறம், பூச்சப்பறம், முத்துச் சப்பறம், பல்லாக்கு என்பனவற்றிலும் முருகப் பெருமான் அடியார்கட்கு அருட் காட்சி தருவார். இச்செய்திகளை எல்லாம் மாவை முருகன் அடியார்கள் அறிவார்கள்.

## மா இரதம்

***மா***வை முருகன் தேர் உற்சவத்தின்போது ஐந்து தேர்கள் உலா வருகின்றன. சண்முகப் பெருமானுக்குரிய தேரே பிரதானமானது. இதன் உயரம் 33' உயரம் உடையது. இந்தத் தேரை தென்னிந்திய சிற்பச் சக்கரவர்த்திகளான காரைக்குடி வீரபத்திர ஆசாரியாரால் நிர்மாணிக்கப் பட்டது. 1892ம் ஆண்டு இலங்கையில் முதன்முதலாக "முகோத்தர மகா இரதம்" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. சிற்ப சாஸ்திர விதிகளுக்கு அமைவாக ஒவ்வொரு தளத்திலும் விக்கிரகங்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. ஆலய வரலாறுகளோ அல்லது வரலாற்று நிகழ்வுகளோ இத்தேரில் செதுக்கப்படவில்லை.

1956ம் ஆண்டு வீரபத்திர ஆச்சாரிய சந்ததி வழியில் வந்த சோமசுந்தர ஸ்தபதியர் மகன் இலட்சுமண ஸ்தபதியாரின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. தேரின் மேற்பக்கம் சீலைகளால் அலங்கரிக்கப்படுவது சிறப்பு அம்சமாகும். மாவைக்கந்தன் தேரோடும் நாளை முருகனடியார்கள் இன்றும் எதிர்பார்த்த வண்ணமாகவே இருக்கின்றனர்.

மாவை முருகன் மகோற்சவங்கள், திருநடனத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, வேட்டைத் திருவிழா, பட்டுக் குடைத் திருவிழா, சப்பறத் திருவிழா போன்றவை சிறப்பான திருவிழாக்களாகும். வேட்டைத் திருவிழா அன்று உடுவில் வாழ்மக்கள் முத்துக் கவிராஜர் பாடிய பாடல்களைப் பாடுவார்கள்.

மகோற்சவ காலங்களில் ஆறுமுக சுவாமியாரின் திருநடனக் காட்சித் திருவிழா நடைபெறும். இந்த ஐந்தாம் நாள் திருவிழாவைத் தொடக்கி வைத்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தவர்களாவர். திருநடனக் காட்சி திருவிழா உபயத்துக்கு நாட்டுக்கோட்டை செட்டிமார் காங்கேசன்துறையில் ஒரு கிட்டங்கியை எழுதி வைத்துள்ளனர். மேலும் ஒரு தேர் வடிவான விளக்கு ஒன்றையும் உபகரித்துள்ளமையை அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆடி அமாவாசைத் தீர்த்தம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றால் பெருமை பெற்றது மாவைக்கந்தன் ஆலயம். இதன் தீர்த்தமாக விளங்குவது கீரிமலை சமுத்திர தீர்த்தமாகும். இங்கு பூமியின் அடிப்பாகத்திலே நன்நீரும் சமுத்திர தீர்த்தமும் ஊறிச் சங்கமிக்கின்றன. மகிமை பொருந்திய தீர்த்தம் நகுலமுனிவரிற்கு கீரிமுகத்தையும், மாருதப்புரவீகவல்லிக்கு குதிரை முகத்தையும் நீக்கி அழகுற வைத்தது. இத்தீர்த்தம் கண்டகித் தீர்த்தம் எனப் பெயர் பெற்றது. கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானும், மாவை முருகப் பெருமானும் ஒரு வருடத்தில் மூன்று தடவை தீர்த்தமாட எழுந்தருளி அடியார்களிற்கு அருள் புரிவார். மகாசிவராத்திரி, மாசி மகம், ஆடிஅமாவாசை என்பன மிகவும் முக்கிய தீர்த்த உற்சவ தினங்கள் ஆகும். இப்புண்ணியமான புனித தீர்த்தத்தில் பிதிர்களிற்கு இறுதிக் கிரியைகள் இடம்பெறும். தீர்த்தமாட வரும் அடியார்கள் சங்கற்பம் செய்து தீர்த்தம் ஆடுவார்கள், பிதிர்க்கடன் செய்வார்கள், அஸ்தி, கல் என்பனவற்றை இச்சமுத்திரத்தில் இடுவார்கள்.

கடந்த 1990 இற்குப் பின் நாட்டில் நிலவிய யுத்த அனர்த்தம் காரணமாக ஆடி அமாவாசைத் தீர்த்தம் இடம்பெறத் தடையாக இருந்தது. இதனால் மாவை முருகப் பெருமானை வழிபடும் பக்தர்கள் சென்று வழிபட இயலவில்லை. எனவே மாவை முருகப் பெருமானின் "ஞானவேல்" தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் வசந்த மண்டபத்தில் வைத்து, மகோற்சவ காலம் 25 தினங்களும் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. ஆடி அமாவாசைத் தினத்தன்று மாவை முருகனின் "ஞானவேல்" எழுந்தருளச் செய்து "துர்க்கா புஸ்கரணி" தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தம் நடைபெற்றது. 1995ம் ஆண்டுடன் இந் நிகழ்வும் தடைப்பட்டது. மீண்டும் யாழ்ப்பாண மக்கள் வலிகாமம் திரும்பிய பின் மூன்று ஆண்டுகள் கழிய மாவை முருகன் இடப வாகனத்தில் கீரிமலை சென்று திரும்பும்போது விசேட ஊர்தியாக சவாரி மாட்டு வண்டியில் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இதனை தனது உபயமாக மேற்கொள்ளும் "பெரியஅண்ணை" எனும் திரு. சுப்பிரமணியம் குணராசசிங்கம் நினைவுக்குரியவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவ கால வாகன ஒழுங்குகள்

| நாள் | முத்துகுமாரசுவாமி | விநாயகர் | மீனாட்சி சுந்தரேசர் | சண்டேஸ்வரர் |
|---|---|---|---|---|
| 01. | அமேந்திர மயில் | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 02. | ஆட்டுக்கடா | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 03. | மயில் | மயில் | மயில் | சிறிய இடபம் |
| 04. | அன்னம் (கம்சம்) | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 05. | பூச்சப்பறம் | பூச்சப்பறம் | பூச்சப்பறம் | சிறிய இடபம் |
| 06. | யானை | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 07. | ஓங்காரமயில் | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 08. | ஒற்றைக் குதிரை | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 09. | மகரம் | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 10. | மஞ்சம் | ஒருமித்துப் பவனி | இடபம் | சிறிய இடபம் |
| 11. | மயில் | மயில் | மயில் | சிறிய இடபம் |
| 12. | இடபம் | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 13. | அமேந்திரமயில் | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 14. | ஆட்டுக்கடா | யானை | இடபம் | சிறிய இடபம் |
| 15. | கைலாச வாகனம் | ஒருமித்துப் பவனி | | சிறிய இடபம் |
| 16. | பூப்பல்லக்கு | | | |
| 17. | மயில் | மயில் | மயில் | சிறிய இடபம் |
| 18. | இரட்டைக் குதிரை | யானை | இடபம் | சிங்கம் |
| 19. | பூச்சப்பறம் | | | |
| 20. | பூச்சப்பறம் | பூச்சப்பறம் | பூச்சப்பறம் | ஒருமித்து இடபம் |
| 21. | பல்லக்கு | ஒருமித்து | | |
| 22. | பூந்தண்டிகை | ஒருமித்து | | |
| 23. | பெரிய சப்பறம் | (எல்லா மூர்த்திகளும் சப்பறத்துப்பவனி) | | |
| 24. | பஞ்ச இரதம் | அன்று சண்முகப் பெருமானும் எழுந்தருளல். | | |
| 25. | தீர்த்த உற்சவம் | மயில் | யானை | இடபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமடங்கள்

கோயிலின் கிழக்கேயுள்ள வாசலில் சிறந்த மடம் இருக்கிறது. இம்மடம் அடியார்கள் எவரும் எந்நேரமும் தங்கிச் செல்வதற்கு வசதியாக உள்ளது. மகோற்சவ காலம், கந்தசஷ்டி காலங்களில் விரதம் இருக்கும் அடியார்கள் இம்மடத்தில் தங்கியிருப்பார்கள். இம்மடத்துக்கு வடக்கே சுப்பிரமணியர் மடம் இருக்கிறது. கிழக்கு வீதியில் தச்சர் சமூகத்துக்குரிய மடம் இருக்கிறது. தெற்கு, மேற்கு மூலையில் பொது மக்களின் பயன்பாட்டுக்கு உருவாக்கப்பட்ட பருத்தித்துறையார் மடம் இருக்கிறது. தென்கிழக்கு மூலையில் திருநெல்வேலி மக்களால் கட்டப்பட்ட "திருநெல்வேலியார்" மடமும் இருக்கிறது. வடமேற்கு வீதியில் காங்கேசன்துறை மக்களால் கட்டப்பட்ட கார்த்திகை மடமும் வடக்கு வீதியில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலையினால் கட்டப்பட்ட கந்தன் அன்னதான மடமும் இருக்கின்றது. இம்மடங்கள் எல்லாம் மடம் கட்டியவர்களின் பாவனையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தேர், மண்டபத்தோடு அருகே உள்ள மடம் அதற்குத் தெற்கே உள்ள மடம் அடியார்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாக கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோயிலின் தெற்குப் புறத்தில் இசையாளர் மடம் ஒன்று உள்ளது. கோயிலுக்கு வருகை தரும் மங்கள வாத்திய நாதஸ்வரக் கலைஞர்கள் தங்கியிருந்து செல்வதற்கு வசதியாக அமைந்துள்ளது. மகோற்சவ காலங்களில் எல்லாம் இம்மடங்கள் அடியார்களுக்கு சிறப்பாக அன்ன தானம் வழங்கப்பட்டு வருகின்றபோதிலும் நாட்டு நிலமை காரணமாக தடைப்பட்டும் சேதமடைந்தும் இருப்பது வருத்தத்துக்குரிய விடயமாகும்.

தூர இடங்களிலிருந்து நடைபவனியாக, பாத யாத்திரையாக வரும் அடியவர்கட்கு தாகசாந்தி செய்வதற்கு தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப் பட்டு இருக்கின்றன. கோயிலின் கிழக்கே வீமன்காமம் மகாவித்தியாலயமும், தெற்கே தெல்லிப்பளையிலுள்ள இரண்டு இடத்திலும், மேற்கே மாவிட்ட புரம் மக்களின் மாருதப்புரவீகவல்லி தண்ணீர்ப் பந்தலும், வடக்கே காங்கேசன் தொழிற்சாலையின் தண்ணீர் பந்தலினுள் அடியார்கள் தாக சாந்தி செய்கின்றனர். அன்னதானப் பணி போன்று தண்ணீர்ப் பந்தல் பணியும் தடைப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி நிலச் சொத்துக்கள்

1. உச்சிக்காலப் பூசைக்குரிய காணி.
2. இரண்டாம் கால நித்திய பூசைக்குரிய காணி.
3. தேர் மண்டபப்படிக்குரிய காணி.
4. தைப்பூச அபிஷேகத்துக்கு காணி.
5. அர்த்த சாமப் பூசைக்கு காணி.
6. திருவிளக்கு எரித்தலுக்கு - தோட்டக் காணி.
7. நைவேத்தியச் செலவுக்குரிய காணி.
8. நைவேத்திய செலவிற்குரிய தோட்டக் காணி.
9. திருவெம்பாவைப் பூசைக்கு காணி.

மாவைக்கந்தன் ஆலய, நித்திய, நைவேத்திய பூசைக்கு பயன்படுத்தும் ஏறக்குறைய 30 காணிகள் சிறுசிறு துண்டுகள், மானியங்களாக இருக்கின்றன. இக்காணிகள் யாவும் குத்தகைக்கு கொடுக்கப்பட்டு அவற்றின் வருமானம் கோயில் உபயோகத்துக்கு பேணப் பட்டது. ஆயினும் இன்று வருமானம் பெறுவதில் சிரமங்கள் உண்டு.

1782-1901ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தர்ம சாதனமாய் பெறப்பட்ட கோயில்களின் வளாகத்திலுள்ள காணிகள் காலத்தால் முற்பட்டவை.

# வாடகை பெறும் கடைக் கட்டிடங்கள்

கோயிலின் பணிகள் மேம்படுத்துவதற்கான கடைக் கட்டிடங்கள் வாடகைக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாவிட்டபுரம் கோயில் வளாகத்தைச் சூழ பதினைந்து கடைகளும், காங்கேசன்துறையில் நான்கு கடைகளும், சுன்னாகத்தில் ஒரு கடையும் வாடகை தரும் கடைக் கட்டிடங்களாக இருக்கின்றன. இவற்றில் உள்ள காணிகளில் கட்டப்படும் கட்டடம் கோயிலாலும் ஒரு சில கடைகள் நடாத்து வோராலும் கட்டப்பட்டு இருக்கின்றன. கடை வாடகைகளாக வரும் கோயிலின் வருமானச் சொத்துக்கள் மாவை ஆதீனத்தினரால் நேரடி கண்காணிப்பில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன. நம் நாட்டில் உள்ள அசாதாரண சூழல், நாட்டு யுத்தங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் இவற்றின் வருமானங்கள் ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா பெறுவதில் பெருஞ் சிரமங்கள் ஏற்படுவதை அறியமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தன் மீது பாமாலை பாடிய புலவர்கள்

| இல. | பாடல் | பாடியவர் | ஆண்டு |
|---|---|---|---|
| 01. | மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம் | சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் | 1907 |
| 02. | மாவைப் பதிகம் | இருபாலை சேனாதிராய கவிராயர் | |
| 03. | மாவை ஊஞ்சல் | இருபாலை சேனாதிராய கவிராயர் | |
| 04. | மாவைப் பதிகம் | சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் | 1883 |
| 05. | மாவை இரட்டை மணிமாலை | சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் | |
| 06. | மாவைக் கலிவெண்பா | சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் | |
| 07. | மாவைப்பதிகம் | வறுத்தலைவிளான் க. சரவணமுத்துப்புலவர் | 1928, 1940, 1976 |
| 08. | மாவைக்கதிர்காம வடிவேலர் பதிகம் | க. சரவணமுத்துப்புலவர் | |
| 09. | மாவைப்பதிகம் | வறுத்தலைவிளான் க. மயில்வாகனப்புலவர் | 1911 |
| 10. | மாவைக் கந்தர் அகவல் | க. மயில்வாகனப் புலவர் | 1931 |
| 11. | மாவைக்கந்தர் சிங்காரம் | க. மயில்வாகனப் புலவர் | |
| 12. | மாவைப்பதிகம் | க. சரவணமுத்துப்புலவர் | |
| 13. | மாவைக்கதிர்காம வடிவேலர்பதிகம் | க. சரவணமுத்துப்புலவர் | |
| 14. | மாவை ஊஞ்சற் பாடல் | நல்லூர் ம. சரவணமுத்துப்புலவர் | 1842 |
| 15. | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பதிகம் | திரு. வே. அப்பாக்குட்டி | |
| 16. | போற்றித் திருவகவல் | பூநகரி திரு. முருகேசர் கனகசபை | 1887 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 17. | மாவைப்பதிகம் | பூநகரி திரு. முருகேசர் கனகசபை | |
| 18. | மாவை மும்மணி மாலை | கரணவாய் தி. செல்வந்திநாததேசிகர் | |
| 19. | மாவை அந்தாதி | வடகோவை சபாபதி நாவலர் | 1885 |
| 20. | மாவையமக அந்தாதி | தெல்லிப்பழை திரு. தா. மூ. பூ. பொன்னம்பல பிள்ளை | 1889-1940 |
| 21. | மாவை திருவிரட்டை மணிமாலை | தெல்லிப்பழை திரு. தா. மூ. பூ. பொன்னம்பல பிள்ளை | 1887-1962 |
| 22. | ஆறெழுத்துப் பத்து | தெல்லிப்பழை திரு. தா. மூ. பூ. பொன்னம்பல பிள்ளை | 1887- |
| 23. | மாவைப்புராணம் | மாவை குருமணி குருசாமி குருக்கள் | 1913-1965 |
| 24. | மாவைப்பதிகம் | மாவை குருமணி குருசாமி குருக்கள் | |
| 25. | மாவிட்டபுரம் தோத்திரமாலை | திரு. பொ. சபாபதிப்பிள்ளை | |
| 26. | மாவை முருகன் | பண்டிதர். க. சச்சிதானந்தம் | 1952 |
| 27. | மாவை நகர் முருகவேள் பதிகம் | நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர் | |
| 28. | மாவை தோத்திர விருத்தம் | வசாவிளான் ஆசுகவி. கல்லடி வேலுப்பிள்ளை | 1906 |
| 29. | மாவை கந்தரஞ்சலி | வசாவிளான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை | 1906 |
| 30. | மாவை கீர்த்தனைகள் மாவை பதிகம் | மயிலிட்டி சி. வேலுப்பிள்ளை உபாத்தியார் | 1928 |
| 31. | மாவை சுப்பிரமணிய தோத்திர விருத்தம் | வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் புன்னாலைக்கட்டுவன் | |
| 32. | மாவை முருகன் கீர்த்தனைகள் | இறைஒளி. நம. சிவப்பிரகாசம் (இந்து சாதனம்) | 1925 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 33. | மாவிட்டபுரம் தண்டபாணிக்கந்தன் திருப்பதிகம் தோத்திர பாமாலை | அளவெட்டி அருட்கவி. சீ. விநாசித்தம்பி புலவர் | 1967 |
| 34. | மாவைப் பிள்ளைத்தமிழ் | ஏழாலை கலாநிதி பண்டிதர் மு. கந்தையா | 1967 |
| 35. | மாவைக் குறவஞ்சி | விசுவநாத சாஸ்த்திரியார் | |
| 36. | மாவைக்கந்தன் தோத்திர மாலை | திரு. இ. சி. கந்தையா ஆச்சாரி | |
| 37. | மாவை முருகன் கவி பூங்கொத்து | கலாபூஷனம் பண்டிதர் சி. அப்புத்துரை | 1977 |
| 38. | மாவைக்கந்தன் பதிகமும் அதன் உரையும் | தென்மயிலை இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாயம் | 1983 |
| 39. | மாவை முருகன் காவடிப் பாட்டு | மாவை தமிழ் அருவி த. சண்முகசுந்தரம் | 1981 |
| 40. | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பதிகம் | துன்னாலை வடக்கு வே. அப்பாக்குட்டி | 1932 |
| 41. | மாவை மும்மணிமாலை | கரணவாய் பண்டித செல்வந்திநாத தேசிகர் | 1932 |
| 42. | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சொல்லிய தோத்திர மாலை | கைதடி பொன்னம்பலவாணர் சபாபதிப்பிள்ளை | 1913 |
| 43. | முத்தக பஞ்ச விஞ்சதி | சுன்னாகம் முத்துக்குமார கவிராயர் | 1907, 1952 |
| 44. | மாவை சுப்பிரமணியக் கடவுள் பதிகம் | மாவை குருமணி சுவாமி குமாரசுவாமிக் குருக்கள் (செல்லக் குருக்கள்) | 1914, 1965 (2ம் பதிப்பு) |
| 45. | கந்தர் மாவை வெண்பா | செஞ்சொற் புலவர் பண்டிதர் மா. குமாரசுவாமி | 1988 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை முருகன் பற்றிய செய்திகள் இடம்பெறும் நூல்கள்

| இல. | நூல் | பாடியவர் | ஆண்டு |
|---|---|---|---|
| 01. | கைலாசமாலை | முத்துகுமார கவிராயர் | 1939 |
| 02. | திருக்கோணாசலபுராணம் | திருமலை மாசிலாமணி முத்துக்குமாருப் புலவர் | 1970 |
| 03. | சுப்பிரமணிய பராக்கிரமம் | புலோலி நா. கதிரவேற்பிள்ளை | |
| 04. | நகுலாசல புராணம் | மாதகல் ஏரம்பையர் | |
| 05. | நகுலகிரி புராணம் | பிரம்மஸ்ரீ கா. அப்பாசாமி ஐயர் | 1961 |
| 06. | யாழ்ப்பாண வைபவமாலை | மாதகல் மயில்வாகனப் புலவர் | 1953 |
| 07. | நகுலமலைக் குறவஞ்சி | வட்டுக்கோட்டை விஸ்வநாத சாஸ்திரியார் | |
| 08. | யாழ்ப்பாண வைபவகௌமுதி | ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை | 1918 |
| 09. | யாழ்ப்பாண சரித்திரம் | முதலியார் செ. இராசநாயகம் | |
| 10. | யாழ்ப்பாண சரித்திரம் | நாவலர் கோட்டம் ஆ. முத்துதம்பிப்பிள்ளை | 1933 |
| 11. | யாழ்ப்பாண வைபவ விமர்சனம் | வண்ணை ஞானப்பிரகாச சுவாமிகள் | 1928 |
| 12. | இடப்பெயர் ஆராய்ச்சி | திரு. S. W. குமாரசுவாமி | |
| 13. | யாழ்ப்பாண பூர்வீக விமர்சனம் | திரு. கா. மதியாபரணம் | 1927 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 14. | ஈழமண்டல சதகம் (சந்திரமௌலீசர் சதகம்) | உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை புலவர் | 1923 |
| 15. | ஞாயிறு (ஆரியச் சக்கர வர்த்திகள் கட்டுரை) | தெல்லிப்பழை வழக்கறிஞர். வ. குமாரசுவாமி. பீ.ஏ | 1933 |
| 16. | அருளமுதம் | நல்லை ஆதீன வெளியீடு | |
| 17. | அருள்ஒளி | ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வெளியீடு | |
| 18. | மட்டக்களப்பு மான்மியம் | வித்துவான் F.X.C. நடராசா | 1962 |
| 19. | திருச்செந்தூர் புராணம் | | |
| 20. | வையா பாடல் | | |
| 21. | இலங்கை இடப்பெயர் ஆய்வு-1 | கலாநிதி இ. பாலசுந்தரம் | 1988 |

# மாவைக் கந்தன் வரலாறு கூறும் நூல்கள்

| இல. | நூல் | எழுதியவர் | ஆண்டு |
|---|---|---|---|
| 01. | மாவிட்டபுர திருத்தல வரவாறு | மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகக்குருக்கள் | 1965 |
| 02. | கோயிற்கடவை | பிரம்மஸ்ரீ. இரா. சுந்தரராச சர்மா | 1966 |
| 03. | வாழ்வு பெற்ற வல்லி | மாவிட்டபுரம் தமிழருவி த. சண்முகசுந்தரம் | 1962 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை ஆதீன வெளியீடுகள் (கிடைத்தவை)

| இல. | நூல் | பாடியவர் | |
|---|---|---|---|
| 01. | தீப தரிசனம் (திருக்கார்த்திகை) | மாவை ஆதீனகர்த்தா<br>சு. து. ஷண்முகநாதக் குருக்கள் | 1985 |
| 02. | முக்திக்கு வழிகாட்டும் முத்துக்குமரன் | மாவை ஆதீனகர்த்தா<br>சு. து. ஷண்முகநாதக் குருக்கள் | 2008 |
| 03. | தீப தரிசனம் (திருத்தப்பதிப்பு) | மாவை ஆதீனகர்த்தா<br>சு. து. ஷண்முகநாதக் குருக்கள் | 2009 |
| 04. | ஸ்ரீ மஹாலட்சுமி அம்பாள் மகிமை | இளவாலை ஷண்முகநாத இரத்தின<br>சபாபதி சிவாச்சாரியார் | 2005 |
| 05. | மாருதப்புரவல்லி | கலாநிதி க. சொக்கலிங்கம் (சொக்கன்) | 1990 |
| 06. | ஆலயத் திருப்பணிச்சபை மலர் | | 1976 |
| 07. | அஷ்டோத்திர சகஸ்ர மகா சங்காபிஷேக மலர் | | 1978 |
| 08. | தைப்பூச மலர் | | 1977, 1978 |
| 09. | முருக நாம அர்ச்சனைகள் | | 1977 |
| 10. | கந்தசஷ்டி விரதமும், சூரசங்காரமும் | | 1978 |
| 11. | திருப்புகழ் மாலை 1ம் பதிப்பு | | 1978 |
| 12. | ஷண்முகர் சம்புரோஷண கும்பாபிஷேக மலர் | | 1978 |
| 13. | சன்டேஸ்வர நாயனார் புராணம் | | 1993,2002 |
| 14. | மகோற்சவம், இலட்சார்ச்சனை, நவராத்திரி விழா, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், திருவெம்பாவை, மூலவர்தினம், புதுவருடப் பிறப்பு, ஆகியனவற்றுக்கு விஞ்ஞாபனம் அச்சிட்டு ஆண்டு தோறும் வெளிவருகின்றன. | | |
| 15. | கும்பாபிஷேக விழா திருப்பணி வேலைகள் ஆரம்ப மாகும் வேளைகளிலும் சிறப்பு மலர்கள் வெளி வந்திருக்கின்றன. | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைப் பதியில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களும் முருக பக்தி கொண்ட அறிஞர்களும்

1. ஸ்ரீலஸ்ரீ. க. ஆறுமுகநாவலர்
2. வித்துவான் பொன்னம்பலபிள்ளை அவர்கள்
3. குருகவி. பண்டிதர். வே. மகாலிங்கசிவம்
4. பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார்
5. புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி கணேசையர்
6. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
7. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
8. பேராசிரியர் சு. வித்தியானந்தன்
9. அறிஞர். க. சச்சிதானந்தம்
10. முத்தமிழ்மணி. வே. சங்கரப்பிள்ளை
11. தமிழருவி த. சண்முகசுந்தரம்
12. சைவசித்தாந்த வித்தகர். வி. சங்கரப்பிள்ளை
13. கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை
14. இலக்கண வித்தகர். பண்டிதர். இ. நமசிவாயம்
15. அருட்கவி. சீ. விநாசித்தம்பி
16. நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்
17. சைவப் பெரியார் மு. ஞானப்பிரகாசம்
18. கலாநிதி பண்டிதர். மு. கந்தையா
19. செஞ்சொற் புலவர். மா. குமாரசாமிப் பண்டிதர்
20. புலவர். ம. பார்வதிநாதசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவிட்டபுரத் திருத்தலமும் அரசியற் தலைவர்களும்

1. சைவப் பெருவள்ளல் சேர். பொன் இராமநாதன்
2. சேர். பொன். அருணாசலம்
3. சேர். கனகசபை
4. சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி
5. ஜீ. ஜீ. பொன்னம்பலம் Q. C
6. செனற்றர் சு. நடேசப்பிள்ளை
7. S. J. V. செல்வநாயகம்
8. டட்லி சேனநாயக்கா
9. சேர். ஜோன் கொத்தலாவல
10. S. W. R. D. பண்டாரநாயக்கா
11. அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கம்
12. செனற்றர் நாகலிங்கம்

## தேசாதிபதிகளால் பாராட்டைப் பெற்ற மாவை ஆதீனம்

1. புவனேகபாகு அவர்கள்
2. பிரடிறிக் நோர்த் அவர்கள்
3. பிரவுண் றிக் அவர்கள்
4. கலடி கோற் அவர்கள்
5. திரு. நாகலிங்கம் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைக் கந்தன் ஆதீனமும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குப் பின் பண்டிதமணி யாழ்ப் பாணத்தில் கந்தபுராண கலாச்சாரத்தை ஏற்படுத்தியவர். யாழ்ப்பாண கலாசாரம், கந்தபுராண கலாசாரம் என நிரூபித்துக் காட்டியவர் பண்டிதமணி அவர்களே.

கீரிமலைக்கும், மாவிட்டபுரத்துக்கும் நீண்ட தொடர்புடையது. கீரிமலைச் சிவன் கோவிலில் கந்தபுராண படனம் நடைபெற்று வருவது வழக்கம். இங்கு பிரசித்திபெற்ற சிறாப்பர் மடத்திலே அனைவரும் வந்து கூடுவர். பண்டிதமணி அவர்கள் கீரிமலைக்கு வருவதும் சிறாப்பர் மடத்தில் தங்கி இருப்பதையும் ஒரு நியமமாகக் கொண்டவர். இக்காலத்தில் பண்டிதமணி அவர்களின் உற்ற நண்பன் பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்கள் பண்டிதமணி அவர்களை மாவைக் கந்தன் ஆலயத்தைத் தரிசிக்க ஒரு மாலை வேளையில் கூட்டி வந்தார். மாவைக் கந்தப்பெருமானை தரிசனம் செய்தார் பண்டிதமணி. அவ்வேளையில் சாயரட்சைப் பூசையின்போது முருக சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெற்றது. மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவின் இனிமையான குரலில் மெய்மறந்தார் பண்டிதமணி. குருக்கள் ஐயா அர்ச்சனை பூர்த்தி பெற்றுவந்து பிரசாதம் காளாஞ்சி என்பன வழங்கினார். உடனே பண்டிதமணி அவர்கள் குருக்களுக்கு பெருவணக்கத்தைச் செலுத்தி குருக்களின் மந்திர உச்சாடனத்தைப் பாராட்டி, "இந்த இனிமையான குரலை யான் எங்கும் கேட்டதில்லை" எனப் போற்றி பெருமதிப்புக் கொண்டார்.

அன்று முதல் மாவை ஆதீனகர்த்தாவுக்கும், பண்டிதமணி அவர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டது. பண்டிதமணி அவர்கள் மாவைக் கந்தன் ஆலயத்தில் நடைபெறும் மகோற்சவம், விசேட விழாக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராண படன நிகழ்வுகள் போன்ற பல்வேறு விழாக்களுக்கு வருகை தருவதையும் நியமமாகக் கொண்டு இருந்தார்.

இதேபோன்று மாவை ஆதீனத் தொடர்பும் வழமையாக இருந்தது. மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவின் "மாவிட்டபுரத் திருத்தல வரலாறு" என்ற நூலுக்கு பண்டிதமணி வழங்கிய அணிந்துரை பல்வேறு சிறப்புக்களைக் கொண்டு தனித்துவம் பெற்றது. பண்டிதமணி அவர்கள் அமரரானபோது நினைவு மலருக்கு வழங்கிய பிரார்த்தனை உரை யாழ்ப்பாண சைவ கலாசாரத்தை எடுத்து இயம்புகின்றது. மாவை ஆதீனம் பண்டிதமணி போன்ற இந்திய, ஈழத்துப் பேரறிஞர்களை உள்வாங்கி பெருமதிப்பு வழங்கிய பெருமையுடையது. இவற்றுக்கெல்லாம் ஆதீனத்தில் மூலவேராக அமைந்தவர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா என்றால் மிகையொன்றுமில்லை.

**நேரிசை வெண்பா**

*வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட*
*தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி*
*குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்*
*துளைத்த வேல் உண்டே துணை.*

*அஞ்சு முகம்தோன்றில் ஆறு முகம்தோன்றும்*
*வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்*
*ஒருகால் நினைக்கில் இருகாலும் தோன்றும்*
*முருகாஎன் றோதுவார் முன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீதியரசர்கள் சகிதம் அறநிதிய விழாவின்போது.



1981ம் ஆண்டு சென்னை சைவசித்தாந்த மகாநாட்டுக்கு
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து திருமுறை ஊர்வலம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகாநாட்டுப் பந்தலை நோக்கி எழுந்தருளல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1997ம் ஆண்டு மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா தலைமையில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவின் பின்னர் கும்பாபிஷேக மலரை சிவத்தமிழ்ச்செல்வி அம்மா குருக்கள் ஐயாவுக்கு வழங்குகிறார்.



சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்கள் அறக்கொடை விழாவின்போது மாவை ஆதீனகர்த்தா அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைக் கந்தன் ஆதீனமும், சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரும்

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் மாவையம்பதியில் தோன்றியவர். இவருடைய பிறந்த இடம் மாவைக் கந்தன் ஆலய கிழக்கு வாசலில்தான் உள்ளது. அம்மையார் சிறுவயதுமுதல் தமது தாயாருடன் சென்று மாவை முருகனை வழிபாடு செய்யும் புண்ணியம் பெற்றவர். மாவை ஆதீனத்தில் பெருமதிப்புக் கொண்டவர் சைவப் பெரியார் ஆ. க. சின்னத்தம்பு அவர்கள். இவர் மாவை ஆதீனத்தின் மகோற்சவத்தில் வரும் 11ம் நாள் திருவிழா உபயத்தை திறம்பட செய்பவர். சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவின் குடும்ப உறவினரான இவர் தங்கள் குடும்பத்தில் ஒரு தலைமைத்துவத்தைத் தாங்கி நின்று அனைவரையும் நெறிப்படுத்தியவர் எனப் பெருமை கொள்பவர் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார். இவர்களுடைய 11ம் திருவிழா உபயத்தின்போது அம்மையார் பண்டித பரீட்சை எழுதி பண்டிதர் பட்டம் பெற்று பண்டிதையாக வந்தபோது அபிஷேக உபயத்தில் சங்கற்பத்தை மேற்கொண்டார். அவ்வேளையில் "இங்கே ஒரு பிராமணப் பெண் ஒருவர் சங்கற்பம் செய்து இருக்கிறார். இவர் யார்? எனத் தமது தந்தையாரான சிவஸ்ரீ சு. துரைச்சாமிக் குருக்கள் ஐயாவிடம் மகன் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா கேட்டார். இதற்குப் பதலளித்து தந்தையார். "இவர் தான் தங்கம்மா அப்பாக்குட்டி, ஒரு பெரிய பண்டிதை", என தன் மகனுக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அன்றுமுதல் அம்மையாரின் சொற்பொழிவைக் கேட்கும் சந்தர்ப்பம் மாவை அடியார்களுக்கு கிட்டியது.

மாவை ஆதீன மகோற்சவ காலங்கள், விசேட உற்சவங்களில் எல்லாம் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் சொற்பொழிவுகள் இடம்பெறும். மகோற்சவ காலத்தில் அம்மையாரின் கந்தபுராணச் சொற் பொழிவுகள் நடைபெறும். சொற்பொழிவைக் கேட்க ஒரு பெருங்கூட்டம் கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் ஆற்றிய கந்தபுராணச் சொற்பொழிவுகள் நூல் வடிவில் வெளிவந்தது. இந்நூல் சாகித்திய மண்டல விருதினைப் பெற்று அம்மையாருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அம்மையாருக்கு தைப் பூசத்தை முன்னிட்டு நடைபெறும் மாவைக் கந்தன் இலட்சார்ச்சனை விழாவில் 07ம் நாள் உபயத்தை நடாத்தி வருகின்றார்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் நிர்வாக கட்டமைப்பில் வந்த காலத்தில் இருந்து சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் தொடர்பு மேலும் இருந்தே வருகிறது. மாவைக் கந்தன் ஆலயம் கருங்கற் திருப்பணியாக நிறைவேற்றப்பட்டபின் 1815ல் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 1820ம் ஆண்டு துர்க்கை அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1829ம் ஆண்டு முதல் மாவை முருகன் துர்க்கை அம்மன் கோவிலுக்கு எழுந்தருளி வந்து புரட்டாதி மாதத்தில் விஜயதசமியில் மானம்பூ உற்சவம் நடைபெற்று வருகிறது.

இத்தகைய பல்வேறுபட்ட தொடர்புகளால் மாவை ஆதீனமும், துர்க்காதேவி தேவஸ்தானமும் பின்னிப் பிணைந்துள்ளமையை அவதானிக்கலாம். துர்க்கை அம்மன் கோவில் கும்பாபிஷேகமாக இருக்கலாம், அல்லது வேறு விக்கிரகப் பிரதிட்டையாக இருக்கலாம், முகூர்த்த நிர்ணயம் செய்துவருபவர்கள் மாவை ஆதீனமே எனப் பெருமை கொள்கின்றோம். துர்க்கை அம்மன் கோவிலில் மகோற்சவ கால ஒழுங்கு, பத்ததி என்பனவற்றை பிரசித்திபெற்ற அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் ஏற்படுத்தியுள்ளார். மற்றையவை அனைத்தும் மாவை ஆதீனமே முன்னின்று நடாத்தி வருகின்றது. இதன் பெறுபேறாக 1965, 1981, 1997 ஆகிய காலங்களில் நடைபெற்ற கும்பாபிஷேகங்களை எல்லாம் மாவை ஆதீனமே முகூர்த்த நிர்ணயம் செய்து முன்னின்று சிறப்பாக நடாத்தியுள்ளது. துர்க்காதேவி மூலமூர்த்தி விக்கிரகம் மாவையம்பதியில் ஸ்தபதி பெரியசாமி அவர்களால் உருவாக்கப்பெற்ற செய்தியை மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா இன்றும் நினைவு கூருவார். அம்மையாரின் தொடர்பு மாவை ஆதீனத்துடன் இன்றும் வளர்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைக் கந்தன் மகேஸ்வர பூசை தொண்டர் சபை

**மா**வைக் கந்தன் மகேஸ்வர பூசை தொண்டர் சபை மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஶ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் ஐயா தலைமையில் நடைபெற்று வருகின்றது. இதன் பொறுப்பாளராக சிவத்திரு சி. கணேசலிங்கம் அவர்களை மாவை ஆதீனகர்த்தா நியமித்து இருக்கிறார். இவருடன் பணியாளர்களாக திரு. அ. ஆனந்த சிங்கம், திரு. வ. இரத்தினம், திரு. சி. சிவலிங்கம், திரு. பெ. லம்போதரன், செல்வி. இ. சாந்தி, திரு. சு. குகதேவன் என்போர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மகோற்சவ காலங்கள், வெள்ளிக்கிழமைகள், மற்றும் விசேட காலங்களில் ஆலயத்துக்கு வருகை தரும் அடியார்களுக்கு அன்னதானமும், தாகசாந்தியும் வழங்கி வருகின்றமை மிகவும் மகிழ்ச்சிதரும் செய்தியாகும். மாவைக் கந்தன் கோவிலில் தெற்குவீதியிலே அமைந்து இருக்கும் "ஸௌ ஜன்யா" மண்டபத்தில் அன்னதானம் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மகேஸ்வர பூசைக்கு அடியார்களால் வழங்கப்பெறும் பணம், அன்னதானப் பொருட்கள் அனைத்துக்கும் சபையோரால் பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றது. இவ்வொழுங்கினை செல்வி. இ. சாந்தியவர்கள் மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்கது. தற்போதைய பொறுப்பாளராக S. சொரூபன் அவர்கள் நியமிக்கப்பட்டு தனது பணியினை முன்னெடுத்துச் செல்வதையும் காணமுடிகிறது, பாராட்டுக்குரியது. மேலும் ஆண்டு தோறும் வரவு, செலவு அறிக்கைகள் வெளியிடப் பெற்று புத்தக வடிவில் அடியார்களுக்கு கிடைக்கின்றன. மகேஸ்வர பூசைத் தொண்டர் சபைப் பொறுப்பாளர் திரு. சி. கணேசலிங்கம் அவர்கள் அண்மையில் சிவபதம் எய்தியுள்ளார். இத்துக்ககரமான செய்தியை மாவை ஆதீனகர்த்தா "சிறந்ததோர் தொண்டன் அஸ்தமன மானார்" என்று தமது கருத்தை கவலையாக வெளிப்படுத்தியுள்ளார். மகேஸ்வர பூசை தொண்டர் சபையில் பல தொண்டர்கள் இணைந்து இப்பணியைச் சிறப்பாக அற்றிவருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற நூலில்

'மாயாவாத தும்ச கோளரி', மேலைப் புலோலி மகாவித்துவான்'

நா. கதிரவேற்பிள்ளை அவர்கள் வழங்கிய

# மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி

**சு**வர்க்க லோகத்துள்ள சந்தானம், அரிச்சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐந்து தருக்களின் தழைகளை உண்ணுதற்குக் கைநீட்டி முரித்து முழங்கும் யானைச் சேனைகளை யுடைய **கலிங்க தேயத்து** அரசன் ஒருவன் இருந்தான். அவன் அரிய தவத்தால் பெற்ற புத்திரி பேரழகினையுடைய **கனக சுந்தரி** யென்னும் பெயருள்ளாள். அவள் தல, தீர்த்த, மூர்த்த சேவையை விரும்பிப் பல தலங்களைத் தரிசித்தும், தீர்த்தங்களில் தோய்ந்தும் மூர்த்திகளைப் பூசித்தும் வருவாளாயினள். செந்தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலிலுள்ள தாம்பிரவன்னி நதித்துறையிலே ஆடுதற்கு வந்தாள். அங்கு ✻ பஞ்சாக்கினி காரியங்களையும் நீக்கிப் பஞ்சப் பொறிகளையும் அவித்து, ✻ பஞ்சாக்கினி நடுவினின்று அரிய தவத்தைச் செய்யாநின்ற **அயக்கிரீவ** முனிவரைப் பார்த்து நகைத்தாள். அது கண்ட முனிவனார், "மங்கையே! நம்மை அவமதித்து நகைத்தனை, அதனால் நீ வரும் ஜனனத்திற் பலரும் இகழவருங் குதிரை முகத்தைக் கொள்ளுதி. இதுவே நின்னகைக்குப் பிரதிபலனாகும்" என்று சாபமிட்டார்.

**கனக சுந்தரி** முனிவர் சாபத்தைக் கேட்டு வருந்தி, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, **திரு பரம்**பொருளாகிய சண்முகக் கடவுளை நினைத்து, இரவு, பகல் என்னும் இருகாலத்தும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் **முக்குற்றமும்** அகற்றி, மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் **நாற்கரணங்களையும்** அடக்கி, ஐந்தக்கினி நடுவினின்று, **ஆறெழுத்தையும்** உச்சரித்து **ஏழ் பவக்கடலையுஞ்** சுவற்றி இயமம், நியமம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் **எட்டுறுப்புடைய** சிவயோகத்தினால் **நவபெரும்** "**புவனமும்** வந்து தொழ வீற்றிருக்கும் ✻**தசகாரியத்** தாபதரே! நுண்ணறி வுடையராய் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்றமை தேவரீர் அறிந்ததேயன்றோ? அடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதுரைத்த குற்றத்தைப் பொறுத்துச் சாபம் நீங்கும் வழியை அருள்கவென்று பிரார்த்தித்தாள். முனிவரும் மனமிரங்கி "மடநல்லாய், கடல் துறைத் தீர்த்தம் ஆடுங்காற் கந்தப்பெருமான் திருவருளால் அகலும்" என்றார்.

பின்னர், கனகசுந்தரி இறந்து, மறுபிறப்பிலே உலகமெல்லா வற்றையும் பொதுவறப் புரந்த மதுரை மன்னவன் **உக்கிரப் பெருவழு**திக்குப் புத்திரியாகப் பிறந்தாள். அக்காலத்தில், மிக்க அழகுடன் விளங்கினாளாதலின் அவளுக்கு ✳ **அங்கசுந்தரி** யெனப் பெயரிட்டுத் தாய் தந்தையர் அருமையாக வளர்த்தனர். சிறிது காலஞ் செல்லவும் முனிவரிட்ட சாபந் தொடுதற்கு ஆரம்பித்தது. புழுக்கள் வேட்டுவனாகவும், வண்டுகள் மயிர்க் குட்டிகளாகவும் மாறினாற்போல் அங்கசுந்தரி குதிரைமுகங் கொண்டாள். தாய், தந்தையர்களாகிய அரசனும், அரசியும் வருந்தித் துக்க சாகரத்தில் மூழ்கினர். அப்போது, அசரீரித் தெய்வம் "நுங்கள் மகள் **குதிரை முகத்தை** விட்டு நல்ல முகம் பெற வேண்டுதலாயின் கடலிலும், நதியிலும் மூழ்கி வருவாளாக" என்று முழங்கிக் கூறியது. அதுகேட்ட, அரசனும், அரசியும் மன முவகையுற்றிருந்தனர். சில வருடங்கள் கழிந்ததும், மந்திரிகளையுஞ் சேனைகளையும் சேர்த்துத் தோழியர்களுடன் தன் மகளைத் தீர்த்தமாடுமாறு அரசன் அனுப்பினார்.

**அங்கசுந்தரி** பாண்டி நாடு, சோழ நாடு, தொண்டை நாடு, சேர நாடு முதலிய தேசங்களிலுள்ள தீர்த்தங்களிலாடி, ஈழநாட்டிற்குச் சென்று **இந்து சமுத்திரம்** என்னும் மகேந்திரக் கடலில் குளித்து, பக்கத்திலே ஏமகூடம் எனப் பெயரிட்ட சுப்பிரமணிய துவாத சாந்தத் தலமாகிய கதிர்காமத்திற் சென்று, அங்குள்ள மாணிக்க கங்கையில் முழுகி, கதிரைவேற் பெருமானை அன்புடன் துதித்துக் கண்ணீர் விட்டாள். "வடகோடியிலே கடற்கரையில் திவ்விய தீர்த்த மொன்றுளது. அங்கு சென்று காங்கேயனை அன்புடனினைந்து முழுகுவையேல் அகலும்" என்று அசரீரி கூறிற்று. **அங்கசுந்தரி** அன்புடன் மகிழ்ந்து வடகடல் துறையடைந்து யாழ்ப்பாணத்திலுள்ள **நகுலகிரி**யின் அருகே கடற்கரையிலூறிப் பெருகுந் தீர்த்தத்திற் கந்தக் கடவுளை எண்ணி முழுகினாள். உடனே **குதிரை முகம்** நீங்கிற்று. அரசகுமாரியும், மந்திரிமார்களும், சேனைகளும், தோழியர்களும் யாவரும் பெரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதமும், உவகையும் அடைந்தனர். அவள் தந்தையாகிய **உக்கிரப் பெருவழுதிக்கு** அறிவித்து, கந்தக் கடவுளின் திருவருளினாலே, நீங்கினமையால் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்ய விரும்பி **கந்தராலய** மொன்று செய்வித்து, மதில் முதலியனவும் வகுப்பித்து, அவ்வூருக்குக் **குதிரைமுகம் விட்டபுரம்** என்னுங் காரணம் விளங்குமாறு **மாவிட்டபுரம்** எனப் பெயருஞ் சூட்டி, சுப்பிரமணியத் திருவுருவம் ஒன்று சிற்பலக்கணம் வல்லாராற் செய்வித்து, அங்கு கடல் வழியாக வருவித்து இறக்கப்பட்டமையால், அக்கடல் துறைக்குக் **காங்கேயன்துறை**யெனப் பெயருமிட்டனள். அத்திருவுருவத்தைச் சுபவோரையிலே பிரதிட்டை செய்வித்து, பூசித்தல், தொண்டு செய்தல் முதலியவற்றிற்குத் தன்னாட்டினின்றும் **ஆதி சைவப் பிராமணர்களையும்,** சைவ வேளாளர்களையுங் குடியேற்றிக் கந்தன் திருவருள் பெற்று அங்க சுந்தரி கட்டழகுடையவளாய் மதுரை சென்றாள். இதுபோலும் மாவிட்ட புரத்திலுள்ள அத்தீர்த்தம் தன்னின் மூழ்கினாரது கொடு நோய்களைப் பரிகரித்து வரல் கண்கூடே, தக்கிண கைலாய மான்மியமும் இதற்குப் பிரமாணமாகும்.

அங்கசுந்தரியின் குதிரை முகத்தை நீக்கிக் காங்கேய மூர்த்தியாக விளங்கலால் **மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தி** யெனக் கந்தக் கடவுளை உலகம் போற்றி நிற்கும் என்க.

## திருச்செந்தூர்ப் புராணம்

விதித்த சாபத்தைக் கனகசுந்தரியெனுமெல்லிய றுயரோடுந்
துதித்து நீபகர்கொடு மொழிதவிர்பகற் சொல்லுதியெனலோடு
மதித்திருந் தயக்கிரீவனு மவண்முகம்பார்த்து மாதவனாபி (னம்
யுதித்துளானுக்குப் போந்தலைவருதலை யுன்னிநோற்று ளன்முன்

புக்குமச் சனனச்சுபை போயபின்புவி பொதுவறக்காக்கு
முக்கிரப் பெருவழுதி பாலுதித்தனவொளி வனப்புறுமேனி
மிக்கவங்க சுந்தரியெனும் பெயரொடும் விளங்கினள்பரிபோன்று
தக்கமா முகமாயினள் வழுதியுஞ்சஞ்சலத் துடன்சார்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீர்த்த மாலை**

கங்கையின் மூழ்கினும் பேய்ச்சுரைக் காகங் கதிப்பிலிதிற்
சங்கையி லென்ற தரவுரை சாயத் தலத்தருய்ய
மங்கையுந் தோயக் குரமுக மோட்டிய வார்கிரிவேள்
கங்கையன் தீர்த்த நகுலத்தி னாகு மறிமின்களே.

மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தயே நம:

❋ பஞ்சாக்கினி காரியங்களாவன - இராகம், வெகுளி, காமம், பயம், தீபனம் என்பன. ✷ பஞ்சாக்கினி மத்தி - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நான்கு திசைகளிலும் மூட்டப்பட்ட அக்கினியும், நடுவே சூரியாக்கினியுமாகிய ஐந்தக்கினியின் நடு.

✷ தசகாரிய மாவன - தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவ தரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. அது ப்ரதமம் தத்வரூபந் த்விதீயந் தத்வதர்சநம், த்ருதீயந் தத்வ சுத்திஞ்ச சதுர்த்தந் சாத்மரூபகம், பஞ்சகமாத்ம தர்சயந்து ஷஷ்டமஞ்சாத்ம சோதநம், சப்தஞ் சிவரூபந்து காகமச் சுலோகத்தாலுணர்க இதனையே "இரண்டினி லைந்திலாறி லேழினி லெட்டுத் தன்னிற். றிரண்டிரண் டொன்றதாகத் திகழொன்பான் பத்துத் தன்னி, லிரண்டிலாப் பேறுதன்னி லிருத்தியபத்தோ டொன்றிற், றிரண்டெழு முபதேசங்கள் சிவஞான போதஞ் சித்தி" என்னும் ஆன்றோர் வாக்கும் வலியுறுத்திற்று.

✳ மாருதப்புரவீகவல்லி யென்னும் பெயருடையாளென்றும், உக்கிர சோழ மகாராசாவின் குமரி யென்றுங் குட்ட நோயால் பீடிக்கப்பட்டா ளென்றுஞ் சிலர் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவையில் அருள்பாலிக்கும் கோயிற் கடவை வெள்ளி வேலவன்

ஒன்பதாவது நூற்றாண்டின் முதற்பகுதியில் வரகுணபாண்டியன் மதுரையிலிருந்து பாண்டி நாட்டை அரசு புரிந்து வந்தான். அக்காலத்தில் அவன் ஒருமுறை இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாக இலங்கையின் வடபாகத்தில் வந்திறங்கி, சிங்களத் தலைநகருக்குச் சென்று, கடும்போர் விளைத்து, சிங்கள அரசனைப் போரில் வென்று, அவனிடத்திருந்து திறை பெற்றுக்கொண்டு தென்னாடு திரும்பினான்.

இதற்குமுன் இலங்கையின் வடபாகமாகிய யாழ்ப்பாணம் முதலிய பகுதிகள் சிற்சில காலங்களைத் தவிரச் சிங்கள மன்னரின் ஆதீக்கத்தின் கீழ் இருந்தன போலும்; ஆனால் வரகுண மன்னன் வடஇலங்கையில் தனது படையோடு இறங்கியதும் அங்கு சிங்களச் சேனையோடு பொருதி அதனை வென்றான்.

இந்நிகழ்ச்சி குறித்து அக்காலத்தில் அவனைப் பற்றிப் பாடிய செய்யுள் ஒன்று இறையனார் அகப்பொருளில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுகின்றது. "மன்னேரழிய மணற்றி வென்றான்" எனக் குறிப்பிடப்பட்டது. இந்நிகழ்ச்சியையே யாம் இதனின்று யாழ்ப்பாணத்துக்கு 'மணற்றி' என்ற பெயர் வழக்கிலிருந்து வந்ததெனத் தெரியவருகிறது. அன்றியும் "மணற்றிடர்" என்று ஒரு பெயர் இருந்ததென யாழ்ப்பாண வைபவமாலையிற் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதனாலே யாழ்ப் பாணத்து ஒரு பகுதியை "வெலிகம" எனச் சிங்களவர் அழைத்தனர் போலும், சிங்களத்தில் வெலி என்பதற்கு மணல் என்பது பொருள். கம என்றால் ஊர். இச்சிங்களச் சொல்லே பிற்காலத்தில் வலிகாமம் என மருவியது.

வரகுணபாண்டியன் காலத்துக்குப்பின் வடஇலங்கைப் பகுதி சிறிது சிறிதாகச் சிங்களவர் கையினின்றும் அகன்று ஒரு தனி நாடாக விளங்குவதற்கு வேண்டிய நிலையை அடைந்து வந்தது. பத்தாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாம் பராந்தகசோழன் இலங்கையின்மீது படையெடுத்து வந்து, தனது சேனையோடு ஊர் காவற்றுறையில் இறங்கினான். அப்பொழுது வடஇலங்கையிலிருந்து சிங்களச் சேனைக்கும், பராந்தகன் சேனைக்குமிடையில் பெரும் போர் நிகழ்ந்தது. இப்போர் நிகழ்ந்த இடம் மாவிட்டபுரத்திலுள்ள வளவர்கோன் பள்ளம் என்பர் முதலியார் இராசநாயகம் அவர்கள். இப்போரிலே சோழ அரசனின் சேனைத் தலைவனாகிய சிறியவேலன் என்பவன் உயிர் நீத்தான். எனினும் சோழன் மனம் சலிக்கவில்லை. அவன் நேராகச் சிங்களத் தலைநகருக்குச் சென்று சிங்கள அரசனை வென்று திரும்பினான். இந்தக் காலத் தொடக்கத்தில் வடஇலங்கையில் தமிழர் செல்வாக்கு ஓன்றுபட்டதாய் நிலவியிருந்தது. அதனால் தமிழ்ப் பொதுமக்களன்றி, அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வடஇலங்கைப் பகுதிகளில் மாடிகள் அமைத்துக் குடியேறினர். மாவிட்டபுரப் பகுதியிலுள்ள வளவர்கோன் பகுதியிலும் இவர்கள் குடியேறினர்.

இஃது இவ்வாறிருக்க, சோழ நாட்டிலே இருந்த தேசாதிபதி ஒருவனுக்கு மாருதப்புரவீகவல்லி என்னும் குமாரத்தி ஒருத்தி இருந்தாள். அவளைக் குன்மநோய் என்னும் தீராத நோய் பீடித்திருந்தது. அங்குள்ள வைத்தியர் ஒருவராலும் அந்நோயை மாற்றிக் கொள்ள முடியவில்லை. அதனால் தீர்த்த யாத்திரை செய்து அதனை மாற்றிக் கொள்ள உறுதிகொண்டாள். தன் ஊரினின்றும் புறப்பட்டு அங்குமிங்கும் சென்று தீர்த்தமாடித் திரிகையில் சாந்தலிங்கம் என்ற சந்நியாசி அவளைக் கண்டனன். அவள் நிலையைக் கண்டதும் இவ்வியாதி பண்டிதர் ஒருவராலும் குணமாக்கத் தக்கதன்று: நீ இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகந்தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலை என்று ஒரு மலை உண்டு. அங்கே உவர்ச்சலமத்தியில் சுத்ததீர்த்தமும், மலைஅருவித் தீர்த்தமும் கலந்த உத்தம தீர்த்தமொன்றுண்டு. உலகத்திலுள்ள எல்லாத் தீர்த்தங்களிலும் முக்கியமானது; அதிலே போய் நீராடிச் சில காலம் தங்கி இருந்தால் சுகமடைவாய் என்று சொன்னனன். அதைக்கேட்டு மாருதப்புரவீகவல்லி, செவிலித்தாய், பணிப்பெண், போர் வீரர் முதலியோர் சூழப் புறப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலையில் வந்திறங்கினாள். அங்கிருந்து வளவர் கோன் பள்ளி இருக்குமிடத்திற்கு அணித்தாய் ஓரிடத்தில் பாளயம் போட்டுக் கொண்டிருந்தாள். அவள் இருந்த இடத்தைப் பிற்காலத்தவர் குமாரத்தி பள்ளம் என அழைப்பர். நாள்தோறும் அவள் கீரிமலையில் தீர்த்தமாடி, அதன் பயனாகக் குன்மநோய் நீங்கப் பெற்றாள்.

இவ்வாறு தன்னை நெடுங்காலம் வருத்திய நோயினின்றும் நீங்கிய அவள் தான் பாளயம் போட்டிருந்த இடத்தில் சில காலம் தங்கிவிட்டாள். அவ்வாறு தங்கியிருக்கும்போது அவள் தனது இருப்பிடத்திற் கணித்தாயுள்ள இடங்கள் தோறும் சென்று அங்குள்ள காட்சிகளைப் பார்த்து உலாவி வருதல் வழக்கம். ஒருநாள் வழக்கம்போல் கோவிற் கடவை என்னும் பகுதிக்கு உலாவப் போனாள். இதுவே இப்போது மாவிட்டபுரம் என வழங்கப்பெறும். (மாவிட்டபுரத்திற்கு அருகாமையில் இன்றும் பட்டிக்கடவை என்னும் பெயர் கொண்ட ஊர் உண்டு) அப்பகுதியில் செழிப்புற்று அடர்ந்து வளர்ந்தோங்கியிருக்கும் மா, பலா, வாழை, கமுகு முதலிய சோலைகளும் வெற்றிலை, வள்ளிக்கொடி முதலிய கொடிகள் வரிசை வரிசையாய் நின்று திகழும் காட்சியும், நெருங்கிக் குளிர்மையாய் வளர்ந்த கதிரின் பாரத்தால் சாய்ந்துநின்று அங்கு வீசும் தென்றலின் அசைவினால் ஒன்றோடொன்று உராய்ந்து கலகலக்கும் தினையும் அவள் கவனத்தை ஈர்த்தன. இவ்வழகிய காட்சியைக் கண்ணுற்றுக் கொண்டு அவள் அடிமேல் அடி வைத்து உலாவி வருகையில் அங்கு ஓர் அரசமரத்தடி நிழலில் குறிஞ்சிக் கிழவோனாகிய முருகப் பெருமானுக்கு பெரியவர் ஒருவர் விளக்குவைத்து வழிபாடாற்றிக் கொண்டிருந்தார். அதனைக்கண்டு அவளும் உடனே மெய்சிலிர்க்க, நாத்தழுதழுக்க முருகன்மீது உள்ளன்புருகித் தன் இரு மலர்க் கரங்களையும் தலைமேற்குவித்து வணங்கி நின்றாள். சில நேரத்தின் பின் அப்பெரியார், வழிபாட்டை முடித்துக்கொண்டார். உடனே அவள் அப்பெரியாரை அழைத்து "பெரியீர்! தங்கள் பெயர் யாது? இக்கோயில் எழுந்த வரலாறு யாது? அவற்றைச் சிறிது எடுத்து எனக்கு விளம்புமின்" என்று கேட்டாள். அதற்கு அப்பெரியார் அகமகிழ்ந்து புன்னகை பூத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அம்மையே! அடியேன் பெயர் சடையன். இங்கு வதியும் வேளாண் குடியிற் பிறந்தேன். முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இப்பகுதியைக் கோயிற்கடவை என்பர். தொன்று தொட்டு இவ்விடத்தில் முருகனின் வெள்ளிவேலாயுதத்தை வைத்துப் பரம்பரை பரம்பரையாக வணங்கி வருகின்றோம். எமது தோட்டம் முதலியவற்றுள் நடும் பயிர்கள் செழிப்புற்றோங்கி நற்பயனைக் கொடுப்பதற்காகவும் எம்மைக் காத்து அருள் புரிவதற்காகவும் எமது காவற்கடவுளாகிய முருகனை வழிபட்டு வருகின்றோம்” என மொழிந்தார்.

அவர் சொல்லிமுடித்ததைக் கேட்டதும் மாருதப்புரவீகவல்லி சிறிது நேரம் ஏதோ தனக்குள் எண்ணிக்கொண்டு நின்றாள். அதன்பின் பெரியார் அவரை நோக்கி ‘அருந்தவப் பெரியீர்! முருகனின் திருவருட் பொலிவோடு தங்கள் முகம் மிளிருவதைக் காண என்மனம் களிப்புறும். முருகன் மேலிருக்கும் அன்போ எனக்குச் சாலப்பெரிது. உமது வழிபாட்டையும் அரசமரத்தின்கீழ் இருக்கும் இவ்வெள்ளி வேலாயுதத்தையும் கண்டதும் முருகப் பெருமானுக்கு இங்கு அழகியதோர் கோயில் கல்லினாற் சமைக்கவேண்டுமென அவாக் கொண்டுள்ளேன். அவ்வாறு யான் செய்வதற்கு உமது திருவுள்ளக் கருத்து யாதோ?” எனக் கேட்டாள்.

அதற்கு அப்பெரியார் இறைவனுக்குத் தாங்கள் ஆற்ற இருக்கும் திருத்தொண்டிற்கு அடிசொல்ல அடியேன் யார்? தங்கள் திருவுள்ளக் கருத்து யாதோ? “அப்படியே ஆற்றுக; முருகப்பெருமானின் திருவருள் நும்மீது பொழிந்தருளுக” என விடை கூறினார்.

இச்சொற்களைக் கேட்டதும் மாருதப்புரவீகவல்லி களிப்புடன் தனது இருக்கை சென்றாள். மறுநாள் தனது தந்தையாருக்கு முருகனுக்குக் கோயில்கட்டி எழுப்பத்தான் நினைத்திருப்பதாகவும் அதற்கு வேண்டியன யாவற்றையும் சோழநாட்டிலிருந்து அனுப்பி வைக்குமாறும் ஒரு ஓலை விடுத்தாள். அதற்கு அவள் தந்தையாரும் இசைந்து கோயிற் கட்டிட வேலைக்கு வேண்டிய பொருள்களையும், சிற்பிகள் முதலியோரையும், உருவச்சிலையையும், நித்திய, நைமித்திய பூசைகளை நடாத்துவதற்குப் பார்ப்பனரையும் சோழநாட்டிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தார். முருகப் பெருமானின் திருவுருவச்சிலை கப்பல் மூலம் கசாத்துறை (இதற்கு வேறொரு பெயர் குரக்சன்துறை இதனைப் பருத்தித்துறை என்னும் பெயருடன் ஒத்துநோக்குக) என்னுமிடத்தில் வந்திறங்கியது. அதனால் இத்துறை காங்கேயன்துறை என இன்று வழங்குவதாயிற்று. மாருதப்புரவீகவல்லியும் தானாகவே நின்று தன் கண்காணிப்பில் கோயிலைக்கட்டி, அங்கு வந்த பார்ப்பனத் தலைவனைக் கொண்டு ஆகமமுறைப்படி தேவாரப் பிரதிட்டை செய்து, கும்பாபிடேகம் பண்ணிவைத்தாள். இதுகாறும் திராவிட முறைப்படி மரத்தின்கீழ் நடைபெற்று வந்த முருகன் வழிபாடு, ஆகம முறைப்படி எழுந்த வழிபாடாக மாறிற்று. அன்றியும் அக்கோயிலுக்கு வேண்டிய பூசைகள் காலந்தவறாது நடந்துவரும் வண்ணம் அதன் செலவிற்காக நன்செய் நிலத்தையும், புன்செய் நிலத்தையும் மானியமாக ஈழநாட்டிலும், சோழநாட்டிலும் வழங்கினாள்.

சோழமன்னனின் ஆட்சி இலங்கையில் வலுவுற்றிருந்த காலத்தே சைவக் கோயில்கள் பல இலங்கையில் எழுந்தன என்பது நன்கறிந்த தொன்றாகும். பொலநறுவையில் இப்பொழுது காணப்படும் சிவன் கோயிலும், இன்றும் பழுதான நிலையில் கவனிப்பாரற்று இருக்கும் ஏனைய கோயில்களும், தெருவோரங்களில் தேடுவாரற்று இருக்கும் சிவலிங்கங்களும் இதற்குச் சான்று பகரும். இதுபோலவே அக்காலத்திலே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் எழுந்தது. அன்றியும் அரசகுடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தி கட்டி எழுப்பினதாகையால் தஞ்சாவூரிலுள்ள இராசராசேசுவரமுடையார் கோயில் போல இதுவும் அரசகுடும்பத்தின் கண்காணிப்பில் இருந்து வந்தது.

பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் சோழரின் ஆட்சிக் காலம் இலங்கையில் ஒருவாறு முடிந்தது. அதன்பின் கர்நாடக தேசத் தொடர்பும் இருந்திருக்க வேண்டும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு அணித்தாகக் 'கண்ணடிய தெரு' என்னும் ஓர் இடமுண்டு. கர்நாடக தேசத்தவர் வந்து குடியேறியபடியால் எழுந்த பெயரே ஈற்றில் கண்ணடியர் தெரு என மருவி வழங்கலாயிற்று. யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் பிறிதோர் இராச்சியத்தை அங்கு நிறுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் காலத்தில் இக்கோயிலும் செவ்விதான நிலையில் இருந்து வந்தது. அதன் பின்னர் பதினாறாம் நூற்றாண்டில் பறங்கியர் யாழ்ப்பாணம் அரசினைக் கைப்பற்றினர். கைப்பற்றியதும் தமது சமயத்தையும் பரப்பத் தொடங்கினர். அதற்காக யாழ்ப்பாணத்தில் அக்காலத்திலிருந்த கோயில்கள் யாவற்றையும் இடித்துத் தரை மட்டமாக்கினர். அன்றியும் மக்களுக்குத் தமது மதப் பெயரைக் கொடுத்தனர். அதுமட்டுமன்றிக் கோயிலை அடுத்துள்ள மக்களையும் கத்தோலிக்கராக்கினர். கந்தசுவாமி கோயிலை அடுத்துள்ள காணிகளின் பெயர் இன்றும் மத்தேசுபங்கு இயவாத்தை வளவு என வழங்குவதைக் காண்க.

இக்கோயிலை இடிக்கும்போது அதைக் கண்டு துன்புற்ற ஆதீனப் பார்ப்பனர் ஆதி மூல உருவச் சிலையைக் கயிற்றிற் கட்டி அங்குள்ள கிணற்றில் மெல்லென இறக்கி தண்ணீரிருள் மறைத்து வைத்தனர். இதுவே அழகிய உருவச்சிலை. சோழ நாட்டிலிருந்த கைதேர்ந்த சிற்பிகளால் செதுக்கப்பட்ட இச்சிலையை இக்காலத்துச் சிலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் பண்டைப் பெருமை விளங்கும். இதனால் அங்கிருந்த தங்க உருவச் சிலைகளும் மறைந்தன என்பர். அவையாங்குச் சென்றதெனத் தெரியவில்லை. இக்கோயில் கட்டி எழுப்பப்பட்டதும் சோழ நாட்டுச் சிற்பிகள் செதுக்கிய அழகிய கற்களைக் கொண்டதேயாம். அவை யாவும் பறங்கியரால் இடிக்கப்பட்டு அழித்தொழிந்து போயின. இவை இக்காலத்திருந்தால் சோழ நாட்டுச் சிற்ப வேலைக்குச் சான்றாக விளங்கும். இக்கோயிலை இடித்து இதன் கற்களைக் கொண்டு கத்தோலிக்க கோயிலைக் கட்டி எழுப்பினர் என்பர். போர்த்துக்கேயர் காலத்துக்குப் பின் ஒல்லாந்தர் காலத்திலும் இக்கோயில் அழிந்திருந்தது. இவ்விரு அரசினரும் சைவ மதவழிபாட்டிற்கு முட்டுக்கட்டையாக இருந்தபடியால் அயலிலுள்ள மாந்தர் யாவரும் நள்ளிரவில் இக்கோயில் இருந்த இடத்திற்குச் சென்று மறைமுகமாக முருகனை வணங்கி வந்தனர்.

19ம் நூற்றாண்டில், ஆங்கில அரசினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றவே நிலைமை யாவும் மாறின. போலிக் கிறிஸ்தவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தவர் யாவரும் வெளிவெளியாகத் தமது மூதாதையரின் சமயமாகிய சைவத்தைத் தழுவினர். அதனோடு சைவக் கோயில்களையும் புதுப்பித்து அதனால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும் அதனுடைய பழைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. விளாங்குளப் பகுதியிலிருந்து கருங்கல் எடுத்துப் புதியதோர் கோயிலைக் கட்டினர். சோழர் காலத்தில் நாற்புறமும் கோபுரம் இருந்ததென்பர். ஆனால் இக்காலத்தில் அவ்வாறில்லை. மேற்கு வாசற் புறத்தில் இறங்கூன் பண்டாரம் என்னும் சைவப் பெரியார் கட்டி எழுப்பிய கோபுரம் இருக்கின்றது. சோழர் காலத்துச் செப்புப் பட்டயம் பல இக்கோயிலில் இருந்தன என்றும், இக்கோயில் மூலமூர்த்தியின் பீடத்தில் வைக்கப்பட்ட அரிய பெரிய இயந்திரம் ஒன்று உண்டென்பதும் கேள்வி. அவை யாவும் எங்குற்றனவோ தெரியாது. சோழ அரச குடும்பத்தாருக்குப் பதிலாக அவர் கொண்டு வந்த பார்ப்பனக் குடும்பங்களின் வழித்தோன்றல்கள் இக்கோயில்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்டனர்.

நன்றி:

(இக்கட்டுரை திருவாவடுதுறை ஆதீன வெளியீடான “முருகன்” என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

சித்திரகவித் திருவிரட்டை மணிமாலை என்னும்

# மாவைத் திருவிரட்டை மணிமாலை

# ஆறெழுத்துப் பத்து

இவை

மாவிட்டபுரம், கந்தசுவாமி கோயில் ஆதீனகர்த்தா

**ஸ்ரீலஸ்ரீ. சு. சாமிக்குருக்கள் அவர்கள்**

கேட்டுக்கொண்டபடி,

தெல்லிப்பழை

**ஸ்ரீமத். தா. மூ. பூ. பொன்னம்பலபிள்ளையால்**

இயற்றப்பட்டு,

டிஸ்திறிக்கோட்டு நியாயதுரந்தரர்

**ஸ்ரீமத். பொ. சின்னக்குட்டிப்பிள்ளையால்**

முதற் பதிப்பாகச் சர்வசித்து வருடம் மாசி மாதம்

பதிக்கப்பட்டது.

- ஆவணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# மாவையந்தாதி

இது
யாழ்ப்பாணம், தெல்லியம்பதி
**திரு. பூ. பொன்னம்பலபிள்ளை அவர்களால்**
இயற்றப்பட்டு
அவர் மருகர்
**அ. சின்னத்தம்பி அவர்களால்**

கொழும்பு, மெய்கண்டான் அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பெற்றது.

(இரண்டாம் பதிப்பு)
பதிப்புரிமை பதிவு செய்யப்பெற்றது.
1940

- ஆவணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மானம்பூ உற்சவம் மாவை முருகன் வியாக்கிராசுரவதம் நடைபெறும் காட்சி.



துர்க்காதேவி தேவஸ்தானத்தில் விசேட பூசை வழிபாடு நடைபெற்று மாவை முருகன் இரட்டை குதிரை வாகனத்தில் மாவிட்டபுரம் திரும்பும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்துடன் மாவிட்டபுரத் தொடர்பு

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா

**மா**விட்டபுரம் கந்தசுவாமி கோயிலோடு இவ்வாலயத்துக்குப் புராதன தொடர்புண்டு என்பதைப் பழைய ஏட்டுப் பிரதிகள் குறிப்பிடுகின்றன. மாவை முருகன் ஆலயத்தில் கருங்கற்திருப்பணி நிறைவேற்றப்பட்டு 1815இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை அடுத்து 1820இல் துர்க்காதேவி ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1829ஆம் ஆண்டு புரட்டாதி விஜயதசமி அன்று மாவை முருகன் துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி வந்து வன்னி வாழைவெட்டும் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. அன்று தொடக்கம் இன்றுவரை இவ்விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நக்கீரரும், "வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ" என முருகப் பெருமானை விளக்குகிறார்.

நக்கீரர் குறிப்பதற்கொப்ப, துர்க்காதேவியும், முருகப்பெருமானும் ஒரே போரில் அசுரரை அழித்து அமரரைக் காத்த வரலாறு ஒன்று உண்டு. அவ்வரலாற்றினை விழாவாகக் கொண்டாடி மக்களுக்கு உணர்த்துவது தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் தொடர்ந்து இன்றுவரை நடைபெறுகிறது. அதாவது, பண்டு ஓர் கற்பத்திலே பிரமனும், விஷ்ணுவும் அகந்தை மேலோங்க ஒவ்வொருவரும் தந்தை-மகன் - பௌத்திரன் - பிரபௌத்திரன் - மருகன் என்னும் முறை காரணமாகப் போரிட்டனர். போர் வலிவுடையதானபோது, திருமால் கோபமேலிட்டு, வேள்வியொன்றையாற்றி அத்தீயினின்று புலிமுக முடைய ஒரு அசுரனை உண்டாக்கிப் பிரமனை அழிக்குமாறு ஏவினார். பிரமனும் ஓர் ஆபிசார ஓமம் செய்து அந்த அக்கினியிலிருந்து எருமைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையுடன் கூடிய மகிஷாசுரனை உண்டாக்கித் திருமாலை அழித்து வருமாறு ஏவினார். இருவரும் போரிட்டனர். வெற்றி, தோல்வியின்றிச் சலிப்படைந்த வேளை அசுரர் இருவரும் சமாதானமாயினர். மூர்க்கரை மூர்க்கர் முகப்பரன்றோ இருவரும் தவம் புரிந்தனர். உருத்திரன் அவர்கள் தவத்தினுக்கிரங்கி எதிர் தோன்றி வேண்டியவாறே வரங்கள் அளித்தார்.

மூர்க்கத்தனமும், கண்டார் அஞ்சத்தக்க தோற்றமும்மிக்க வலிமை யுள்ள வியாக்கிராசுரன் (புலிமுக அரசன்) அரசனாகவும், மகிஷாசுரன் அமைச்சனாகவும் மூவுலகங்களையும் வென்று அரசாள்வாராயினர். அவர்களது அரசியலில் தேவர், முனிவர்க்கெல்லாம் பெரும் துன்பம் விளைந்தன. பிரமா, விஷ்ணு பதவிகளை விட்டு ஓட விரட்டப்பட்டனர். துன்பங் காரணமாகத் தேவர் முதலியோர் சிவபரஞ்சுடரை அடைந்து முறையிட்டு அழுது வேண்டினர். 'உயிர்களைக் காக்கும் தன்மையை விட்டு அகந்தை கொண்டதாலன்றோ துன்பம் தேடிக் கொண்டனை' எனத் திருமாலைக் கண்டித்த பரமபதி, துர்க்காதேவியையும் சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினார்.

துர்க்கைக்குத் துணையாக சுப்பிரமணியர் அசுரப் படைகளை அழித்தார். அதனால் கொதிப்புற்ற வியாக்கிராசுரனும், மகிஷாசுரனும், மாயங் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் ஓலமிட்டு அரற்ற துர்க்காதேவி, மகிஷாசுரனை மாய்த்தாள். சுப்பிரமணியர் வியாக்கிராசுரனைத் தனது 'அருந்தகுணம்' என்ற வில்லில் அம்பு பொருத்தி விடுத்து அவன் தலையைக் கொய்து புறக்கடலில் வீழ்த்தித் தேவர் துன்பங்களைத் துடைத்தார்.

இந்த விழா வசிட்ட இலங்க புராண சுப்பிரமணிய பராக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டு இன்றும் தெல்லிப்பழையிற் கொண்டாடப் பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவையாதீனம்

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

# மாவை ஆதீன மகா மண்டப கருங்கல் திருப்பணி

ஆதீனகர்த்தா, சிவாகம வித்யாபூஷணம்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

*சிவகோடி யடையமுனஞ் செம்மறசக் கிரீவனால்*
*அவகோடி யகற்றியற் றறுகோடி யாலயமுந்*
*தவகோடி வீடணனாற் றருமுக்கோ டியுமாக*
*நவகோடி சிவாலயங்க ணணியதிலங் காநகரம்.*

**ஒ**ருகால் சிவபூமியாகக் காணப்பட்ட இலங்கையின் வடபால் "வீணாகானபுரம்" என்றழைக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாடு உத்துங்கம் பொருந்திய செந்தமிழ்ப் புலவர்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. ஆரியச் சக்கரவர்த்திகளால் இந்நாடு ஆளப்பட்டபோது, மாருதப்புரவீக வல்லி - உக்கிரசிங்கன் ஆகியோரின் பேரனான செயதுங்கவரராஜனின் கொடைத் திறனைக் கேள்வியுற்ற சோழநாட்டுக் கவிவீரராகவன் என்னும் குருடன், இவ்வரசன் பேரில் ஓர் பிரபந்தம் பாடி யாழ்மூலம் அதனை இசைத்து அரசனை மகிழ்வித்தமையால் "மணல்திடல்" எனும் பிரதேசத்தைப் பரிசாகப் பெற்றார் இக்கவிராயர். அன்றிலிருந்து இப்பிரதேசம் "யாழ்ப்பாணமாயிற்று".

கைலாசமலையிற் கிடைக்கப்பெறும் தவவிசேடங்கள் யாழ்ப் பாணத்தின் வடபாலுள்ள நகுலாசலப் பிரதேசத்திலும் காணப்படுவதை உணர்ந்த மகரிஷிகள் ஏராளமாக யாத்திரையாக இங்கு வந்து தங்கியிருந்த கதைகள் பலவுண்டு. நகுலமுனிவரின் சாப விமோசனமும், மாருதப்புரவீகவல்லியின் தீராத நோயும் இங்கேதான் நிவர்த்திபெற்றது. மாருதப்புரவீகவல்லியால் தோற்று விக்கப்பட்ட "மாவிட்டபுரம்" ஒருகால் ஆகாயத்தை அளாவிய சோலைகள் சூழ்ந்த குகஸ்தலமாக இருந்ததென்பதை, "ககனத்து அழைகா குகன் மாவை" என்று ஓர் பழம்பெரும் புலவரின் செய்யுளடிகளால் தெரியப்படுகிறது.

சிறந்த சிற்ப சாஸ்திர விதிப்படி மாருதப்புரவீகவல்லியால் ஏழாம் நூற்றண்டில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயத்தை, சிதம்பரம் தீட்சிதர் முதல்வர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பெரியமனத்துள்ளார் கண்ணும் கருத்துமாக வெகு கவனமாகப் பரிபாலித்து வந்தார். மூன்று வீதிகளை முதன் முதலாக உருவாக்கிய பெருமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கேயுண்டு. இப்படியே முகோத்தர தேரை உள்ளடக்கிய பஞ்சரதங்களை ஓடவிட்டதும், இராஜ கோபுரத்தை முதன் முதலாக ஸ்தாபித்ததும், துவஜஸ்தம்பம் நாட்டி பிரமோற்சவங்களை ஆரம்பித்ததும், எங்குமே காணப்பெறாத மூலஸ்தான மாட்சிமை மிகுந்த திருக்காட்சியின் அமைப்பும், கருங்கற்களால் ஆலயம் அமைக்க முனைந்ததும் மாவிட்டபுரத்திலேதான் ஆரம்பமானது என்பதை நினைக்கும்போது மாருதப்புரவீகவல்லியின் சிவபுண்ணியம் எத்தகையதென்பதை அறியமுடியும். சீரும் சிறப்புமாக விளங்கிய இவ்வாலயம் பதினைந்தாம் நூற்றாண்டிற் பறங்கியர்களால் இடித்து சேதப்படுத்தப்பட்டது. அப்போதிருந்த அந்தணப் பெருந்தகையோர், கோவில் விக்கிரகங்களுக்கு ஊறு ஏற்படக் கூடாதென்பதற்காக மூர்த்திகளுக்கு இரட்சாபந்தனம் செய்து, காயத்திரி ஜெபங்களை அர்ப்பணித்து, கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, சிந்து காவேரி ஆதியாம் நதிகளிலிருந்தும், சரவணப் பொய்கை ஆதியாம் பொய்கைகளிலிருந்தும், மற்றும் பிற புண்ணிய நீருற்றுகளிலிருந்தும் பெறப்பட்ட புண்ணிய தீர்த்தங்கள் சேர்க்கப்பட்ட கோவிலினுள் காணப்படும் திருமஞ்சனக் கூடத்துள் ஜலாதிவாசம் செய்துவைத்து, மானசீகமான பூஜைகளை ஆற்றி வந்தனர். இத்தீட்சிதப் பெருந்தகையோரின் வழித்தோன்றலான குமாரவேலர் சபாபதிக் குருக்கள் 1782ம் ஆண்டளவில் ஆங்கிலேயர் ஆட்சிமலரும் காலத்தில், மீண்டுந் தமது சக்திக்கேற்ப இக்கோவிலை நிர்மாணித்து முன்னர்போல மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயமையப்பெற்ற ஸ்தலமாக்கினர். இவ்வேளையில் இத்திருத்தலத்தைக் கருங்கற் கோவிலாக நிர்மாணித்து யுகங்கள் தோறும் நிலைநிற்க வேண்டுமென்ற பெருவிருப்பத்தை மனதிற்கொண்டு செயலாற்றவும் முற்பட்டார். 1922ம் ஆண்டில் இரத்தினக் குருக்கள் எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட எனது பாட்டனார் சா. சுப்பிரமணியக் குருக்கள், சைவப் பெரியார்களின் துணையுடன் நாடெங்கும் நிதி சேர்த்து 1927ம் ஆண்டில் மூலஸ்தானம், அர்த்தமண்டபம் ஆகியவற்றை நிறைவுபடுத்தி ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் கும்பாபிஷேகத்தையும் நடாத்தினர். அதேவேளையில் மகாமண்டபத்தைக் கருங்கற்களால் நிறுவ முனைந்தபோதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்த மண்டப இடிபாடுகள்.



திருத்தேர், திருமஞ்ச தரிப்பிட அழிவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1782ல் முதன்முதலாக இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட "மூகோத்தர மஹா ரதம்" சேதங் கொண்டுள்ள நிலையில் இருக்கிறது. இவ்ரதம் 1990ம் ஆண்டுவரை பிரயோசனத்தில் இருந்தது.




மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கேரளம் தாம்பிரப்ர்ணி நதிக்கரையில் 7-05-1927ம் ஆண்டு அவதரித்தார். அவரை தாயார் 'நாராயணி' அம்பாள் மாவிட்டபுரம் கொணர்ந்தபோது கையோடு ஒரு ருசியான மாங்கன்றும் கொணர்ந்து வீட்டு வாயிலில் நாட்டிய பின் வீட்டினுள் நுழைந்தார். அழகான அற்புதமான கேரள மாமரம் இன்றும் ஆதீனகர்த்தா ஐயாவின் வீட்டு முற்றத்தில் காட்சி தருவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வசந்த மண்டப இடிபாடுகள்.



ஆதீன தல விருட்சமான "காஞ்சிமா" சப்த ரிஷிகளுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவின்போது.



நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் "நல்லைக் குமரன்" மலர் வெளியீட்டு விழாவில் யாழ் மாநகர சபையினர் மாவை ஆதீன கர்த்தாவுக்கு பட்டமளித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. கஷ்டங்களும் பல தோன்றின. 1956ம் ஆண்டில் எனது தந்தையார் தம் முன்னோர் கருதிய கருங்கற் திருக்கோவில் முற்றும் முழுதாகப் பூர்த்தி செய்யக் கருதி மகாமண்டபக் கருங்கல் திருப்பணியை ஆரம்பிக்க பொது மக்களிடமிருந்து நிதிசேர்க்க முற்பட்டபோது, கொழும்பு, திரு. நா. குமாரசுவாமி அவர்களே முதலாவதாகப் பணம் கொடுத்திருப்பதாகக் குறிப்புகள் உண்டு. அப்பணம் முழுவதும் வவுனியா செல்லையா ஆசாரியிடம் கருங்கற் களுக்காக கொடுபட்டிருப்பதும், பதிவுகளிலிருந்து தெரிகிறது. 1961ம் ஆண்டு வரை மகாமண்டப கருங்கற் திருப்பணி அஸ்திவாரத்திலிருந்து அதிஷ்டான வரிவரை கோவில் எல்லைக்குள் இருந்த கருங்கற்களின் துணையோடு நிறைவேறியது. நிதி வசதியின்மை, கருங்கற்கள் கிடையாமலிருந்த நிலைமை தோன்றவே இவ்வேலைகள் இடை நிறுத்தம் செய்யப்பட்டன. 1961ம் ஆண்டு ஆனி மாதம் யாழ்ப்பாணம் சிறாப்பர் சு. கனகசபை அவர்கள் இங்கு வந்தபோது, திருவருட் சக்தியினால் உந்தப்பட்டு, வேண்டிய கருங்கற்களை நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து தருவித்து, ரூபா 10,900/-ம் கூலிகளின் சம்பளத்திற்காக உபகரித்தார். 1962ம் ஆண்டுவரை அதிஷ்டான வரியிலிருந்து பாத வர்க்கம்வரை இத்திருப்பணி வேலைகள் உயர்ந்தது. 1962லிருந்து இவ் வேலைகள் மீண்டும் நிதிவசதியின்மையால் இடை நிறுத்தம் செய்யப்பட்டது. 1976ம் ஆண்டில் எமது தந்தையார் இம்மகாமண்டப வேலைகள் பூர்த்தியடையவில்லையே என்ற பெரு மனவருத்தத்துடன் சிவனடி சேர்ந்தபோது, என்னையும் இத்துயர் வாட்டியது. எனது பாட்டனார் இரத்தினக் குருக்களால் துணிந்து ஆரம்பிக்கப்பட்ட இப் பெருந்திருப்பணியை எனது தந்தையார் ஓரளவிற்குச் செயற்படுத்தி இன்று பூரண உருவம் பெற்றுள்ள அழகிய மகாமண்டபத்தை நோக்கும்போது, இப்படியெல்லாம் செய்விப்பதற்கு எத்தகைய திருவருட் சக்தி வேண்டுமெனப் புலனாகிறது. 1977ம் ஆண்டு தைமாதத்தில் யான் ஆதீனப் பொறுப்பை ஏற்றபோது, இலட்சார்ச்சனையும் ஆரம்பமானது. இலட்சார்ச்சனையின் முதலாவது உபயத்தை நடாத்தி அருளமுதத்தைப் பருக வந்திருந்த முருக பக்தரான திரு. நா. குமாரசுவாமி அவர்கள், ஷண்முகப் பெருமான் தமது திருக்கோவிலிலிருந்து இலட்சம் உருப்பெற வசந்த மண்டபத்திற்கு சதுர்வேத கீத ஒலி, முருகநாம பஜனை, நாதஸ்வராஞ்சலி ஆகியவற்றுடன் பக்தர்கள் புடைசூழ, ஆலயத் தொண்டர்களின் தோளின் மீதுள்ள அழகிய சிம்மாசனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசைந்து, அசைந்து வீதிவலம் வருகையில், ஏதோவொரு சக்தியால் உந்தப்பட்டு, மெய்மறந்து, குறைவேலையாகவிருந்த மண்டபத்தை நாடி என்னையும் தனிமையில் அழைத்து, இம்மண்டபங்கள் இப்படியாகச் செப்பனிடாது இருப்பதன் "காரணம் என்ன?" என வினவினார். "நிதியின்மை தான் காரணம்" என்றேன். அன்பர் ஓர்கணம் திகைப்புடன் சிந்தித்தார். "மனதில் முருகனை நினைத்துக்கொண்டு வேலைகளை ஆரம்பியுங்கள் முருகப் பெருமான் வேண்டிய நிதி தருவார்" என்றார். உண்மையில் யான் திகைத்துவிட்டேன். அன்பர் குமாரசுவாமியின் வாயிலாக உதிர்ந்த இந்த வசனங்களைக் கேட்டதும் மெய்மறந்தேன். எமது மூதாதையர் ஆரம்பித்து வைத்த இப்பெருந் திருப்பணியை எப்படித்தான் நிறைவேற்றுவேன் எனச் சிந்தித்திருக்கும் வேளையில் திரு. குமாரசுவாமி அவர்களின் மூலமாக முருகப் பெருமான் உறுதுணை தரும் செயலை என்னென்றுதான் கூறுவது. சிவசிந்தனையும், புண்ணியமும் எல்லோரிடமும் எப்போதும், சேர்ந்துவிடா. எத்தனையோ தவங்கள் செய்துதான் இவற்றைப் பெறமுடியும். சிவசிந்தனையை மனதிற் பதிப்போர் வெகுசிலரே. அதேபோல் புண்ணியமும் செய்பவரும் வெகுசிலரே. தியானிப்பது மந்திரம். அம்மந்திரம் பரிபூரண சிவசிந்தனையோடு கலந்தால் அது சிவபுண்ணியம் செய்ய உந்தும். இச்சிவபுண்ணியத்தைச் செய்ய வேண்டிச் செல்வங்களையும் இறைவன் தந்தருளுவார் என்பது உண்மை. இத்தகைய ஓர் சிவபுண்ணியத்தை திரு. நா. குமாரசுவாமி அவர்கள் பெறுகிறார். இக்கோவில் தரிசனத்திற்கு வருவோரும், ஈடுபாடுடையோரும் கூட சிவ புண்ணியங்களுக்கு ஆளாகின்றனர். ஏனெனில் அவர்களும் மனதில் மந்திரங்களை நினைக்கிறார்கள். தேரை நிரைப்படுத்தி சரியான திசையில் செல்ல சறுக்குக் கட்டை போடுவது போல, திருமதி மகேஸ்வரி குமாரசுவாமி அவர்கள் மாவை முருகன் பேரிற் கொண்டிருக்கும் அன்போ சொல்லிலடங்கா. நாயகன் குறிப்பறிந்து எதுவும் செய்வார். இம்மகாமண்டபத்தை எத்தனை இடர் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது பூர்த்தி செய்ய வேண்டுமென்ற பெருவிருப்பைக் கொண்ட இவ்வில்லத்தரசி சாயிபாபாவின் சிறந்த பக்தராகிய தமது இல்லத்தில்கூட ஓர் பெரும் அறையை எல்லாத் தெய்வங்களையும் வணங்கக் கூடியதோர் கோவிலாக்கி யுள்ளார். வேண்டுவார்க்கு வேண்டுவதை அள்ளி அள்ளிக் கொடுக்கும் கரங்கள் எப்போதும் கூப்பிய கரங்களாகவே இருக்கும். இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய சீலர்களின் பேருதவியால் இன்று மகாமண்டபத் திருப்பணி நிறைவுறுகிறது. இதனால் எத்தனையோ கோடி மக்களின் ஆத்ம திருப்தியையும் செய்துள்ளனர். இவர்களின் துணையோடு 1977ம் ஆண்டு வைகாசி மாதத்திற் குறையாக விடப்பட்ட கருங்கல் திருப்பணி ஆரம்பமானது. ஆரம்பத்திற் செய்யப்பட்ட மதிப்பீடு உயர்ந்தது. பொருட்களின் விலை அதிகரித்தது. கூலியாட்களின் சம்பளமும் கூடியது. இருப்பினும் குமாரசுவாமி அவர்கள் தயங்கவில்லை. அவரது கடிதங்களிலெல்லாம் - முருகப் பெருமானின் கோவில் நல்லாய் வரவேண்டுமென்ற அவரது சிந்தனைகள் தொனியும், பாதவர்க்கத்திற்கு மேலுள்ள பிரஸ்தரம் வரையும் தூண்கள் உட்பட சகல வேலைகளையும் பூர்த்தியாக்க வேண்டிய உதவிகளையும் நல்கினார். இதே சமயம் அர்த்த மண்டப முகவாசலிற் காணப்பட்ட குறைவேலைகளும் பூர்த்தியாக்கப்பட்டன. 51 வருட காலமாக நிறைவுறாத மகாமண்டபம் இன்று நிறைவு பெற்று அழகிய மண்டபமாகக் காட்சி தருகிறது. சிறுசிறு துளிகளாக ஆரம்பத்தில் இம்மகாமண்டபத் திருப்பணிக்குப் பலர் உதவினர். மிகவும் கஷ்டப்பட்டு வாழும் ஏழைகள் கூட ஒருசதம் தந்தும் உதவினர். இடையில் சிறாப்பர் கனகசபை அவர்களும் உதவினார். ஈற்றில் தானே கணக்குப் போடாத பெருநிதியைத் தந்து திரு. குமாரசுவாமி அவர்களும் உதவினார். எனது மனம், மிகுந்த பூரிப்படைகிறது. மாவை ஆலயமும் இருதயஸ்தானம் வரை முற்றுப் பெற்று புத்தொளியுடன் காட்சி தருகிறது. மாவையெம்பெருமான் முருகப் பெருமான் கூட மகா சங்காபிஷேகத்தை ஏற்கிறார். மாருதப்புரவீக வல்லியின் வேல் முருகன் புகழ் விளங்கும் நீள் பெருங் கோவிலை முன்னையதுபோல நிறுவி அருணகிரிநாதர் வேண்டியதுபோல்,

*"அயிலும், மயிலும், அறமும், நிறமும் அழகுடைய பெருமாளாகவும்,*
*கனகமயிலில் அழகு பொலியக் கருணைமருவி வரவேண்டும்"*

என முருகப் பெருமானை நாமெல்லோரும் இரந்து, பெருமானின் திருவருளுக்காளாகுவோமாக, யார்யாரெல்லாம் இம்மகாமண்டப கருங்கற் திருப்பணிக்கு உதவினார்களோ, அவர்கள் யாபேருக்கும் எல்லாம்வல்ல மாவை முருகன் நல்லருள் புரிய வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன்.

***சுபம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மாவை முருகன் பிள்ளைத் தமிழ்" நூலுக்கு

சைவத் திருவாளர்

சு. நடேசபிள்ளை B. A., B. L. அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

தமிழிலக்கிய வகைகளுள் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் ஒன்றாகும். இப்பிரபந்த வகை தமிழ்மொழிக்கே சிறப்பாக உரியது. யாழ்ப்பாணத்தில் தோன்றிய புலவர்கள் கோவை, குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்களை இயற்றியிருப்பினும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் இயற்றி இருப்பதாகத் தெரியவில்லை. இக்குறையைத் தீர்க்கும் பெருமை பண்டிதர் மு. கந்தையா அவர்களைச் சார்வதாகும். அவர்கள் 'மாவைப் பிள்ளைத்தமிழ்' என்ற நூலை இயற்றி அதனை, மாவிட்டபுரத்திற் கோயில் கொண்டிருக்கும் அதன் பாட்டுடைத்தலைவன் சந்நிதியில் அரங்கேற்றி அச்சிட்டு வெளியிடுகின்றார்கள்.

இந்நூல் பிள்ளைத் தமிழிலக்கணத்துக்கமைந்ததாய்க் குமரகுருபரர் முதலிய சான்றோர்கள் காட்டிய மரபைப் பின்பற்றியுள்ளது. சிறந்த சொல்நயங்களுங், கற்பனைகளும் இதில் ஆங்காங்கு காணப்படுகின்றன. சைவசித்தாந்தக் கருத்துக்கள் இதிற் செறிந்துள்ளன. இதிலுள்ள சில பாக்கள் பக்திச் சுவை சொட்டும் பெற்றியுடையனவாகும். மாவிட்டபுரத் திருவிழாக்காலக் காட்சிகளைச் சில பாக்கள் அழகுபட வர்ணிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் விளங்கிய புலவர்களான துன்னை முத்துக்குமாரக் கவிராயரைப் பற்றியும், புன்னைக் கணேசையரைப் பற்றியும் இந்நூல் குறிப்பிடுவது பொருத்தமாகும். புதிய விஞ்ஞான சாதனைகள் மிகுந்த இக்காலத்தில் இந்நூல் தோன்றியமைக்கேற்ப அணுகுண்டு, செயற்கைச் சந்திரன், பூமண்டலத்தைக் கடந்து வான வெளியிற் சென்ற 'ஸ்பூட்னிக்' முதலியவற்றையுஞ் சம்பந்தப்படுத்தி இந்நூலிற் காணப்படுங் கற்பனைக் குறிப்புக்கள் புதுமையைப் பழைமையோடு புணர்த்துகின்றன.

இந்நூல் தமிழிலக்கியச் சுவையில் திளைப்பவர்களுக்கு ஒரு நல்விருந்தாகும்.

இராமநாதன் கல்லூரி
3-8-62

சு. நடேசபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை முருகன் பிள்ளைத் தமிழ்

**கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா**

## காப்புப் பருவம்

### திருமால்

***பா***வனா தீதப் பழம்பொருளை நாடவோர்
பன்றியாய்ச் சென்றி டந்து
பகர்வரிய தொண்டினா லன்றிநம் மாணவப்
பரிசினா லொருவகை யினும்
ஆவதீ தன்றெனு மளப்பரிய வுண்மைக்கொ
ரளவுகோ லான நெடுமால்
அடியிரண் டிட்டுமூன் றுலகையு மளந்திட்ட
அவனருள் வேண்டி நிற்பாம்
தேவனா மொருசிவன் செங்கரத் துற்றருகு
தேவியுமை வதன நோக்கிச்
செங்கைக ளெடுத்தெறிந் தானந்த மெய்துமித்
தெய்விகக் குழவி பின்னாட்
காவனா யகனெனக் காக்குமங் கலமெனக்
கண்ணோடி நின்ற தேவர்
கன்னியர் பரிந்திடக் காண்பினிய மாவைவளர்
கந்தனைக் காக்க வென்றே. 01

### சிவபெருமான்

***பே***சுபிர பஞ்சமே மெய்பிரமம் பொய்யெனும்
பேதைலோ காய னோடு
பிரமமே மெய்வெறும் பொய்த்தோற்ற முலகெனும்
பேதவே தாந்தி நிற்கத்
தேசுபெறு சிவனுமெய் சிவனையறி காறுமச்
சிவனருளி வுலகு மெய்யென்
சித்தாந்த சைவநெறி வித்தாகி விளைவான
சிவனருள் போற்றி செய்வாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூசுகர நீட்டியம் முதுகங்கை புனிதநீர்
முன்னவ னெடுத்து வார்ப்ப
முற்றத் திருந்தன்னை முகிழ்கருணை நீராட்டி
முச்சிநீ ரூதி யொற்றி
வீசுபுகை யூட்டிவெண் பொடிதிமிர்ந் தணிசெய்து
மேவுமிறை பிறைநி லவினில்
மெல்லென நிமிர்த்தழகு பார்த்திட விளங்கிவளர்
வேலனைக் காக்க வென்றே. 02

## உமாதேவியார்

ஐந்தொழி னிகழ்த்தவுறு மையற் கபின்னமா
யவனருட் பிரவா கமா
யச்சத்தி தத்வமுத லானபிரு திவிகா
றமைந்ததாத் விகங்க ளெல்லாஞ்
சொந்தமா யங்கங்கு வந்துவந் தின்பமே
துய்த்திடத் தலைய ளிக்குஞ்
சுத்தமங் களசொரூப சித்தநிகழ் திருவான
தேவியருள் சிந்தை செய்வாம்
தொந்திவிழ வோடிவரு மைங்கரத் தும்பியைத்
துண்ணென வெருண்டு நோக்கித்
துள்ளித் துடித்தழத் தொட்டில் துளங்கிடத்
தும்பிமுக னோட்டெ டுக்கத்
தந்தையவ னணையவுற் றிந்தநிலை காணெனத்
தாய்பரிந் தேற்ற ணைக்குந்
தனியிளம் பாலனாய்ச் சால்பினிய மாவைவளர்
சாமியைக் காக்க வென்றே. 03

## சித்திவிநாயகர்

மீதுலவு கார்முகில் மின்னுற் றொளிர்வதென
வெண்கோ டிலங்கி யொளிர
மேவுமம் முகிலினடு முழுமதி யணைந்ததென
மெய்யுருப் பண்பி வற்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதுல கெனப்பெரிய மோதக மணைத்தருளு
மொருதுதிக் கையி னோடு
மோவாது வந்துலவு முயர்சித்தி வேழமதை
யுள்ளத் திருத்தி யுணர்வாம்
தாதுமலி சோலைநுழை சந்திரற் கண்டுவிண்
சார் 'ரஷிய மதிய' மொன்று
தருமிசைத் தங்கிக் கிடந்ததென் றோடியணை
தருமமரர் சிறுவர் மாடே
போதுலவு கிளையெலாம் புடையலைய வேறியணை
பூசுரர் சிறுவ ரவர்மெய்ப்
பொன்னொளி படிந்தழகு மன்னுமெழில் மாவைவளர்
போதனைக் காக்க வென்றே. 04

**பிரமதேவர்**

***வா***ழியீ ரேழுலகு மற்றுள்ள புவனமும்
வந்துவந் துற்ப விக்கும்
வகைவேறு பட்டபல் லுயிர்கட்கு முலகுடல்
மாறிமா றிப்ப டைத்தே
ஊழிதோ றூழிநிக ழொருபெருஞ் செயலினா
லுடலுறுப் புள்ள மெல்லாம்
ஒக்கச் சிவந்தசெந் தாமரையி லுறைபிரம
னென்மலர்த் தாள்ப ரவுவாம்
ஏழிசைக் கந்தருவ ரிசைபாட நாரதர்
யாழ்மீட்ட வின்ப மெய்தும்
எழுகோடி முனிவரர் பல்லாண்டு பாடவோ
ரெண்கோடி பூத மாட
ஆழியா னறுகெடுத் தாசீர் வதித்துய்ய
ஆணிப்பொன் மஞ்ச மேற்றி
அரமகளிர் கோதாட்ட வணிகிளரு மாவைவள
ரண்ணலைக் காக்க வென்றே. 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுமுகசுவாமி

**நீ**டுகொடி மீதெழ நிவந்தகுடை நிரையெழ
நெடுந்தே ரிழிந்து நிமிர்வான்
நித்தில விதானமெழ நின்றசன மொய்த்தெழ
நிரந்தமலர் மழையு மெழவே
கோடுதுடி குமுறநற் குடமுழவு குமுறமுற்
கொட்டுமே ளங்கு முறமேற்
கொள்ளுபர வசமெழக் குலைகுலையு மன்பெழக்
கும்பிடும் வாய்ப்பு மெழுமா
றாடுபத மீதெழ வடிப்புழுதி வானெழந
லம்மைநல மிம்மை யெழநின்
றாடியணி மாவையர சாண்டினி தமர்ந்துமகி
ழாறுமுக சாமி காக்க
தேடுமறை யொலியெழத் தெய்வவர கரவெழத்
திருமறை முழக்க மெழமெய்த்
தெய்வவொளி திசையெழச் சேர்ந்தினிய மாவைவளர்
சேந்தனைச் சிந்தை யுறவே. 06

## வைரவப் பெருமாள்

**சீ**ட்டறி விறந்தசிவன் மட்டறு மறக்கருணை
சூழிருட் காளமுகி லாய்ச்
சுருளிருட் பத்தியொடு தெருளுமின் னுருமினொடு
தோன்றித் திகழ்ந்த தென்ன
வட்டித்த சடையினொடு நெட்டித்த சூலமொடு
வளரிரவு வந்து லாவி
வஞ்சர்த நெஞ்சதிர்ந் தஞ்சிட வுரப்பிவரு
வயிரவற் போற்றி செய்வாம்
வெட்டிப் பிளந்ததென வட்டப் பலாக்கனி
வெடித்தொழுகு மிரச மோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிலைக் கொடிவளர வள்ளிலைக் கதலிரச
மேவிக் கலந்து பாய்ந்து
முட்டச் செழித்துவளர் மட்டக் கருப்பிரச
மோடுற் றலைந்து பெருகும்
மூர்த்திதல மோடினிய தீர்த்தமுறு மாவைவளர்
முருகனைக் காக்க வென்றே. 07

## இலக்குமி தேவி

**வ**டமொழித் திரிபொப்ப மாஇஷ்ட புரமதே
மாவிட்ட புரம தாகி
மருவிலக் குமிநயந் தென்றுமுறை புரமெனும்
வாய்மைதன் னால்நி கழவே
இடமுடைய வுலகெலா மின்பசா தனமான
வெவையெவையு மேற்ப நல்கி
இம்மைக்கு வாழ்வளித் தம்மைக் கறங்கூட்டு
மிந்திரை பதம்ப ணிகுவாம்
மடவரல் மாருதப் புரவீக வல்லிமறை
வல்லசா மிக்கு ருக்கள்
மந்த்ரமறி மாமேதை விஸ்வநா தக்கிழாஅர்
மற்றுமுளர் பக்தி லயமாய்க்
குடதிசைக் கோபுர மெழுந்தோங்கி வானவர்
குறைவினவி யணைய நிற்குங்
கோயிலின் மேவிநமர் குறைவினவி மாவைவளர்
குமரனைக் காக்க வென்றே. 08

## சரஸ்வதி தேவி

**உ**ற்பவித் தெழுகவிதை யுயிர்துவனி வக்ரோக்தி
யுருவகமி ரீதி யலமற்
றொருதனரு ளேயரு ளுறாதவ ரியற்றுகவி
யுயிரற்ற வுடலா மெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைச் சிகரமாங் காளிதா சக்கவி
கவிச்சக்ர வர்த்தி கம்பன்
கருத்திற் கலந்துயிர்க் கவிதைவடி வாயருள்
கனிந்தூற்று மமுத வாணி
தற்பர விநாயகன் தம்பியென் றணைதலுந்
தன்னமுகை நீங்கி யன்னோன்
தாழ்துதிக் கையினுதி சற்றே யெழுந்துவளை
தகைமைகண் டுண்ம கிழ்ந்தே
அற்புதப் பொற்சிரிப் பகடுடை படச்சிரித்
தானந்த வெள்ள நீந்தும்
அழகினிள முளையென்ன வருள்பொலியு மாவைவள
ரையனைக் காக்க வினிதே. 09

## நவக்கிரக மூர்த்திகள்

**ஓ**தவுறு பன்னிரண் டுயர்லக்ன வகைதோறு
முச்சபகை நீச மாகி
யுலகுயிர் வாழ்விலுறு மொவ்வோ ரவஸ்தையினு
மோவாது தாக்கி நின்றே
மூதறிவி னாற்கணித முற்றுமுணர் முனிவந்த
முயற்சிக்கு மப்பா லவாய்
முன்னுறு வினைப்பயன் முகந்தளி நவக்கிரக
மூர்த்திகளை முன்னி நிற்பாம்
ஏதமுகி லான்பால னின்னுமோ கண்விழியா
னினியமுலை தானு முண்ணா
னென்னுற்ற தோவெனலு மிருபெரு மருத்துவ
ரெழுந்தோடி நாடி பார்க்கத்
தீதறிய வேட்டினிற் றிகழ்கிரக நிலைகண்டு
தெசாபுத்தி பிரம னெண்ணத்
திருதிரு விழித்தவர் திகைக்கச் சிரித்துவளர்
தேவனைக் காக்க வென்றே. 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண்டேஸ்வரர்**

சீவனுட் பொலிகின்ற திருவருளை நேர்கண்டு
செம்மையன் புய்த்து வருவோர்
சிவபூசை கைவருஞ் சீலத்தர் சிவமான
சிவவிளைவு மன்ன வற்கே
யாவதென வாவின்க ணன்புய்த் தரன்கணு
மடித்தொண்டு பூண்ட நெறியே
அன்பா லுவந்தரு ளரன்பா லிருந்தருளு
மண்ணல்சண் டீசர் காக்க
பாவமொன் றறியாத பச்சிளம் பாலர்தம்
பாவையிற் சுவாமி கண்டு
பருமணற் கோயிலிற் றிருவிழா வணியெழப்
பகர்வாழை மடல்வ ளைத்த
மாவலர் மலர்த்தண்டி தோளேற்றி மாண்டகர
மாமேளங் கொட்டி யார்த்து
வாயொலி விளைத்தினிய நாயன மிசைத்துவரு
மாவைவளர் வேல வனையே. 11

***சிவ சிவ.***

**முருகன் பெருமை**

*"விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா*
*மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்பு செய்த*
*பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி*
*வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே"*

*- அருணகிரிநாதர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் முருகா

## "மாவை சுப்பிரமணியக் கடவுள் பதிகம்" நூலுக்கு

வேத வேதாங்க விற்பன்னரும், வைதிகக் கிரியா வல்லுநரும்,
வியாகரண சிரோமணியுமாகிய

பிரம்மஸ்ரீ. தி. கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்கள் அளித்த

# அணிந்துரை

**க**லியுக வரதன் முருகப் பெருமான் ஓர் உருவமும், ஒரு குணமும், ஒரு பெயரும், ஓர் இடமும் இல்லாதவர். அந்த முருகப் பெருமானுக்குப் பல பெயர்கள் கூறி அர்ச்சித்து அடியவர் வழிபடுகின்றனர். அவைகள் காரணப் பெயர்களாகும். முருகப் பெருமானுடைய பெருமைகளை அவைகள் உணர்த்துவதாகும். உதாரணம், சுப்பிரமணியர் என்ற நாமம் மங்களம் நிறைந்த வேதசுவரூபி என்ற கருத்தை உணர்த்துவதாகும். கார்த்திகேயன் என்ற நாமம் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். ஸ்கந்தன் என்ற நாமம் சிவமாகிய பெரும் நெருப்பிலிருந்து சிறு பொறியாக வெளி வந்தவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். இவ்வாறு பெயர்கள் யாவும் காரணம் கொண்டு அமையப் பெற்றனவாகும். இவைகளுள் தலைசிறந்தனவாயும் உபநிடதங்களில் போற்றிப் புகழப்படுவதும் இடப் பெயராகவும் அமைந்தது குகன் என்னும் நாமமாகும்.

கைவல்ய உபநிடதத்தில்,

*"பரமா த்மரூபம் குகாசயம் நிஷ்களம் அத்துவிதீயம்*
*பீர்ம யோ வேத நிஹிதம் குகாயாம்."*

என்ற மந்திரம் காணப்படுகின்றது. இதன் கருத்து பரமான்ம சொரூபியும், கலையற்றவரும், தனக்கு நிகரற்றவரும், குகையில் உறைபவருமாகிய பரம்பொருளை எவன் அறிகின்றானோ என்பதாகும். சகல ஜீவராசிகளின் ஹிருதயா காசத்தைக் குகை என்றும், அதில் உறைபவன் குகன் என்றும் அவனே பரம்பொருள் என்றும் உபநிடத மந்திரத்தின் விளக்கமாகும். குகன் என்ற நாமம் இட ஆகுபெயராக அமைந்தது. அந்தக் குகன் என்னும் நாமம் சிவத்தையே குறிப்பதாகும். முருகனும், சிவனும் அபின்னமானதால் (பிரிக்க முடியாததால்) முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது.

*"குகேதி தகராகாசஹ் வேதாந்தேஷ‌ச பட்யதே*
*தன்னிஷ்டோயம் குக: ப்ரோக்த: ஸர்வஹிருத் கமலாஸந:"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகராகாசத்திற்குக் குகை என்ற பெயர் வேதாந்த நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குகையில் உறைவதால் குகன் என்று அழைக்கப்படுகின்றான். அவன் எல்லோருடைய இருதயக் கமலத்தையும் இருப்பிடமாகக் கொண்டவன். இவ்வாறு குகன் என்ற நாமாவுக்குப் பெருமையை உபநிடதங்கள் விளக்கியுள்ளன.

இத்துணை பெருமை வாய்ந்த குகன் என்னும் நாமாவை ஈற்றில் முத்திரையாகக் கொண்டு ''மாவைச் சுப்பிரமணியக் கடவுள் பதிகம்'' என்னும் துதி நூலை மாவையம்பதியில் மாட்சியுடன் விளங்கிய சிவஸ்ரீ வேதசிவாகம பண்டிதர் குமாரசுவாமி குரு அவர்கள் லலிதமான நடையில் இயற்றியுள்ளார்கள்.

வீரம், பயம், அருவருப்பு முதலிய ரசங்களை உணர்த்தும் பாக்கள் வல்லின எழுத்துக்கள் நிறைந்து கடும் சொற்கள் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்றும் அன்பு, கருணை, அமைதி, பக்தி முதலிய ரசங்களை உணர்த்தும் பாக்கள் மெல்லின எழுத்துக்கள் நிறைந்து லலிதமான சொற்கள் கொண்டு அமையப்பட வேண்டும் என்றும் ஒரு மரபு உண்டு. அதற்கு ஏற்ற முறையில் இந்தத் துதி நூல் அமைந்திருக்கின்றது. இதனைப் படிக்கும்பொழுது ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' என்ற அடியார் வாக்குக்கு அனுபூதியாக உள்ளக் குழைவும், ஆனந்த நீர்ப் பெருக்கும், மெய்ச்சிலிர்ப்பும் உண்டாகின்றது.

அகத்திலும் புறத்திலும் வழிபட்டு வந்த இப்பெரியாரின் வாக்கு முருக பக்தியிலீடுபட்ட அடியார்க்கு அமுதரசமாக அமைந்துள்ளது.

முருகனடியார் எவ்வாறு விளங்குவார்? எவ்வாறு முருகனை வழிபடுவார்? அவர்கள் உள்ளம் எத்தகையது? அவர்கள் பெறும் பாக்கியம் என்ன? என்ற வினாக்களுக்கு ஏற்ற மறுமொழியாக ஐந்தாவது பாட்டு மிக அழகாக அமைந்திருக்கின்றது. இப்பெரியார் ஒவ்வொரு பாட்டின் கடைசி அடியில் ''யான் செய்த பிழை யாதாயினு முளதேல் அதனை மன்னித்தருளுக'' என்று வேண்டுகின்றார்.

சகலலோக குருவாக விளங்கிய சங்கரபகவத்பாதாள் முருகனைக் குறித்து சுப்பிரமணிய புஜங்கம் என்னும் நூலை ஆக்கியுள்ளார்கள். அந்த நூலில் ஒருபாட்டு பின்வரும் கருத்தை விளக்குகின்றது.

தாயும், தந்தையும் மைந்தன் செய்யும் பிழையைப் பொறுப்ப தில்லையா? சகல ஜீவராசிகளுக்கும் நீர் தந்தை. யான் உமது சிறுகைப்பிள்ளை. என் பிழையை மன்னிப்பது உமது கடமையாகும். குருநாதருடைய இக்கருத்தையே ஒவ்வொரு பாட்டின் கடைசி அடியாகத் தொகுத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# "மாவை யமக அந்தாதி" நூலுக்கு

பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

"சொற்பொருள் உணர்த்தும் சொல்வன்மை"யின் இன்றியமையாமை தொல்காப்பியப் பாயிரத்திற் சொல்லப்பட்டது. இவ்வன்மையை விருத்தி செய்யும்பொருட்டு நிகண்டு, அந்தாதி, சிலேடை என்றிவைகளைக் கற்பிப்பது பழைய வழக்கம். வித்துவான்கள் சொற்பஞ்சம் இல்லாதவர்களாக இருந்தார்கள்.

ஒரு காலத்தில் வித்துவான்கள் இயற்றிக் குவித்த அந்தாதிகள் எண்ணில் அடங்காதவைகள்.

திரிபு, யமகம், நிரோட்டம், நிரோட்ட யமகம் என அந்தாதி வகைகள் பல திறப்பட்டவை.

அடிதோறும் முதலாம் எழுத்துத் தவிர இரண்டாமெழுத்து முதற் பல எழுத்துக்கள் ஒன்றுபட்டு வருவது திரிபு.

முதலாம் எழுத்து முதற் பல எழுத்துக்கள் ஒன்றுபட்டு வருவது யமகம். சொல்லும் பொருளும் தம்முள் வேறுபட்டிருக்க வேண்டும்.

மாவை யமக அந்தாதி சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய கல்வளை அந்தாதியை ஒத்தது.

கல்வளை என்ற சொல்லை யமகமாக அமைத்திருப்பது போல மாவை என்ற சொல்லை யமகமாக அமைந்திருப்பதை இவ்வந்தாதியிற் காணலாம்.

*மாவைய மாவைய முப்புரஞ் செற்றவர் மைந்ததரு*
*மாவைய மாவைய தாக்கிற் கடிகை வரைநிலைக்கு*
*மாவைய மாவைய மன்கொள வூண்ஞம லிந்நரிக்கா*
*மாவைய மாவைய வீதோநா னென்று வருந்தினனே.*

இவ்வந்தாதியைப் பாடியவர் மகாவித்துவான் பொன்னம்பலப் பிள்ளை அவர்கள்.

இவர்கள் பல்வேறு சித்திர கவிகளும் இயற்றியிருக்கின்றார்கள். இவ்வந்தாதிக்கு நல்லுரை கண்டவர் பேரறிஞர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள். இதனை வெளியிட்டவர்களின் விபரங்களை முன்னுரையிற் காண்க.

சி. கணபதிப்பிள்ளை

கலாசாலை வீதி,
திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை யமக அந்தாதி பற்றி

சித்தாந்த கலாநிதி, உரைவேந்தர்,

பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# உரையாசிரியர் கருத்துரை

**செ**ந்தமிழ்ப் பனுவலுள் சிற்றிலக்கிய வரிசையில் அந்தாதிச் சொற்றொடர்நிலை கீர்த்தி இடம்பெறுவதாகும். இற்றைக்கு முப்பதாண்டுகளுக்கு முன்னர் திருவேங்கடவன் கீழ்த்திசைக் கலைக்கல்லூரியில் யான் தமிழ்ப்பணி ஆற்றியபோது, ஈழத்தைச் சார்ந்த நண்பர் திரு. கருணாகரர் தெல்லியம்பதி கொல்லங்கலட்டி வித்துவசிரோமணி திரு. பூ. பொன்னம்பலபிள்ளை இயற்றிய மாவை யமக அந்தாதி என்னும் செந்தமிழ் நூலை என்னிடம் வழங்கி உரை எழுதுமாறு வேண்டினார். புலவர் திலகராகிய பொன்னம்பலபிள்ளையின் கலை நயமும், கவித் திறமும், புலமை மாண்பும் கவினுறக் காட்சிதரும் இந்நூலில் பாடல்களை யான் ஓதி மகிழ்ந்து உரை வரைந்தேன். யமகம் பாடும் தனித்திறனோடு சிவநெறிச் செம்பொருளையும் சேர்த்துச் செய்யுள் இயற்றும் மதுகை இவ் ஆசிரியர் பால் செறிந்து கிடப்பதை, இந்நூல் நலம் நுகர்வார் நன்கறிவர். தளர்வொடு மூப்பெய்தி இருக்கும் என் முன்னர் இந்நூல் புதுப்பொலிவோடு இன்று வெளியிடப் பெறுவது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. ஈழநாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் இன்தமிழ்ப் புலமையோடு சிவநலம் பேணும் செந்நெறி யுடையராய் விளங்குதல் வெள்ளிடைமலை. அன்பர் கருணாகரர் இவ்வுரை எழுதுமாறு என்னை ஊக்கிய பழைய நினைவுகள் என் நெஞ்சில் இன்றும் நடம்புரிகின்றன. செந்தமிழ்ப் பெருமானாகிய நாவலர் வழியினரான புலவர் திலகர் பொன்னம்பலபிள்ளையின் மருகராகிய திரு. சின்னத்தம்பி இதனை வெளியிடும் நற்பணியாற்று கின்றார். கன்றும் உதவும் கனி என்பதன்றோ முதுமொழி. ஈழமும், தமிழகமும் இந்நூலின் பயன்கொண்டு இன்புறுமாறு வேண்டுகின்றேன்.

ஔவை சு. துரைசாமி

ஔவை
33, இராசாசி சாலை,
காந்திநகர், மதுரை.
01 - 08 - 77



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மாவை யமக அந்தாதி

## ஸ்ரீ முகம்

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி**
**ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**
**ஸ்ரீ மடம், காஞ்சிபுரம்.**

முகாம்: காரைக்குடி தேதி: 3-3-1977

இலங்கையின் வரலாற்றுப் புகழ்பெற்ற மாவிட்டபுரத்தில் மிகவும் தொன்மையுடன் விளங்கும் ஆலயத்தில் ஸான்னித்யம் கொண்டிருப்பவரும் மாவிட்டபுரம் காங்கேயமூர்த்தி என்னும் பெயர் கொண்டவருமான முருகப் பெருமான்மீது எண்பத்தெட்டு வருஷங்களுக்கு முன் ஸ்ரீ பூ. பொன்னம்பலபிள்ளை என்னும் தமிழறிஞரால் இயற்றப்பட்டுள்ள மாவை யமக அந்தாதியை தமிழ்நாட்டுப் பேராசிரியர் ஸ்ரீ ஔவை துரைசாமிப் பிள்ளையைக் கொண்டு உரை செய்வித்து இந்த மூலத்தையும் உரையையும் நூல் ஆசிரியரின் மருகரான ஸ்ரீ அ. சின்னத்தம்பி என்னும் தொழிலதிபர் வெளியிட முன் வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

பக்தர்கள் இவ்வுயர்ந்த நூலின் மூலம் முருகபிரானை பூஜித்துக் கொண்டு இப்பெருமானின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

**நாராயண ஸ்ம்ருதி**

---

**திருப்பரங்கிரிப் புராணம்**

*பனிவரையின் மகளுதவ உண்டருளும் செங்கனிவாய்ப் பாலா போற்றி*
*குனிசிலைவேள் மிகநாண வடிவழகு கொண்டருளும் குமரா போற்றி*
*வினயமெழுஞ் சூர்கிளையை வேரறுக்க உளத்தில் வைத்த விருத்தா போற்றி*
*முனிவரும் கனியமிக வரங்குலவு பரங்கிரியின் முருகா போற்றி.*

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை யமக அந்தாதி நூலுக்கு

**சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளித்**

**தமிழாசிரியர், சங்கீதபூஷணம், புலவர்**

**மு. கு. புண்ணியகோடி அவர்கள் வழங்கிய**

# அணிந்துரை

**செ**ந்தமிழ் நாட்டின்கண் தோன்றிய பைந்தமிழ்ப் பனுவலிலுள்ள தொண்ணூற்றாறு வகையான பிரபந்தங்களுள் 'அந்தாதி'யும் ஒன்றாகும். ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள அடியையோ, சொல்லையோ, எழுத்தையோ அடுத்த செய்யுளின் முதலாகத் தொடுப்பது அந்தாதியின் இலக்கணமாகும். சுருங்கக் கூறின் அந்தத்தை ஆதியாகத் தொடுப்பது எனக் கொள்ளலாம்.

அந்தாதிகளுள் யமகம், திரிபு போன்றவற்றைப் பாடுவது அருமையும் பெருமையும் உடையதாகும். பன்னூற் பயிற்சியும், நுண்மாண் நுழைபுலமும், இறையருள் நலமும் இருந்தாலன்றி இந்நூலை இயற்றுவது என்பது அரிதினும் அரிதாகும். செயற்கருஞ் செயலைச் செய்து புலவர் பெருமக்களாற் போற்றப்பெறும் தகுதி வாய்ந்த மகாவித்துவான் பூ. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் "மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர் தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே" என்னும் புறநானூற்றுப் பொன்மொழிக்குச் சான்றாக விளங்கு கின்றார்கள்.

பல்வேறு சிறப்புக்களைத் தம்மகத்தே கொண்டு மிளிர்கின்ற இந்நூலைப் பின்வரும் சந்ததியினரும் படித்துப் பயன்பெற வேண்டு மென்னும் நன்னோக்கத்தால், புலவர் பெருமானின் மருகரும், 'எல்பிகெம் கவுஸ்' கம்பனியின் உரிமையாளருமான திரு. அ. சின்னத்தம்பிப்பிள்ளை அவர்கள் இந்நூலை வெளியிடுகின்றார்கள்.

ஈழத்தைச் சேர்ந்த புலவர் பெருமானால் இயற்றப்பெற்ற இந்நூலுக்குத் தமிழகத்தைச் சேர்ந்த, சித்தாந்த கலாநிதி திரு. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையெழுதியிருப்பது தாய்நாட்டிற்கும், சேய் நாட்டிற்கும் உள்ள உறவைத் தெள்ளத்தெளிய விளக்குவதாகும்.

தம் முன்னோர்களின் அறிவுக்கருவூலமாக விளங்கும் இன்னோரன்ன அருள் நூல்களை வெளியிட முன்வந்துள்ள திரு. அ. சின்னத் தம்பிப்பிள்ளை அவர்கள் எல்லா நலன்களையும் இனிது பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சென்னை 7-8-77 **வணக்கம்** **மு.கு. புண்ணியகோடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவை யமக அந்தாதி நூலுக்கு

யாழ்/வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயப்
பண்டித, பாலபண்டித வகுப்புக்களின் தலைமையாசிரியர்
பண்டிதமணி, வித்துவான், ந. சுப்பையபிள்ளை அவர்கள் எழுதிய

# அணிந்துரை

*'மாவை யமக அந்தாதி' என்னும் பெயர்க் காரணம்:-*

***மா***வை (மாவிட்டபுரம்) நகரின் கண்ணே கோயில் கொண்டெழுந் தருளிய முருகக் கடவுள்மீது யமகம் என்னும் சொல்லணி (மடக்கணி) பொருந்தப் பாடப்பட்ட அந்தாதியென்னும் பிரபந்தம் (நூல்) என்ற காரணத்தால் இந்நூலுக்கு வந்த பெயராகும் இது.

அப்பிரபந்தம் **செய்யுளந்தாதித் தொடை** பொருந்த நூறு கட்டளைக் கவித்துறையினாலாவது, வெண்பாவினாலாவது பாடப்பெறுவதாகும். இந்நூலாகிய பிரபந்தம் கட்டளைக் கவித்துறையினாற் பாடப்பெற்றது.

செய்யுளந்தாதித் தொடையாவது ஒரு செய்யுளின் இறுதி பின்வருஞ் செய்யுளுக்கு முதலாக வரத் தொடுக்கப்படுந் தொடை யாகும். ஈண்டு இறுதியென்றது செய்யுளீற்றிலுள்ள சீர், அசை, எழுத்து இவற்றுள் யாதேனும் ஒன்றினை. அன்றியும், இப்பிரபந்தத்தின் இறுதி மண்டலித்து வந்து நூலின் முதலாஞ் செய்யுளின் முதலோடு அந்தாதித் தொடையாகத் தொடுக்கப்படும். இத் தொடைக்குப் பெயர் **மண்டல அந்தாதி** என்பர். மண்டலம் - வட்டம் (ஸ்ரீ வட்ட வடிவமாகச் சென்று பொருந்தும் அந்தாதித் தொடை). அது இந்நூலின் கண்ணே நூறாஞ் செய்யுளின் இறுதிச் சீராகிய 'மகிழ்ந்திருமே' என்றதில் இரண்டாம் அசையாகப் பிரியும் 'திரு' என்பது, இந்நூலின் முதலாஞ் செய்யுளின் முதற் சீராகிய 'திருமா' என்றதில் முதலாம் அசையாக வரத் தொடுக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

இனி, இந்நூலில் அமைந்த மடக்கணியின் இயல்புகளைப் பற்றி ஆராய்வோம். அவை தமிழ்த் தண்டியலங்கார நூலிலே சொல்லணியியலில் விரித்துக் கூறப்பட்டுள. அவை வருமாறு:

*ஒரு செய்யுளில் முன்வந்த எழுத்துக்கூட்டம் பின்னும் வந்து*
*வேறு பொருள் தருதலுடையது மடக்கணியாகும்.*

(தண்டியலங்காரம் - சூத்திரம் - 90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# மாவை யமக அந்தாதி

# நூலாசிரியர் வரலாறு

**பொ. கருணாகரர்**

***யா***ழ்ப்பாணத்தில் தெல்லிப்பழைக் கிராமத்தின் ஒரு பகுதியாகிய கொல்லங்கலட்டி என்னும் ஊரே வித்துவான் பூ. பொன்னம்பலபிள்ளை அவர்களின் பிறப்பிடமாகும். விசுவநாத முதலி கோத்திரத்திலே தோன்றிய **பூதப்பிள்ளை** என்பவரே இந்நூலாசிரியரின் தந்தையாராவர். தண்டிகைக் கனகராய முதலியின் வழித்தோன்றிய சுப்ப உடையாரின் மகன் சங்கரப்பிள்ளை என்பவரின் மகள் சின்னாச்சிப்பிள்ளையே வித்துவானின் தாயார் ஆவர்.

வித்துவான் அவர்கள் 1845ஆம் ஆண்டில் பிறந்தவர் என்று அனுமானிக்கப்படுகின்றது. மாவை யமக அந்தாதியைப் பாடிச் சென்னையில் சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையில் 1889இல் அச்சிடுவித்து வெளியிட்டார். இவர் சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கல்வி கற்பித்துக் கொண்டிருந்து நாற்பத்தைந்தாவது வயதில் 1890ஆம் ஆண்டில் தில்லை நடராஜப் பெருமானின் திருவடி நீழலை அடைந்தார் என்று அறிகின்றோம்.

எங்கள் வித்துவான் பொன்னம்பலபிள்ளை அவர்கள் வாழ்ந்த காலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்தையும், தமிழையும் வளர்த்துக் கொண்டிருந்த காலமாகும். இவர் யாரிடம் கல்வி கற்றார் என்பதை நன்றாக அறிய முடியவில்லை.

1887ஆம் ஆண்டு (சர்வசித்து வருஷம்) "மாவை இரட்டைமணிமாலை" என்ற நூலை இயற்றி யாழ்ப்பாணத்திலேயே வெளியிட்டார். சித்திரகவி பாடுவதிலும் மிகுந்த புலமையாளர் என்பதை இவர் பாடி வெளியிட்ட இரட்டை நாகபந்தம், தேர் வெண்பா, மாலைமாற்று ஆதியாம் செய்யுட்களால் அறியலாம். பல செய்யுட்களையும், கட்டுரைகளையும் அப்போது வெளிவந்த 'உதயபானு'ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளார். அவை கிடைக்கப் பெறாமை கவலையே.

பொற்கலம்தம்பை,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## மாவை தண்டபாணி திருப்பதிகத்துக்கு

பண்டிதமணி

சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

'அளவையூர்ச் சஞ்சீவி' என வழங்கும் ஆசிரியர் திரு. சீ. விநாசித்தம்பிக்கு, இளமை தொட்டே பல்வேறு சித்திகளுங் காட்சிகளும் அமைந்திருக்கின்றன. இதனை அவர் பலமுறை எனக்கு எடுத்துச் சொல்லியதுண்டு. இவற்றின் மூல தத்துவம் அறிதற்கரியது. இவ்வாறாகிய நிலை கைகூடியவர்கள், அந்நிலையை வேத நெறிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

திரு. விநாசித்தம்பி அடைந்த சித்திகளுட் பாடற் சித்தியும் ஒன்று. சொற்களும், பொருளும் அவருக்கு அநாயாசமாகவே வந்து கொண்டிருக்கின்றன. மனனஞ் செய்துவைத்த பாடல்கள் வருவதுபோலத் தங்கு தடையின்றிப் பாடல்கள் தமக்கு வருகின்றன என்கின்றார்.

மாவையூர் - தண்டபாணி திருப்பதிகத்தையும் அதனை அடுத்துவரும் பாடல்களையும் இனி வெளிவரவிருக்கும் திருச் செல்வச்சந்நிதிப் பெருமான் திருப்பதிகத்தையும் அவரே பாடிக்காட்டக் கேட்டுப் பெரிதும் ஆராமையுற்றேன். அன்பர்கள் அவரது பாடற் சித்தியைக் கண்டு அவருக்குச் சூட்டிய பட்டம் 'அருட்கவி'.

திரு. விநாசித்தம்பி தமக்குக் கிடைத்த சித்தியை வைதிகப்படுத்தித் தமக்கும் பிறர்க்கும் பயன் செய்வாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவை முருகன் தல வரலாறு

**மாவை ஆதீனகர்த்தா, சிவாகம வித்தியாபூஷணம்**

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்**

*நீரகத் தேதனை நினையு மன்பினோர்*
*பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்*
*தாரகத் துருவமாந் தலைமை யெய்திய*
*ஏரகத் தறுமுக னடிகள் ஏத்துவாம்.*

***வா***யுதேவனால் பொன்மாலையாகிய மகா மேருவினின்றும் பறித்தெறியப்பட்ட சிகரங்களுள் ஒன்று ஈழநாடு எனப்படுகிறது. ஈழம்-பொன். பலவளம் நிறைந்த ஈழம் எனப்படும் இலங்கை கந்தபுராணம், இராமாயணம், பாரதமாகிய புராண, இதிகாசங்களாற் புகழ்ந் துரைக்கப்படுகின்றது. அது, குபேரன், இராவணன், விபீஷணன் ஆகியோரால் ஆளப்பட்டது. சைவமும், தமிழும் தனிநடமாடுதற் கிடமாயது. தேவாரப்பதிகப் பாடல்பெற்ற திருகோணமலை, திருக்கேதீச்சரம், திருப்புகழ் பாடல்பெற்ற கதிரமலை ஆகிய தொன்மைநலம் வாய்ந்த திருத்தலங்களைத் தன்னகத்தே கொண்டது.

இவ்விலங்கையின் சிகரமெனச் சிறந்தது அதன் வடபாலுள்ள யாழ்ப்பாணமென்னும் திவ்விய நகர். அந்நகரின் வடபால் கடல் மருங்கில் 'கண்டகி' என்னும் புனித தீர்த்தம் உள்ளது. அது இன்று கீரிமலை என வழங்கப்படுகிறது. அதில் நீராடி உடலுயிர்ப் பிணிகள் நீங்கினோர் பலர் என்பது வரலாறு.

கீரிமுகமுடைமையால் நகுல முனிவர் எனப்படும் முனிசிரேட்டர் ஒருவர் அத்தீர்த்தத்து நீராடி அதன் மருங்கிற் கோவில் கொண்டருளிய திருத்தம்பலேசுவரி சமேத திருத்தம்பலேசுவரப் பெருமானை வழிபட்டுத் தமது கீரிமுகம் மாறப்பெற்றார் என்பது வரலாறுகளில் ஒன்று. கீரிமலை என்னும் பெயருக்குக் காரணம் இந்நிகழ்ச்சியே என்பது வழக்கு. அம்முனிவராற் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தியே நகுலேசுவரப் பெருமான் என்பர். திருத்தம்பலேசுவரம் போர்த்துக்கேயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டது. இப்போதுள்ள சிவாலயம் நல்லை நாவலர்பெருமான் கருத்தின்படி இற்றைக்கு நூறு வருடங்களின் முன் அமைக்கப்பட்டது.

குன்மநோயும், குதிரைமுகமும் கொண்டவளாகிய திசையுக்கிர சோழனின் மகள் மாருதப்புரவீகவல்லி என்னும் அரசிளங் கன்னி சோழ நாட்டினின்றும் இங்கு வந்து தங்கி, தீர்த்தமாடிச் சிவாலய தரிசனம் செய்யும் நியமம் பூண்டு அதன் பயனாக நோயும் நீங்கி முகமும் மாறப்பெற்றாள் என்பது மற்றோர் வரலாறு. அவள் தங்கியிருந்த இடம் 'குமாரத்தி பள்ளம்' என இன்றும் வழங்கப்படுகிறது. அவள் அரசிளங்குமாரியாதலின் தான் சேமமாக வாழ ஓர் அரண்மனை அமைத்திருந்தாளென்றும் அவ்வரண்மனைக்கருகே அவள் தோண்டுவித்த தடாகமே மகா ஒளதாரியப் பிரபுவாகிய திரு. சர. சிவானந்தபிள்ளை அவர்களின் வீட்டின் கீழ்பால் தூர்ந்த நிலையில் இன்றும் காணப்படும் தடாகம் என்றும் கூறுவர். எவ்விடத்தில் அவளது குதிரைமுகம் மாறியதோ அவ்விடம் மாவிட்டபுரம் என வழங்கப்படுகிறது. (மா - குதிரை. இங்கே அது குதிரை முகத்தை உணர்த்துகிறது. விட்ட - நீங்கிய, புரம் - நகரம்.)

இளமை எழில் நலம் தனக்கு வாய்த்தபோது அவளுக்கு அந்நலம் என்றும் அமைந்த முருகப் பெருமானின் எண்ணம் வந்தது போலும். அதனால் முகம் மாறிய அவ்விடத்தில் முருகனுக்கு ஆலயம் எடுக்கக் கருதி அக்கருத்தைத் தன் தந்தைக்குத் தெரிவிக்க, அவன் மகிழ்ந்து, ஆலய அமைப்புக்கு வேண்டிய யாவற்றையும், விக்கிரகங்களையும், தொழிலாளர்களோடும், சிதம்பரம் தீட்சிதர்களாகிய பெரிய மனத்துள்ளார், சின்னமனத்துள்ளார் என்னும் அந்தணப் பெரியார்களோடும் அனுப்பி வைத்தனன். ஆலயம் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டது. அவளால் பிரதிட்டை செய்யப்பட்ட மூர்த்தியே இன்றும் நாம் வழிபாடு செய்யும் மூர்த்தியாகும். அன்றிலிருந்து சிவாகம முறைப்படி நித்திய பூஜைகளும், வெள்ளிக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம் பொருந்திய நாள் ஆகிய காலங்களில் விசேட பூஜைகளும், வருடந்தோறும் ஆடி அமாவாசை யன்று 25ஆம் திருவிழாவாகிய தீர்த்தத் திருவிழாவும், அதற்கு முதல்நாள் தேர்த் திருவிழாவும் அமைய 25 திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. தீர்த்தத் திருவிழாவுக்கு முருகப் பெருமான் கீரிமலையிலுள்ள கண்டகி தீர்த்தத்திற்கு எழுந்தருளுவர். கலியுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதனாகிய மாவைக் கந்தப்பெருமான் அடியவர்களுக்கு இன்னருள் புரிந்து அவர்களை இரட்சித்து வருகின்றார்.

வழிவழிவந்த மாவைக்கந்தன் அடியார் பரம்பரையில் தோன்றியவரே இந்நூலாசிரியர். அவர் இளமையிலிருந்தே சிறந்த முருகபக்தர். அப்பக்தியின் வெளிப்பாடே 'மாவை யமக அந்தாதி' என்னும் இவ்வரிய நூலாகும்.

ஒளதாரியப் பிரபுவும், பரோபகாரியும், சித்தாந்தச் செல்வரும், தமிழபிமானியும், முருகபக்தரும், தொழிலதிபரும், நூலாசிரியரின் மருகரும் ஆகிய திருவாளர் அ. சின்னத்தம்பி அவர்கள் இந்நூலின் மூலத்தை அச்சிடுவித்த காலத்தில் உரைகாண்டற்கரிய இந்நூலுக்கு உரைகாணப்படின் யாவருக்கும் பயன்தரும் என்று கருதி தக்கார் ஒருவரைக்கொண்டு உரை செய்வித்துத் தருமாறு சித்தாந்தச் செம்மல் கருணாகரர் அவர்களிடம் வேண்டினார். அவர், அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி சென்னை சென்று அப்போது சைவ சித்தாந்த மகா சமாசக் காரியதரிசியாக இருந்த அன்பர் திரு. ம. பாலசுப்பிர மணிய முதலியார் B. A., B. L. அவர்களிடம் தமது கருத்தினை வெளியிட்டார். முதலியார் அவர்கள் மனமுவந்து திருப்பாதிரிப் புலியூரிலிருந்த சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ. சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளிடம் இதனை விண்ணப்பித்தனர். அவர்கள் இந்நூலை வாசித்து மகிழ்ந்து 'இதற்குரை காணத்தக்கவர் வித்துவான் ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்தான்' என்று திருவாய் மலர்ந்தனர். ஞானியார் சுவாமிகளின் அருளாசி கொண்டு முதலியார் அவர்கள் வேண்ட வித்துவான் ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரைகண்டுதவினார்கள். அவர்கள் செய்த உதவி நூலாசிரியர் குடும்பத்தினரால் மட்டுமன்றிச் சைவத் தமிழ் உலகத்தினராலும் என்றும் மறக்கற்பாலதொன்றன்று. மாவைக்கந்தன் கருணை எங்கும் என்றும் நிலவுக.

இந்நூலை வெகு அழகாகவும், சிறப்பாகவும் இவ்வையகமே பெரும் பயன் பெறத்தக்கதாக அச்சுவாகனமேற்றி வெளியீடு செய்துவைத்த எமது அன்பர் திரு. அ. சின்னத்தம்பி அவர்கட்கும், அவரது செல்வக் குமாரர்களான சட்டத்தரணி திரு. கிருஷ்ணராசா B. A., LLB. பிரபல வர்த்தகர் திரு. வரதராசா என்பவர்கட்கும் மாவை முருகனது திருவருள் அபரிமிதமாகச் சொரிய வேண்டுமென்பது எமது பிரார்த்தனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## கந்தரலங்கார விரிவுரையைப் போற்றிய

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின்

# பிரார்த்தனை உரை

*திருமுருகன் முத்தமிழால் வைதாரையும்*
*வாழ்விக்கும் திருவருட் பிரபு*
*"பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த*
*ஐயன்" அந்த மகாப்பிரபு.*

அருணகிரிநாதர் திருமுருகன் திருவருளில் முழுகி அவனருளால் அவனைப் பாடியவர்.

அருணகிரிநாதர் அருளிய கந்தரலங்காரம், பிரபஞ்சமாகிய சேற்றில் புதைந்து, அழுக்கேறி கிடப்பவர்களுக்கும் வழிசெய்து, புனிதஞ் செய்வதொரு புனித தீர்த்தம்.

கந்தரலங்காரத் தீர்த்தத்தில் ஒரு துளியாகி ஒரு பாடலைத் தானும் படித்துக் கேட்டுச் சிந்திக்கும் வாய்ப்பு ஒருவருக்குக் கிடைக்குமாயின் பிறந்ததன் பயனைக் கிட்டியதாகும்.

*"சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார் யமன் சண்டைக்*
*- கஞ்சார்*
*துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்*
*கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்கும் கந்தன்*
*- நன்னூல்*
*அலங்கார நூற்று ளொருகவி தான் கற்றறிந்தவரே"* எனக் கந்தரலங் கார விசேடம் சொல்லப்படுதல் சிந்திக்கத்தக்கது.

மாவைத் திருமுருகன் சந்நிதியில் கந்தரலங்கார விரிவுரை சுக்கிர வாரந்தோறும் நடப்பது போற்றற்பாலது. அது நல்லதொரு கைங்கரியம். அக்கைங்கரியம் பண்டிதர் திரு. மா. குமாரசுவாமிக்குப் பிதிரார்ச்சித மாயமைந்திருக்கிறது.

அவர் தந்தையார் பிரசித்தி பெற்ற சைவப் பிரசாரகராகிய மாணிக்கத் தியாகராச பண்டிதர் அவர்கள். தமிழ் வழங்கும் இடமெல்லாம் பிரசங்கமாரி பொழிந்த செஞ்சொற் கொண்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம ஷேத்திரத்தில் உற்சவ காலங்களில் திருமுருகனின் அருட் பிரவாகத்தை மாணிக்கத் தியாகராச பண்டிதர் ஆண்டு தோறும் உபந்நியாசித்து, முருகபக்தியைப் பெருக்கி வந்தது உலகப் பிரசித்தம். அத் தொடர்பில், மாவை முருகன் சந்நிதியில் பண்டிதர் குமாரசுவாமி கந்தரலங்கார உபந்நியாசம் நிகழ்த்தி வருவது, 'மகன் தந்தைக் காற்று முதவி' என்ற திருக்குறளை ஞாபகஞ் செய்வதாயிருக்கின்றது.

மாவையாதீனம் திரு. குமாரசுவாமி அவர்களுக்கு "செஞ்சொற் புலவர்" என்ற பட்டத்தோடு விருதும் வழங்கிச் சந்மானிப்பது நல்ல முன்மாதிரிகை.

இச்செயல் முருக பக்தர்களையும், சைவப் பிரகாசர்களையும் பெருக்கி மேன்மேலும் நன்மை பெருகுவதற்கு வழி செய்வதாக என்று வேண்டுதல் செய்து மாவைத் திருமுருகன் மலரடிகளைப் பிரார்த்திப்போமாக.

(மாவைக்கந்தன் கோவிலில் பண்டிதர் மா. குமாரசுவாமி அவர்களின்
கந்தரலங்கார விரிவுரையின் நிறைவு நாளில்
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**
அவர்கள் வழங்கியது)

---

## திருச்செந்தூர்த் தலபுராணம்

*உலகத்தின் முதலாய்நின்ற ஒரு தனிப் பொருளே போற்றி*
*கலைகட்கும் உணரவொண்ணாக் கருணைவாருதியே போற்றி*
*மலைவிற்கைப் பெருமான் கண்ணின் வந்த மாமணியே போற்றி*
*புலமைக்கும் தலைமையான புண்ணியா போற்றி போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**இந்து சாதனம் பத்திராதிபர், சைவப் பெரியார்**
**நம. சிவப்பிரகாசம் அவர்கள்**

# கந்தர் 'மாவை வெண்பா' வுக்கு வழங்கிய பாயிரம்

'முன்னுரை மான நன்னயங் காட்டிச்
சொன்னிவிப் பாயிரம் பொன்னெழில் புகழ்வது'

### வெண்பா

மாவைக்கந் தன்பால் மனம்விட்டுப் பத்திவெண்
பாவைக்கும் பண்டிதப் பண்பாளன் - நாவைச்சொல்
ஆரமமைக் கப்பயன் ஆக்குமா ணிக்கக்கு
மாரசுவா மித்தமிழ்க்கோ மான்.

### அகவற்பா

சித்தத் தெளிவாய்ப் பக்திப் பரவசம்
சித்தி தெருட்ட எத்திக் கும்குகன்
அத்தன் அவனெனப் புத்தி பொலிய
மூர்த்தித லதீர்த்தம் ஆர்த்தவிம் மூன்றும்
நேர்த்தி நிகழும் சீர்த்தித் தலமோ
மாவை, மற்றிலை! தேவும் செந்திலோன்
யாவும் குகனே பாவும் அவற்கே,
என்றே பிரேமை நன்றே பெருக
குன்றாம் இதயம் குன்றே யாகி
அன்பாம் அருவி இன்பா யூற,
அங்குநீ ராடத் தீங்கவி வெண்மலர்
வெண்பா மாலை ஒண்தொடை யாக
அமைக்கும் அர்ச்சனை உமைக்கும் இறைக்கும்
கண்ணுதற் கதிராய்ப் பெண்சுடர் கார்த்திகைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவணப் பொய்கையில் அரனா றுசின்னம்
கந்தென வமைந்த கந்தனுக் காகும்
உபயம் இதனை அபய மென்றே
ஈந்தனன்
மாணிக் கமாந்ஸ்ரீ மாணிக் கத்தி
யாக ராஜ் யோகவு பவாச
குருவின் சுதனார் கருவிலே கலைஞர்
குமார சுவாமி குமார வேள்போற்
றாதைக் கும்பொருள் போதிக் கவல்லார்
சுன்னைப் புலவர் மன்னிய மயிலணி
வித்தியா சாலை மெத்தகு மதிபர்
தந்தையின் கலையும் சந்தமும் முதுசொம்
வந்தெனப் போற்றிச் செந்தமிழ் உரைசங்
கீத நுண்மை போத வண்மை
படைத்த பண்டிதர் படைத்த வெண்பா
கடைத்தமிழ்ச் சங்கத் திடத்த தாமெழில்
அணிநனி யமைந்த கணவலங் கார
நூலிது மாவை வேலவ ரடியார்
சாலத் துதிக்கவிக் காலத் தின்னல்
நீங்கி நிம்மதி ஓங்க உணர்த்தும்
சேவலும் மயிலும் மேவரும் வேலும்
மாவை முருகன் ஏவலிற் றோன்றி
அருச்சனை வெண்பாப் பொருட்சுவைச் செறிவாய்
ஈழம் இலங்க வாழுநர் துலங்க
ஆளும் மொழியாய் மீளச்
செந்தமிழ் ஓங்கும் செவ்வேள் அருளியே.

மல்லாகம்.
1 - 3 - 88

**நம. சிவப்பிரகாசம்**
அகில இலங்கை
இந்து மகாசபைத் தலைவர்
(சட்டத்தரணி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை ஆதீனகர்த்தா, சிவாகம வித்தியாபூஷணம்

மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்

# கந்தர் 'மாவை வெண்பா' வுக்கு வழங்கிய முன்னுரை

"சைவசமயமே சமயம்", "சைவத்தின் மேற் சமயம் வேறில்லை" என்றெல்லாம் சான்றோர்களாற் போற்றப்படும் சைவசமயத்தின் உயரிய தத்துவங்களையும், உண்மைகளையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவன சைவத் திருமுறைகளும், புராணங்களுமேயாகும். பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணமாகிய மூன்றும் இறைவனின் முச்சுடர் போன்ற சிறப்புடையவை.

இப்புராணங்களின் கதைகளூடாகச் சமய உண்மைகளை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டச் சங்கீத கதாப்பிரசங்கம், உபந்நியாசம் செய்து, சைவநன்மக்களை பக்திவயப்பட வைத்தவர், இற்றைக்கு 42 ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நற்சைவசீலர், சுன்னாகம் குரு சி. மாணிக்கத் தியாகராஜ பண்டிதர் அவர்கள் ஆவர். இவர்கள் சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் தலைசிறந்த மாணவர். "கேட்டார்ப் பிணிக்குந் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியு"ஞ் சொல்லாற்றல் மிக்கவர். நாணிக்கண் புதைக்கும் வண்ணம் நான்முகன் தேவியாரும் வாணிக்கும் வகைகள் சொல்லும் வண்சபைச் சிங்கம், ஈழம்முதல் தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் சென்று செந்தமிழாற் சைவப் பணி செய்தவர். சபையோரை தன்பாலிழுக்கும் உருவும், உடையுங் கொண்டவர். இவரின் பிரசங்கங்களைக் கேட்ட பெரியோர்கள் இன்றும் இவரின் சொல்லாற்றலை, அடுக்கு மொழியை, சொல்லும் பாணியை சொல்லிச் சொல்லி மகிழ்வர்.

பண்டிதர் அவர்களின் தவப்புதல்வன்றான் - குமாரசுவாமி அவர்கள் - நல்லாசிரியராகி சுன்னாகம் மயிலணி சைவ மகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயத்தில் 38 ஆண்டுகள் உதவியாசிரியராகவும், தலைமையாசிரியராகவும் சேவையாற்றி மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர். முறையாக வித்துவசிரோமணி கணேசையா அவர்களிடம் பண்டித வகுப்புப் பாடம் கேட்டவர். தந்தையார் போல் உபந்நியாசம் செய்வதில் திறமை மிக்கவர். முருகனிடம் அளவற்ற காதல் கொண்டவர். உள்ளம் நெகிழப்பாடி மெய்மறந்து நிற்பவர். சைவப் பணியே தம்பணியாகக் கொண்டு, மாவை முருகன் ஆலயத்தில் கந்தரலங்காரம், கந்தரநுபூதி பாடி வருடக் கணக்காக விளக்கவுரை நிகழ்த்தியவர். கைமாறு கருதாது செய்த சைவப் பணியைப் பாராட்டி 1970ல் மாவையாதீனம் "செஞ்சொற் புலவர்" பட்டமும், விருதும் அளித்துக் கௌரவித்தது. செஞ்சொற் புலவர் பண்டிதர் குமாரசுவாமி அவர்கள் மாவைக் கந்தன் மேற்கொண்ட மாறாக்காதலால் உள்ளமுருகி "அவனருளால் அவன்றாள் வணங்கி" செஞ்சொற் புனைமாலை யொன்றை நூற்றியொரு வெண்பா மலரால் தொடுத்து முருகன் திருவடிக்கு அர்ப்பணித்துள்ளார்.

சொல், பொருள், அணி, நயம், பக்தி மிக்க இப்பாடல்கள் பாடும் அடியார்தம் உள்ளத்தைப் பாகாக்கிவிடும். சக்திமிகுந்த மந்திரமலர் மாலையாய் அமைந்துள்ளன. இந்நூலில், கந்தவேளின் சிறப்பு, வீரம், அடியார் முறையீடு, மரண பயம், தொழுவார் பெறும்பயன், தலச்சிறப்பு, அருள்பெற்ற அடியார்கள், நெஞ்சறி வுறுத்தல் ஆகியன அமைந்திருக்கக் காணலாம். நித்தியபாராயணம் செய்யக் கூடியது. அடியார்கள் பாராயணம் செய்து மாவைப் பெருமானின் அருள் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

செஞ்சொற்புலவர் பண்டிதர் மா. குமாரசுவாமி அவர்கள் மேலும் பல சைவப் பணிகள் தொடர்ந்து செய்து நீண்டநாள் வாழ கந்தன் திருவடி போற்றி அன்புற வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருவியின் 'வாழ்வு பெற்ற வல்லி' நாடக நூலுக்கு

# அணிந்துரை

**கலாநிதி சு. வித்தியானந்தன் M. A., ph. D.**

**இலங்கைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் விரிவுரையாளர்**

**முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.**

**க**டந்த சில காலமாக ஈழத் தமிழகத்தின் பல்வேறு துறைகளைப் பற்றிய நூல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. வரலாற்றாராய்ச்சி யிலிருந்து, நாட்டுப்பாடல் ஆய்வுரை, ஈழத்திலே வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு, இலக்கியம், சமயம் முதலிய பல துறைகளைத் தழுவும் நூல்கள் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். பொதுவாகக் கலை, இலக்கியத் துறையில் தோன்றியுள்ள புதுவிழிப்பானது மெல்ல மெல்ல நாடகத் துறையிலும் தலைகாட்டத் தொடங்கியுள்ளது.

இலங்கை வரலாற்றிலே குறிப்பிடத்தக்க சில காலப்பகுதிகளில் வாழ்ந்த சில ஆடவர், பெண்டிரைக் கற்பனை நயத்துடன் நாடகப் பாத்திரங்களாக மாற்றும் முயற்சி இக்காலத்திற் சில இளம் ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்டு வருவது பாராட்டத்தக்கது. சிறுகதை, நாவல், கட்டுரை முதலிய பிற துறைகளில் உழைத்த சில எழுத்தாளர்கள் அண்மையில் நாடகத் துறையில் அடியெடுத்து வைத்திருப்பது விரும்பத்தக்கதே. இத்தகையோருள் ஒருவரே இந்நூலாசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் அவர்கள்.

செவிவழிச் செய்தியாகவும், 'யாழ்ப்பாண வைபவமாலை' போன்ற நூற்செய்திகளாகவும் வழங்கும் கதையொன்றினை எடுத்துக்கொண்டு, அதனை நாடகமாக்கியுள்ளார் ஆசிரியர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரலாறே நாடக நூற்பொருள். இக்கோயில் கட்டியமைக்கக் காலாகவிருந்த சிவநெறிச் செல்வர், செல்வியர் சிலரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நாடகப் பாத்திரங்களாகக் கொண்டுள்ள ஆசிரியர் அப்பகுதியில் வாழ்பவர், அந்தப் பிரதேச மண்ணில் ஊறித் திளைத்தவர், வரலாற்றுணர்வுடன் மரபுவழிச் செய்திகளையும், மக்கள் தம் உணர்ச்சியையும் அறிந்தவர். இவை யாவற்றையும் ஆதாரமாகக் கொண்டு சோழ நாட்டுடன் ஈழவள நாட்டை இணைத்து, மானிடக் காதலும், தெய்வீக அன்பும் பின்னிப் பிணைந்து மின்னும் சிறந்த இன்பியல் நாடகமொன்றினை உருவாக்கியுள்ளார்.

ஆசிரியரது ஆழ்ந்த இலக்கிய அறிவு, நூல் முழுவதும் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. தேவாரம், குறள், நாட்டுப் பாடல், பிற்காலக் கீர்த்தனங்கள், ஆகியவற்றிலிருந்தெல்லாம் மேற்கோள்களும், சொற்றொடர்களும் ஆங்காங்கு பொருத்தமான இடங்களிற் பொறிக்கப்பட்டுள்ளமை கற்றோரையும், மற்றோரையும் களிப்பூட்டுவதாகும்.

நாடகத் துறையிற் பல்லாண்டுகள் ஆர்வமுடனுழைத்து வரும் ஆசிரியரின் இம்முயற்சியை நாம் மனமாரப் பாராட்டுகின்றோம். "வாழ்வு பெற்ற வல்லி" என்னுமிந்நாடகம் வாழ்வு பெற்றுவரும் ஈழத் தமிழ் நாடகக் கலைக்கு உறுதுணை செய்யும் என்று நம்பலாம்.

---

## சுப்பிரமணியர் துதி

*சேந்தனை கந்தனை செய்கேட்டு வெற்பனை செம்சுடர்வேல்*
*வேந்தனை செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்கு வள்ளி*
*காந்தனை கந்தக் கடம்பனை கார்மயில் வாகனனை*
*சாம்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லையே.*

-கந்தரலரங்காரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாழ்வு பெற்ற வல்லி' நாடக நூலுக்கு அணிந்துரை

கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்கள்

***மா***ருதப்புரவீகவல்லியின் வரலாறு, யாழ்ப்பாணச் சரித்திரத்தில் மிக முக்கியம் பெற்றது. யாழ்ப்பாணத்திற் சமயவிருத்தி, சமூகவிருத்தி, பொருளாதாரவிருத்தி இவைகளெல்லாம் மாருதப்புரவீகவல்லியின் வருகையினாற் பெரும்பாலும் முன்னேற்றமடைந்தன என்பது மறுக்கத்தக்கதன்று.

இந்த இளவரசியின் வரலாற்றைக் கொண்டு ஒரு நாடகத்தைச் சரித்திரமறிந்த யாராவது சிருஷ்டிப்பார்களோ என்று வெகுகாலமாக எதிர்பார்த்திருந்தேன். இக்குறையை நிவர்த்தி செய்ய முன்வந்த திரு. த. சண்முகசுந்தரம் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

கதை அமைப்பு, வசனங்கள் யாவும் மிகவும் சிறந்தனவாக இருக்கின்றன. தற்காலத்து இளைஞரைக் கொண்டு இந்த நாடகத்தை நடிக்கச் செய்வதால் அவர்களின் பாஷையும், கலையும், முன்னேறும் என்பதே என் கருத்து.

இந்நாடகத்தைச் சிறப்பாக நடாத்த விரும்பும் இயக்குநர், சிற்சில இடங்களிற் காட்சி அமைப்புக்களை அமைப்பதில் நுண்ணிய கவனஞ் செலுத்த வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

இப்படிச் சிறந்த முறையில் நாடகங்களை இயற்றி நமது நாட்டில் நாடகக் கலையை வளர்ப்பதில் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் மேலும் மேலும் உதவி புரிவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோவிற் கடவை' என்ற நூலுக்கு

வழங்கிய

# முன்னுரை

வாசீக கலாநிதி. கி. வா. ஜகந்நாதன்
கலைமகள் ஆசிரியர், சென்னை.

தமிழ் மக்களுக்குத் தல வழிபாட்டில் அளவற்ற விருப்பம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. தமிழ்நாடு கோயிலாற் சிறப்புப் பெறுவது தமிழ் நாட்டு அரசியலார் கோயிற் கோபுரத்தையே தம் சின்னமாகக் கொண்டிருக்கின்றனர். ''ஊரானோர் தேவகுலம்'' என்ற பழைய மேற்கோள் வாக்கியத்தின்படி அங்கே ஊருக்கு ஊர் கோயில்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டு மன்னர்கள் போட்டி போட்டுக் கொண்டு கற்கோயில்களைக் கட்டிப் பூசை நடக்கும்படி செய்தனர். அருளாளர்களாகிய நாயன்மாரும், ஆழ்வார்களும் தலங்களுக்குச் சென்று வழிபட்டு அங்கங்கே உள்ள மூர்த்திகளைப் பாமாலையால் அணி செய்து வழிபட்டனர். இறைவன் அந்தத் திருப்பாடல்களில் ஈடுபட்டு மகிழ்ந்தான். சுந்தரமூர்த்தி நாயனாரைத் தேவாரப் பதிகங்கள் பாடும்படி பணித்தான் என்பது வரலாறு. ''மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்'' என்பது பெரிய புராணம். அந்த அருளாளர்கள் அருளிய திருப்பாடல்கள் முறையாகப் பாராட்டப் பெறுகின்றன. கற்கோயில்களை விளக்கம் செய்யும் சொற்கோயில் களாகத் திகழ்கின்றன.

தமிழர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தாலும், கடல் கடந்து சென்று வேறு நாட்டில் குடிபுகுந்து வாழ்ந்தாலும் அங்கும் பல கோயில்களை நிறுவிப் பூசையும், விழாவும் நடத்தி வழிபட்டு வந்தார்கள். இன்றும் வழிபட்டு வருகிறார்கள். மலேஷியாவிலும், இந்தோனேஷியாவிலும், ஈழநாட்டிலும் தமிழர்கள் கட்டிய திருக்கோயில்களை இன்றும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டுக்கு அண்மையில் உள்ள ஈழநாட்டுத் தமிழர்கள் தமிழ் வாழ்வே வாழ்கிறார்கள். அதாவது தாய் நாட்டுத் தமிழர்களின் நடை, உடை பாவனைகளை மாற்றாமல் அப்படியே சேய்நாட்டிலும் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் கடவுளுணர்ச்சி மேலோங்கி நிற்கிறது. இதற்குச் சான்றாக ஈழநாட்டில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உள்ள கோயில்களைக் காட்டலாம். தேவாரம் பெற்ற சிவதலங்களில் திருக்கேதீச்சரமும், திருகோணமலையும் ஈழத்தில் உள்ளன என்பதனை நினைவு கூர வேண்டும். அருணகிரியார் பல படியாகப் பாராட்டிப் பாடும் கதிர்காமம் ஈழநாட்டில் இருப்பது என்பதனை அறியாதார் யார்?

ஈழநாட்டுத் திருக்கோயில்களில் எல்லாவற்றிலும் கோபுரங்கள் இல்லை. சிலவற்றில் மட்டும் இருக்கிறது. அவ்வாறு உள்ள தலங்களுக்குள் எல்லாவற்றிலும் உயரமான கோபுரத்தை உடையது **மாவிட்டபுரம்** என்னும் பதி. ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தினால் சிறப்பெய்திய அந்தத் தலத்திற்குப் பழைய வரலாறு இருக்கிறது. இந்தியாவிலிருந்து சென்ற அருளாளர்களும், கலைஞர்களும் அந்தக் கோயிலை வளம்படுத்தியிருக்கின்றனர். புராணச் சிறப்பும் அதற்கு உண்டு. இவ்வாறு அமைந்த புராண சரித்திர வரலாறுகளைத் தொடுத்துத் தெளிவாக அமைத்து விளங்குவது **"கோவிற் கடவை"** என்ற இந்த நூல்.

மாவிட்டபுரத்தையும் அதனை அடுத்துள்ள சில பகுதிகளும் சேர்ந்த நிலப்பரப்புக்கு கோவிற் கடவை என்று பெயர் வழங்குகிறது. வெவ்வேறு பெயரால் வழங்கும் மாவிட்டபுரம், கீரிமலை, காங்கேசன்துறை முதலிய இடங்களுக்குப் பெயர் வந்த வரலாறுகளும், அங்கங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், அவை சம்பந்தமாக வழங்கும் செவி வழிச் செய்திகளும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

இதனை எழுதிய இளைஞர் திரு. சுந்தரராஜசர்மா ஊக்கமும் தமிழன்பும் நிரம்பப் பெற்றவர். பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளை எழுதிக் கைவந்தவர். எதையும் கோவையாகவும் தெளிவாகவும் எழுதும் ஆற்றல் பெற்றவர். இவர் தம்முடைய ஊரைப்பற்றி எழுதும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரார்வமும் பெருமிதமும் இவருடைய உள்ளத்தே நிரம்பியிருக்க வேண்டும். இது இயல்பே. இவருடைய இந்த வரலாற்று நூலில் அந்த உணர்ச்சிகள் நிரம்பியிருப்பதனைக் காண்கின்றோம்.

மாவை முருகன் காங்கேசன்துறையில் வந்திறங்கிய சரித்திரத்தை இக்காலத்தவரும் உணர்த்தும் வகையில் தெப்பத் திருவிழா நடத்தப்படுவதன் அவசியம் குறித்து இந்த நூலில் அழகாகக் கூறப்பட்டுள்ளது. அத்திருநாளிலேயே இந்த நூலும் வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

அன்பர்கள் இதனைப் படித்துப் பயன் பெறுவார்களாக,

*தீங்கேயில் லாதபடி வழிபடுவார் தாம் வாழச்*
*செய்யும் அண்ணல்*
*பாங்கேவந் தமரரெல்லாம் பணிசெய்யும் பெருங்குமரன்*
*பரவும் ஈழத்*
*தாங்கேயும் திருக்கோவிற் கடவை மா விட்டபுரத்*
*தணிசெய் கின்ற*
*காங்கேய மூர்த்தியிரு மலரடியே துணையாகக்*
*கருதி வாழ்வாம்.*

**பழனித் தலபுராணம்**

*பான்மொழிப் பசும்பாவை சேய்போற்றி, பூஞ்சரவணபவ போற்றி*
*வான்சுரர்க் கருள் கந்தவேள் போற்றி, புள்வரை பொடித்தவ போற்றி*
*தேன்மலர்ப் பொழில் சிவாசல போற்றி, சேவலங் கொடியோய் போற்றி*
*நான்மலர்ப் பொருள் நாயக போற்றி, மெய்ஞ்ஞான தேசிகா போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சொக்கனின் "மாருதப்புரவீகவல்லி" நூலுக்கு வழங்கிய ஆசியுரை

மாவை ஆதீனகர்த்தா, சிவாகம வித்தியாபூஷணம்
மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள்

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் உடல் ஆரோக்கியம், உள்ளத் தூய்மை, மனநிம்மதி, நிறைவான அமைதி ஆகியன இருந்தால்தான் அவன் அறிஞனாகவும், பண்பாளனாகவும், நல்லவனாகவும் வாழ முடியுமென விதுரோபநிஷத் கூறும். இதற்கு இயல், இசை, நாடகம் உந்து சக்தியாக இருப்பதோடு மேற்கூறிய பேறுகளையும் பெற வாய்ப்பும் தருகின்றன. இதனாலேதான் முத்தமிழ்க் கலைகள் யாவும் தெய்வீகமானவையெனக் கருதப்பட்டு ஆலயங்களை நடுநாயகமாக வைத்து அவற்றை இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டுமெனச் சான்றோர்கள் கூறியுள்ளனர். அதுதான் மரபுமாகும். ஆனால் இன்றைய காலங்களில் இவ்வாறு நடைபெறுவதில்லை. அத்தோடு இக்கலைகளின் வளர்ச்சிக்கு உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்ப்பணித்து அயராது உழைக்கும் கலைஞர்களைச் சமுதாயம் ஆற்றுப்படுத்துவதுமில்லை. இதனை இந்து தர்மம் பதினோராவது மலரில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூட "கவிஞர்களது மனப்போராட்டங்களையும், வாழ்க்கைப் பின்னணியையும் அவர்களது ஆக்க மூலம் அறிந்து கொள்ளும் முறைமை தமிழ் மரபில் போற்றப் படுவதில்லை," எனத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொதுவாக கலைஞர்கள் கல்வியறிவு, ஒழுக்கம், நேர்மை, நடுவு நிலைமை, பரந்த அறிவு, பெருநோக்கம் ஆகியவற்றைக் கொண்டிருத்தல் அவசியம். வித்துவசிரோமணி சி. கணேசையர், புலவர்மணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் இந்நூற்றாண்டில் சிறந்த கலைஞர்களாகவும், பேராசிரியர்களாகவும் மேற்கூறிய வரிசைகளை முதன்மையாகக் கொண்டும் வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்று மொழியிலும், விண்ணவர் மொழியிலும், செந்தமிழ் மொழியிலும் தேர்ந்த நூற் புலமை சார்ந்த ஈழநாட்டின் முடிசூடா மன்னர்களாகவும் வாழ்ந்தனர். வாழ்ந்துதான் பயனென்ன? பல்கலைக் கழகங்கள், இவர்களைப் போன்ற அறிஞர்களையும், கலைஞர்களையும் ஊக்குவிக்க முன் வருகின்றனவா? அல்லது அவர்கள் தம் துறையில் இன்னும் நன்றாக ஈடுபட ஆற்றுப்படுகின்றனவா? இல்லைவேயில்லை.

இத்தகையதானதோர் காலகட்டத்திலே தான் சொக்கன் அவர்களும் வாழ இறைவனும் அருள் பாலித்திருக்கிறார். பல்கலைக்கழகங்களே செய்யக் கூடியவற்றைச் சொக்கன் அவர்கள் தனித்து நின்றே செய்து காட்டுகிறதை உலகு அவதானித்துக் கொண்டு தானிருக்கிறது. கவிதை, நாடகம், சமயம் முதலிய கலையோடு சார்பானவற்றையெல்லாம் அதற்குரிய இலக்கண வரம்பிற்குள் நின்று செய்து காட்டி உலகிற்கு உகந்ததாகச் செயல் படுத்துவதையும் கடல் கடந்து வாழும் மக்கள் கூட ரசித்தும் ஆதரித்தும் மகிழ்கின்றனர். இப்போது ஆய்வுகள் என்றதோர் துறையும் இணைந்து விட்டது. இந்த ஆய்வில் "மாவிட்டபுரம்" ஊர்ப் பெயரும் ஓர் சரித்திரப் பேராசிரியரால் ஆராயப்பட்டதாம். குதிரைமுகம் மாறப் பெற்றதனால் "மாவிட்டபுரம்" என்ற பெயர் வழங்கலாயிற்று. இந்தக் கதை ஏழாம் நூற்றாண்டிலிருந்து கர்ண பரம்பரையாக வளர்ந்து வேரூன்றியது. ஆயிரத்து முன்னூறு வருடகாலமாக உலகெங்கும் இக்கதை பேசியதைப் போல இன்றும் பேசுவார் உளர். "மாவிட்டபுரம்" கந்தன் ஆலயத்தை நிறுவிய இளவரசி மாருதப்புரவீகவல்லியை மணம் செய்த சிங்கையாரியன் உக்கிரசிங்கன் மூலம் யாழ்பாடி பரிசாகப் பெற்றதே யாழ்ப்பாணமாகும். அல்லாமலும் அக்காலத்தில் உக்கிரசிங்கன் யாழ்குடா நாடெங்கும் தமிழர்களைக் குடியேற்றிய வரலாறும் பல வரலாற்று நூலாசிரியர்களால் தரப்பட்டுள்ளது. இதனைப் பண்டிதர் கந்தையா அவர்கள்கூட மாவை பிள்ளைத் தமிழ் நூல் மூலம் குறிப்பிட்டுள்ளார். அந்தோ "பரிதாபம்" நவீன புலமையுலகில் தோற்றம் பெற்றார் சரித்திரத்தில் பேரறிஞர் என்று சொல்லப்படுபவர் ஒருவர் மாருதப்புரவீகவல்லி உக்கிரசிங்கன் கதைகள் கட்டுக்கதைகள், மாருதப் புரவீகவல்லிக்குக் குதிரை முகமும் இல்லை என்கிறார். இவ்வாதத்தினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கும் பண்டிதர். மு. கந்தையா "குதிரைக்கு முகமேயில்லை" யெனவும் இப்பேரறிஞர் வாதிக்கமுயலலாம் என்கிறார். இப்படித்தான் நவீன ஆய்வுகள் ஆளப்படுகின்றன.

நல்ல வேளையாகப் புலவர் ஜெகன்னாதன் ஓர் நூலை வெளிக் கொணர்ந்து அதனை இலக்கிய வட்டம் மூலம் வெளியீடு செய்து விட்டார். இதனால் சரித்திர சான்றுகள் அழிபடாது தப்பின. இப்போது நாடக நூல் வடிவில் "மாருதப்புரவீகவல்லி" சரித்திரத்தைப் பலவகைச் சுவைகளோடு எமது ஆசிரியர் சொக்கன் அவர்கள் தமது மணிவிழாப் பரிசாக வெளியீடு செய்துள்ளார்கள். இதுவும் திருவருட்கடாட்சமே. அகஸ்திய முனிவர் தமிழை வழங்கியது போல, இந்தக் குறு முனிவரான சொக்கனும் அருங் கலைகளை இன்று வாழ வைத்துள்ளார். இவரது சரித்திர நாடகம் சிங்ககிரிக்காவலன் எத்தகைய வெளிக்கொணர்வுகளைத் தந்ததோ அதற்கு மேலான அரிய பொக்கிஷங்களை இந்த மாருதப்புரவீகவல்லி நாடக நூலில் தந்துள்ளார்.

இது எல்லோராலும் இயற்ற இயலாது, சொக்கனால்தான் அது முடியும். ஏனெனில் சொக்கனிடம் அகஸ்திய முனியின் சாயல் உண்டு, அறிவு உண்டு. ஆற்றலோ அளவு கடந்தது. நேர்மையான கலையுணர்வும், உறுதியான மனப்பான்மையும், அருமையான பண்புகளாகவும் கலையுலகிலே தென்றல்போல வீசி வலம் வருகிறார். இப்பெரியாரிடம் கேட்டறிய வேண்டியவை பலவுண்டு. ஈழத்தமிழ் மக்கள் சொக்கனது புலமையையும், கதை நிபுணத்துவத்தையும், சமயப்பற்றோடு கூடிய தொழிற்பாடுகளையும் நன்கு வரவேற்று அவதானித்து மகிழ்வதைப்போல யானும் நன்றாக ஆதரித்து ஆற்றுப்படுத்தி மகிழ்ச்சியடைகின்றேன். மணிவிழாக்காணும் சொக்கன் அவர்களும், அவரது குடும்பமும் எந்நாளும் இன்புற்றுச் சகல சௌபாக்கியங்களையும் பெற்று இனிதே வாழ எம் பெருமான் நிறைந்த திருவருட் செல்வங்களை வாரி வழங்க வேண்டுமென யான் எந்நாளும் மாவை முருகப் பெருமானை நினைந்து பிரார்த்திக்கின்றேன்.

*வாழ்க உங்கள் தொண்டு என வாழ்த்தும்*

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

ஆதீனகர்த்தா, பிரதம குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின்

ஈழமண்டல சதகத்தில்

# மாருதப் புரவீகவல்லி

**பா**டுசோ ழன்மக ளொருத்திமா ருதவல்லி
பாவமுஞ் சிறி துடைமையிற்
பாய்மா முகங்கொடு பிறந்தாண் முதுக்குறைகொள்
பருவமுறு காலைபடிமேல்
நீடுமா நதியெங்கு மேகியாத் திசைசெய்யு
நினைவினா டந்தைபணியி
னேயமிகு குலமாத ரயன்மாத ரண்ணகர்
நிரந்தநற் கிளைஞர்சூழக்
கூடுமா தரவினொடு குன்மவலி மாமுகக்
கோதுளங் கொண்டுந்திடக்
குணாதுங் குடாதும் வடாதுந் தெனாதுமாய்க்
குலவுதீர்த் தங்குடைகுவாள்
தாடுதித் திடவெனக் கன்புதித் திடவருள்செய்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 1

திக்கொடு விதிக்கெங்கு மேகியே நியமத்
திறத்தொடுந் தீர்த்தமாடித்
திரிகுவா ணகுலமுனி தீர்வைமுக மொருவிடுஞ்
சிரவணத் தொடுசிவனருள்
புக்குந்தி விடுதலும் பொதிரிளங் கொம்பனாள்
போதந் திலங்கைநகுலப்
பூதரங் குறுகியந் நகுலமுனி வற்கண்டு
பொன்னடி வணங்கிப்புணர்
துக்கங் கிளத்திடலு நகுலதீர்த் தத்தடைவு
தொல்லைமா முனிசொற்றிடத்
தொழுதகை தலைக்கேற வழுதழுது தேம்பிடுந்
துணரிணர்க் கோதைபின்னர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கன் சிரந்துமித் தெக்கிய மழித்தருள்செய்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 2

தத்துவமசி வாக்கிய முணர்ந்தமா முனிமகா
சங்கற்ப மோதியுதவச்
சால்சமுத் திரசங்க மத்தின்விதி மூழ்கியெழு
தையன்மா முகமுந்தவிர்
சித்தஞ்சி வன்றிரு வடிக்கணெக் குருகிடச்
செந்திருவை நிகர்நன்முகச்
செவ்விபெற் றேகுவாள் சிந்தைமகிழ் வெம்மனோர்
செப்புந் திறத்ததாமோ
புத்தமுத மொழிபின் புரிந்துநாட் கடனெழீஇப்
பொற்கோயி லிற்புகுந்தெம்
புண்ணியனை நகுலையைக் கண்ணுறக் கண்டடி
புகழ்ந்தன் பினிற்பணிந்தாள்
சத்தசத் தொடுதனிச் சதசத்து மாகியொளிர்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 3

பாரிற் பணிந்தெழுமந் நாரிமா ருதவல்லி
பரமனைப் பரையைமுனியைப்
பகர்பெருந் தீர்த்தத்தை யொருசிறிது நீங்கலாள்
பாசுரம தொன்றெழுதியார்த்
தாரிற் றிகழ்ந்துநிகழ் தந்தைக் குணர்த்தவத்
தந்தைதன் னுளமகிழ்ந்தே
தானதரு மங்கள்பல செய்தறு முகன்றிருச்
சட்டகந் தருவித்ததை
வாரிற் றிணிந்தமுலை மாதுக் கனுப்பநா
வாயினது வந்துறுதலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கியோங் குளமகிழ்வு தேங்கிநகு லாசல
வளாகபூ ருவதிசையின்வாய்
சாரிற் பலா தனது வேரிற் பழுக்கவருள்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 4

வந்துகந் தனைநிறுவ விதுவுசித தலனெனா
வரையறுத் தறிஞர்தம்மால்
வளரருட் குகனால யந்தந்து வேண்டுவன
மரபுளி வகுப்பித்தபின்
றந்துநந் திடையினா டக்கநல் லோரையிற்
சத்திக ளொடுஞ்சண்முகத்
தனிமுதலை யங்கவன் றந்திரத் தொடர்பினாற்
றாபனஞ் செய்வித்தனள்
இந்துசிந் திடுநுதலி யிங்கிதன் பின்னாளு
மிறைகுறை யுறாவியல்பினா
லிறைவற்கு நித்தியநை மித்திக நடாய்நிறீஇ
யிகுளைமா ரொடுமிருந்தாள்
தந்ததொந் தந்திமிதெய் யென்றுமன் றிலயமிடு
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 5

மானமதை மன்னுயிரி னோம்புவா ளாகலின்
மாதுநில வறையிருந்தாண்
மற்றது குமாரத்தி பள்ளமென வேகொடிம்
மாநில மதித்துரைக்கும்
கானமர் கடம்புபுனை காங்கேய னெழிலுருக்
கலமீது வந்திறங்கு
காரணத்திற் கசாக் காங்கெயன் றுறையெனக்
கழறிடுங் கன்னியன்னம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானமத னானதிதன் மாமுகம் விடுவித்த
நலனையந் நகரினேற்றி
நாடுமா விட்டபுர மீதெனா வதனுக்கொர்
நாமதே யமுநல்கினாள்
சானவி சடாடவி மிகாதவி தரச்செய்த
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 6

## கசா - கசாத்துறை

மூர்த்திதீர்த் தந்தலமிம் மூன்றுமிங் குறுதலான்
மொழிநாட ரபரகிரியை
மொய்த்துநா ணாடொறுஞ் சுத்ததீர்த் தத்தினிடை
மூழ்கிநனி முற்றுவிப்பார்
ஆர்த்தெழு மகாசனச மூகத்தொ டறுமுகவ
னாடிமா தோற்சவாந்தத்
தைந்துதேர் வந்துற வெழுந்தரு டிருக்கோல
வற்புத மதேயற்புதந்
தேர்த்திரு விழாநின்று மாடியமை நாண்மேவு
சீர்த்திருக் கூட்டத்துடன்
சென்றுதா னாடிமுன் றீர்த்தங் கொடுத்திடுந்
தெரிசன மதேதெரிசனஞ்
சார்த்தனிக் கண்டிகைச் சண்டிகைக் கருள்செயுஞ்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே. 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 'மாவை முருகன் கவிப்பூங்கொத்து' நூலுக்கு

**சிவாகம வித்தியாபூஷணம்**

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

*காலனார் வருதல் கண்டு கலங்கிடும் போது மாவை*
*வேலனே யென்று உன்னை விருப்பொடு அழைப்பேன் நீயும்*
*கோலமா மஞ்ஞை மீது குலவிட வந்து காட்சி*
*ஞாலமீ தெனக்குத் தந்து நல்லருள் புரிகு வாயே.*

உலகில் எவருக்கும் சிறப்பு உண்டு. இறக்குமுன் இறைவனை வேண்டி, நல்லவை நினைந்து, நல்லவை செய்தல் வேண்டும். இயம பயம் பொல்லாதது. அதனில் இருந்து விடுபட வேண்டும். கண்கண்ட கலியுகக் கடவுள் முருகன். முருகன் துணை இயம பயத்தை நீக்கிவிடும். எனவே, முருகனைப் போற்றி ஏற்ற தருமம் புரிதலே சாலச் சிறந்த செயலாகும். மாவை முருகன் மெய்யடியார்களுக்கு ஆனந்தக் காட்சி கொடுத்து அருள்பாலித்து நிற்கின்றான்.

மாவை முருகனை நினைப்பதற்குப் பெரியார்கள் பலர் செய்த நற்பாடல்களைத் தொகுத்து **மயிலங்கூடலூர் ஸ்ரீமதி சின்னத்தங்கம் சிறீரங்கம்** நினைவு வெளியீடாக **மாவை முருகன் கவிப்பூங்கொத்து** என்ற நூல் வெளியிடப்படுகிறது.

அடியார்கள் பாடி அருள்பெற்று உய்வதற்கு வழிவகுத்தமைக்கு எமது வாழ்த்து.

மாவை தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 'மாவை முருகன் கவிப்பூங்கொத்து' நூலுக்கு

## தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி, வித்துவான்

## ந. சுப்பையபிள்ளை அவர்கள் வழங்கிய

# புனைந்துரை

**மா**வை முருகன் கவிப்பூங்கொத்து என்னும் தொகுப்பு நூலின் அச்சிட்ட பிரதியொன்று எமது பார்வைக்கு வழங்கப்பெற்றோம். அதன் முதலாம் பகுதியிலே ஐந்து புலவர்கள் பாடிய பதிகங்களாகிய பிரபந்தங்கள் ஐந்தும். வேறு புலவர்கள் பாடிய ஏனைய பிரபந்தங்கள் மூன்றும் பூரணத்துவத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியிலே வெவ்வேறு புலவராற் பாடப்பட்ட பன்னிரு நூல்களிற் சிற்சில பாடல்கள் மாதிரியறியச் சேர்க்கப்பட்டுள.

அவற்றுள், இன்னும் அச்சில் வெளிவராதவை மாவைக் குருமணி திரு. சா. குமாரசுவாமிக் குருக்கள் இயற்றிய மாவைப் புராணமும், பண்டிதர், கலைமாணி, திரு. மு. கந்தையா அவர்கள் இயற்றிய மாவைப் பள்ளுமாம். அவை விரைவில் வெளிவரும்படி சைவசமய அபிமானிகளும், தமிழபிமானிகளும் தனிப்பட்ட முறையிலாவது கூட்டுறவு முயற்சியிலாவது உழைத்து வெளியிடுதல் நன்று, திரு. பூ. பொன்னம்பலபிள்ளையியற்றிய மாவை யமகவந்தாதி நூல் நாரிகேள பாக நடையுடையதாய் இலகுவில் பொருள் விளங்க இயலாத முறையிலுள்ளது 'அது திரு. ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையுடன் வெளிவரும்' என்று இந்நூலில் அப்பாடல்களின் அடிக்குறிப்பிற் குறிக்கப்பட்டுள்ளது. இம்மூன்றும் விரைவில் வெளிவந்து உலகிற்கு உபயோகமாகும்படி மாவை முருகன் அருள்புரியும்படி வேண்டுகின்றோம்.

மாவையம்பதியின் மூர்த்தி, தலம், தீர்த்த மகிமை விசேடங்களை நன்கு அறியாத மாந்தரும், இளைஞரும் உணரும்படி அறிமுகஞ்செய்து நன்கறியத் தூண்டி வெளிவரும் பூங்கொத்தாக இந்நூல் நின்று நிலவும் என்பது எமது கருத்து.

*மன்னி வாழி மாவை முருகன் கவிப்பூங்கொத்து!*
*தன்அடிக் குறிப் பதனிலிதன் விவரமுந் தந்தாக்கியோன்*
*வாழி! வாழி யினிதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'மாவை முருகன் கவிப்பூங்கொத்து' நூலுக்கு**

**வித்துவசிரோமணி சி. கணேசையரின் மாணவரும் தமிழறிஞருமான**

**பண்டிதர் இ. நமசிவாயம் அவர்கள் வழங்கிய**

# வாழ்த்துரை

திருமருவு மாவையம் பதியினிற் கோவில்கொள்
செய்யவேல் முருகவேட்குச்
செந்தமிழ்ப் பாவலர் பற்பலர் அன்பினாற்
செய்தபிர பந்தமெல்லாம்
பெருமுயல்வி னொன்றுசேர்த் தமரருல குற்றதன்
பெற்றதாய் நினைவுநூலாய்ப்
பேணியச் சேற்றியில வசமாக ஈந்தனன்
பேருலகு மகிழ்வினேற்க
மருவுபுகழ் நகுலகிரி யருகிலுறு கின்றசீர்
மன்னுமயி லங்கூடலூர்
மாட்சிபெறு பண்டிதன் அப்புத்து ரைப்பெயர்
வாய்த்தஉயர் தலைமையாசான்
அருமையுறு மிச்சேவை உலகினர்க் ககவிருள்
அகலவருள் ஒளிதழைக்க
ஆயவழி காட்டியாய்ப் பல்லாண்டு நிலைபெறுக
ஆறுமுக னருளினாலே.

மயிலிட்டி தெற்கு
21 - 11 - 76

**இ. நமசிவாயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 'சித்திர கவி' நூலுக்கு

## திரு. அ. சின்னத்தம்பி அவர்கள் எழுதிய

# பதிப்புரை

**தொ**ண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய இந்நூலின் ஆசிரியரும், சித்திரகவி செய்தலினும் சிறந்த விற்பன்னரும், தெல்லியம்பதியைத் தாயகமாகவுடையவரும், சென்னையிற் சிறந்த பேராசிரியருள் ஒருவரும், சிவாநுபூதிச் செல்வருமாகிய ஸ்ரீமத் பூதப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள், எனது தாயாரோடுடன் பிறந்தவர்கள். இவர் நைட்டிகப் பிரமச்சாரியாக வாழ்ந்து நாற்பத்தைந்தாவது வயதில், தாய்நாடாகிய சென்னை மாநகரிலே தேகவியோகமெய்தினார்.

இந்நூல் இற்றைக்கு எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் (அதாவது சர்வசித்து - 1887) நியாயதுரந்தரர் ஸ்ரீமத் பொ. சின்னக் குட்டிப்பிள்ளை அவர்களால் வண்ணை மெய்ஞ்ஞானப்பிரகாச யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

இந்நூல் மறைந்தொழிந்து போகாவண்ணம் காத்தற் பொருட்டும், நூலாசிரியரின் தொண்டை நினைவு கூருதற் பொருட்டும், எனது சகோதரர்களாகிய திரு. அ. சங்கரப்பிள்ளை, திருமதி. இ. தையற்பிள்ளை என்பவர்களின் விருப்பத்துடன் யானிதனை வெளிப்படுத்த முன் வந்துள்ளேன்.

படிப்போர்க்கு உபகாரமாக, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களைக் கொண்டு விளக்கக் குறிப்பு எழுதுவித்துப் பின்னுக்குச் சேர்த்திருக்கின்றேன்.

இதற்குச் சிறந்ததோருரை எழுதியுதவுபவர்களுக்கு என்னாலியன்ற வரை பரிசளிக்க முயற்சிப்பேன்.

*"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்*
*மிகைநாடி மிக்க கொளல்".*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத் தாத்தா நவாலியூர்

க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் இயற்றிய

# மாவைநகர் முருகவேள் பதிகம்

இப்பதிகம் நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்டு பல காலமாகக் குடும்பத்தில் கையெழுத்துப் பிரதியாக இருந்து வந்தது. ஓரிரு முறை மிகக் குறைந்த பிரதிகள் வெளியாகியுள்ளன. அன்னார் நவாலியூரிலிருந்து ஒற்றைத் திருக்கல் வண்டிலில் அடிக்கடி தனது மகளையும், குடும்பத்தையும் சந்திக்க வருவதுண்டு. அத்தருணங்களில் மாவைக் கந்தனைத் தரிசிப்பார். இப்படியான காரண காரியங்களின் தொடர்பால் எழுந்த இப்பாடல் அன்னாரது மருகரின் நினைவு மலரில் வெளிவந்தது. இதனை மீண்டும் பிரசுரிக்கின்றோம்.

உ

## மாவைநகர் முருகவேள் பதிகம்

### காப்பு

மன்னுமருள் சூர்மாவை வைவேற் பெருமான்மேற்
பன்னுந் தமிழ்ப்பதிகம் பாடவே - முன்னருளும்
அஞ்சக் கரத்தனுத வாதிமறை மாமுதல்வன்
பஞ்சக் கரத்தன் பதம்.

வந்திப் பவர்க்கருளும் மாவைவடி வேற்பெருமான்
சந்தத் தமிழ்ப்பதிகஞ் சாற்றவே - புந்திவரும்
முன்னாளிற் பொற்கூடல் முத்தமிழு மாய்ந்த கலைச்
சொன்னா யகிதாட்டுணை.

கண்ணுள் மணியே கருத்துட் கருத்தேயென்
புண்ணியமே ஞானப் பொலஞ்சுடரே - அண்ணலே
மாவைத் திருநகர்வாழ் வைவேற் பெருமான்மேற்
பாவைத் தருவாய் பரிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

ஓரா யிரங்கோடி கிரணசூ ரியரென்ன
ஒளிகாலு மாறு முகமும்
உயிர்கள்சஞ் சிதவினைப் கட்டறப் பார்க்கின்ற
ஒப்பில்பன் னிருவிழிகளுங்
காரா யிரம்புரையு மீராறு கைகளுங்
கனகதண் டைக்கால் களும்
கன்னிமார் பாகமுங் கொண்டமங் கலஞான
காருண்ய வடிவமுடனே
ஆராத காதலுட னனுதினமு மனமுருகி
ஆறெழுத் தோதிமுன்னின்
றழுதழுது தொழுகின்ற பழவடியர் கண்குளிர
அஞ்சலென வருமுருகனே
வாராத சித்தியருள் வேராயிரங் கொண்ட
வள்ளலே மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக் கடவுளே. 1

திங்களணி செஞ்சடைச் சங்கரன் நுதல்விழிச்
செங்கணலி லேபிறந்து
தெய்வசர வணமணிப் பொய்கைதனி லோராறு
சிறுவர்வடி வாய்வளர்ந்தே
அங்கணுறை யோராறு மங்கைமார் கொங்கைதரும்
அமுதுண்டு விளையாடியே
ஆறுதிரு முகமுமீ ராறுசெங் கரமுமாய்
அருளுருக் கொண்டமுருகா
செங்கணரி யும்மலர்ப் புங்கவனு மிந்திரனுந்
தேவர்குழு வும்வேண்டிடத்
திண்டிறல் மிகுஞ்சூர பன்மனைக் கொன்றமரர்
சிறைவிடுத் திடுகுமரனே
மங்கள வளம்பெருகி யெங்குமிசை பொங்கிமிகு
மாவைநக ரதனில் வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாதி தேவனே யாதிமறை யடிமுடிகள்
தெரியாத குருநாதனே
செங்கடம் புங்குல்லை யுஞ்செச்சை மாலையுஞ்
சேர்ந்தபன் னிருதோளனே
பாவாணர் தருகின்ற செந்தமிழ்த் தொடையமுது
பருகுமா றிருகாதனே
பத்தர்கள் வினைத்தொடர் பறுத்தவர்க் கினியவருள்
பாலிக்கு மிருதாளனே
மூவா முகுந்தற்கு மருகனே யொருகைமா
முகவனுக் கொருதுணைவனே
மொய்ம்புடைய வாகுமுத லொன்பதின்மர் கும்பிடும்
முதல்வனே யபயமபயம்
மாவான வடிவொழிய மாருதப் புரவிக
வல்லிதரு மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 3

ஏழைத் தொழும்பருக் கிக்கலி யுகத்திலே
இனிமையுட னெதுவுமருளும்
இரக்கமுள கடவுளுனை யன்றிவே றில்லையென்
றேவரும் புகலுகின்றார்
தாளைக் கொடுத்தெனது சஞ்சலம் முழுவதுந்
தவிர்த்தருள வேண்டுமென்றே
சந்ததமு முளமுருக மந்திர நினைந்துவெகு
தாண்மையொடு நின்றிரந்தால்
நாளைக் கடத்திவந் திட்டதல் லாலுனது
நல்லருள் கொடுத்ததிலையே
நல்லன் பிலானென்று தள்ளிவிட நீதியோ
நாதனே யபயமபயம்
வாழைக் குலங்கமுகு தேமா வருக்கைமிகு
மாவை நகரதனில் வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனே முப்பத்து முக்கோடி தேவர்க்கு
மாதியே வேதமுதலே
அறியாத மலரவன் சிரநடுங் கக்குட்டி
ஆரருள் சுரந்தகுமரா
பத்திசெயு மடியருக் கெத்துயரு நீக்கிடும்
பரமகா ருண்யமுருகா
பகருநால் வகையேழு பிறவிமிகு யோனியெண்
பத்துநூ றாயிரமதில்
எத்தனை தரம்பிறந் தேனிறந் தேனோத
எண்ணுக் கணக்குமுண்டோ
இன்னுமுன் திருவருட் பேறுபெற வெண்ணாத
ஏழைதனை யாள்வ தெந்நாள்
வைத்தவா ரணமேவு கொடியனே யடியர்புகழ்
மாவைநக ரதனில் வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 5

வேறான பாவங்கள் செய்தபே ரென்னினும்
மெய்ஞ்ஞான வள்ளலேயுன்
மேலான சந்நிதி யடைந்தபேர் தூயராய்
மிகுவாழ்வு பெறுவரென்கை
தேறா தெதிர்த்துமுன் மாறான சமர்செய்த
தீரமிகு சூரனுக்குந்
திருவடி பரித்திடும் பேறுதந் திடுமருட்
செய்கையால் இனிதுணர்ந்தோம்
நீறாடி மைந்தனே ஆறான அக்கரம்
நிறைந்தவோங் காரவொளியே
நின்னடித் தொண்டுபுரி யேழையடி யேங்கட்கு
நீயிரங் காததென்னோ
மாறாத பிணிமாற்று நகுலமலை யருவிபுடை
மருவிடும் மாவைநகர் வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைதரு மைந்தனே கார்த்திகைச் சிறுவனே
கானக் குறத்தி கணவா
கற்புமலி தெய்வகுஞ் சரிகேள்வ னேயமரர்
கழலடி வணங்குமிறைவா
எங்குமுறை ஆதியே யாவுமறி சோதியே
யாவர்க்கு மொருநீதியே
ஈராறு கையனே காரேறு மெய்யனே
என்னுயிர்க் கினியவுயிரே
சங்கமலி புலவனே சங்கரன் குரவனே
தமிழ்முனிக் கருள்தேசிகா
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமிநா னுனைநம்பினேன்
மங்கல நிறைந்தமறை யந்தணர் தினந்துதிசெய்
மாவைநக ரதனில் வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 7

தேமேவு நவரத்ன முடியழகு மோராறு
திருமுகக் கருணையழகுந்
தேனொழுகு தாமரைப் பூவென்ன வருளொழுகு
திருவிழியீ ராறினழகும்
பூமேவு செம்பவள விதழழகு முத்துமணி
பூத்தபுன் னகையினழகும்
பொன்னகல மார்பழகு மின்னுகுண் டலநிலைப்
பொலிவழகும் மாலையழகும்
காமேவு பூங்குழற் கன்னிமா ரோரிருவர்
கட்டழகு மிட்டதண்டைக்
காலழகு மேலைநான் கண்குளிர வேகண்டு
களிகொள்வ தெக்காலமோ
மாமேவு வடிவொழிய மாருதப் புரவீக
வல்லிதரு மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பிற் களிம்பென்ன மருவுமா ணவமலச்
சேட்டையா லறிவிழந்தே
செய்வதுந் தவிர்வதுந் தெரியாம லலையுநாள்
தீமைபல புரிதலியல்பே
வெம்புமம் மலமாயை கன்மத் தொடக்கிலா
விமலநீ கருணையாலே
மிகுபிழை பொறுத்துமே னெறிநாட்டி யாட்கொண்டு
விடுவதுன் கடமையன்றோ
அம்புவி தனிற்கலி யுகத்திலே கண்கண்ட
அற்புதக் கடவுனீயே
ஆற்றமுடி யாததுயர் ஆற்றியுன் பொன்னடி
அடைக்கலங் காத்தருளுவாய்
மன்பதைக் கருள்புரிய வென்றரு ளுருக்கொண்டு
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 9

பொய்யற்று கீரனுக் கருள்விலை யோதேவர்
புன்மையை அழிக்கவிலையோ
பொன்னகர்க் கிறைவன் மகன்கனவில் வந்தவன்
போற்றவருள் புரியவில்லையோ
மையற் பெருங்கிரி துளைக்கவிலை யோவேலை
வற்றவே லேவவிலையோ
வாகுமுத லானவர்க் கருளவிலை யோமுனிவர்
மற்சவுரு மாற்றவிலையோ
தையற்கொர் கரம்வளர வுதவவிலை யோவூமை
தமிழ்பாட வருளவிலையோ
தண்டமிழ்ப் புகழ்கூற வருணகிரி நாதனைச்
சாவாது காக்கவிலையோ
வையத் தெமக்கருளு வதுபெரிய வருமையோ
மாவைநக ரதனில்வாழும்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தநம வைந்துமுகர் தந்தமுரு கேசநம
கங்கைதரு மைந்தாநம
கார்த்திகே யாயநம பூத்திடுக டம்புபுனை
கனகமணி மார்பாநம
எந்தைநம ஈராறு புயத்தநம மன்னுயிர்க்
கீசநம நேசாநம
இமையவர்கள் தலைவநம கன்னிமா ரிருவருக்
கினியமண வாளாநம
தந்தைநம சங்கரன் குரவநம வைங்கரன்
தம்பிநம நம்பிநமவோம்
சரவண பவாயநம சரவண பவாயநம
சாமியுன் னபயமபயம்
வந்தனைசெய் மாதவன் பூசித்த நகுலமலை
மருவுமுயர் மாவைநகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடி வேலனே
மயில்வா கனக்கடவுளே. 11

**பெரிய புராணம்**

*ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்*
*சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்*
*பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்*
*போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைக் கலிவெண்பா

சுன்னாகம்

**ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் இயற்றியது.**

(1895)

## காப்பு

செந்தமிழ்சேர் மாவைத் திருக்கோயில் வாசமுறுங்
கந்தர் கலிவெண்பாக் கட்டுரைக்கக் - கந்தருக்கு
முன்னவனே யானை முகப்பொருளே பூதகண
மன்னவனே நன்கருள்வாய் மற்று.

## கலிவெண்பா

பொன்மேவு மார்பினனும் பூமேவுஞ் சார்பினனும்
முன்மேவிக் காணா முழுமுதல்வன் - தன்மேனி

பங்குபெறு மங்கையொடும் பங்கமறப் பூமணம்போ
லெங்கு நிறைந்தே யிருந்தாலு - மிங்குள்ளார்

கண்டு துதித்துக் கரங்குவித்துச் சித்திபெறத்
தண்டயிரினெய்போலத்தானணிமை - கொண்டுறையுங்

கீரிமலைப் பாங்கர்க் கிளருந் திருமாவை
யூரமருங் கோயி லுவந்துறையுங் - காரணனே

வாசவனுந் தேவர்களும் மற்றையரு முற்றதுயர்
மாசறுத்து நல்லின்ப வாழ்வருளப் - பாசமுறும்

மானவர்போல் வானவர்போல் மற்று முயிர்போல
ஈனமுறும் யாக்கைவழி யேகாமன் - ஞானமுதல்

நெற்றித் திருவிழியி னின்மலமாய்ச் சின்மயமாய்
அற்புதமாய்த் தோன்று மருட்சுடரே - நற்பருதி

விண்ணுறமன் னீர்காலும் வெந்தீயுங் கற்பொழியு
மண்ணலர விந்த மலருமிந்த - வண்ணமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதும் விகாரமின்றி யாவுஞ் செயும்வயிரச்
சோதி மயமான தூமணியே - வாதைபுரிந்

தாருயிரைப் போர்த்தலைக்கு மாணவநோய் தீர்த்தொ ழிக்கச்
சாரு முடலாதி தக்கமருந் - தாரருளா

லீயு நிராமயனே யேக மருத்துவனே
ஆயுமறை யாதிகளா லவ்வுயிர்க்குப் - பாயமுறை

வைத்தவற்றுட் புக்கு மறைந்து நிறைந்துறையும்
வித்தகனேயம்முறைசெய் மேன்மையுள - மெய்த்தவருக் போல்

கிட்டசுக போகங்கள் யாவு மருத்திமுறை (போல்
விட்டவர்க்குத் துன்புறுத்து வெந்தழலி - னிட்டபொன்

ஆக்கு மறக்கருணை யாளா வவர்மீளா
மேக்குயரச் செய்யும் விழுப்பொருளே - போக்கியங்கள்

ஈட்டும் வினைக்கேற்ப வெண்ணி முறைநின்று
கூட்டும் பெருநீதிக் குன்றமே - காட்டுவினை

யொத்துப் பரிபாக முற்ற வவதரத்துச்
சத்தி பதிவித்துச் சற்குருவாய்ப் - பெத்தநிலை

போக்கும் பொருட்டுப் புகலு நயனாதி
தீக்கை புரிந்தருளுஞ் செல்வமே - மீக்குலவும்

ஓங்கார மாபீடத் தோடைக் குளத்திருதாட்
பாங்கார் கழுநீராம் பன்முகமுந் - தாங்கா

உதித்து மதிப்போ ருளத்துத் தியானங்
கதித்து மதத்துக் களித்து - மதக்கருணை

ஊற்றி னனைத்துநிறைத் துண்மடமுங் கன்மடமும்
பாற்றியொரு மேல்வீட்டின் பாற்குலவ - வீற்றிருந்த

மன்னியபே ரின்பம் வழங்குங் கடவுளுக்குப்
பின்னிளவ லான பெருமானே - சொன்னநயம்

நந்தாத வாகமத்தி னற்பொருளுஞ் சொற்றமிழும்
மந்தா நிலமலய மாமுனிக்கு - முந்தோதுந்

தேசிக வாதமய நீர்ந்தசிவ ஞானியருட்
டேசிக வாத திவாகரனே - மாசில்லாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி யிருள்வலியுங் கூரு மொளிவலிமை
கோடி யிருளுங் குருமுடியாய் - நீடுலக

முற்று மறுமுகத்து முற்றா வறுகுணமாய்
முற்று மறுமுகத்து முன்னவனே - பற்றுபடைப்

பன்னிருகை கோளுற்ற பண்ணவனே யிவ்வுலகிற்
பன்னிருகை கோளாய்ப் பயனுற்று - மன்னுங்

களவினொடு கற்பினைக் காட்டும் பொருட்டாக்
களவினொடு கற்பினைக் காட்டும் - அளகநகைக்

கற்பமர சொர்க்கக் கருங்கட் குறமகளைக்
கற்பமர சொர்க்கக் கரிமகளைப் - பொற்ப

வரைந்த மருங்கணவா வஞ்சகர்தந் நேசம்
வரைந்த மருங்கணவா வள்ளால் - அரந்தைய

சத்திதர வேதந் தகர்க்குந் தனிஞான
சத்திதர வேதத் தனிப்பொருளே - முத்தப்

பழனி மலைக்கினிய பாலா முகிறோய்
பழனி மலைக்கிழவா பானேர் - செழுநிறத்துப்

பாகீ ரதிமதுரப் பாலகா கண்டமுதம்
பாகீ ரதிமதுரப் பாடலான் - மாகீரன்

ஏத்த வருள் புரியு மின்னமுதே கீரிமலைத்
தீர்த்த விழாவிற் றெரிசித்தங் - கேத்தி

வணங்கு மடியார்க்கு வாய்த்த வரங்கள்
இணங்க வளித்தருளு மெந்தாய் - கணங்கொள்ளுந்

தேவர் குலபதியே செந்தமிழ்சேர் சங்கமுறும்
பாவலனே ஞான பரம்பொருளே - காவலநின்

தந்திரத்தின் வண்ணந் தவறாது பூசைவிழா
முந்து திருப்பணிகள் முற்றுவோர் - சிந்தனையில்

இட்ட மளிப்பதுபோ லெங்கவியு மேற்றருளி
இட்ட மளிப்பா யினிது.

**ஸ்ரீமத் அ. குமாரசாமிப் புலவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மாவைச் சுப்பிரமணிய தோத்திர விருத்தம்

**புன்னைநகர், வித்துவசிரோமணி**

**பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் இயற்றியது.**

**(1911 – விரோகிருது வருஷம் ஆடி மாதம்)**

### திருப்பரங்குன்றம்

அருமறைகண் முதலாய நூலெலா மறுதியிட்
டறைகின்ற பொருளதாகி
அமலதுரி யாதீத முற்றுவெளி யாய்நின்ற
வானந்த மாயமுதலின்
திருநுதலி னுற்றகண் வந்துசர வணவாவி
சேர்ந்துநல் லுருவமைந்து
திகழியிலி னிற்சூர னகலம் பிளந்தமரர்
சிறையதனை நீக்குகுமரா
பெருமையுறு முயர்பரங் குன்றிலமர் முருகனே
பிரணவப் பொருளையறியாப்
பிரமனைச் சிறையினிடை வைத்ததொரு கடவுளே
பிணிமுக முயர்த்தமுதல்வா
வருபவன முறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைத்துவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவதுமயின் மேவுகுகனே.

### திருச்சீரலைவாய்

வேடர்மக டன்னையவர் சிறுகுடிற் புக்குநீ
விழைவுடன் களவெடுத்த
விதமதனை யோர்ந்துளோர் நின்பாத தொண்டன்றி
வேறொன்றை மேவுவாரோ
மூடனே னின்பாத தொண்டுசெயி னல்லவோ
முழுதருள் புரிந்தாளுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்கரும் பனையமொழி மங்கையர்கள் சேவைபுகு
முழுமகனு முய்வதுண்டோ
கூடுதிரை வீசுமலை வாயெனும் பதிமேவு
குமரனே கங்கைசுதனே
கொக்கினுரு வாய்நின்ற சூர்முத றடிந்ததொரு
கூரிலைய சத்திதரனே
வாடமூச் சுறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## திருவாவினன்குடி

கோடைதனி லுறுவெயிலில் வழிசென்ற மாந்தர்போற்
கொடிதாய பிறவிவழியிற்
குறுகிமெலி வுற்றயா னின்பாத னீழலைக்
கூடுமொரு நாளுமுளதோ
தேடரிய சத்தாகி நின்றதொரு தெய்வமே
திங்களங் கண்ணிவேய்ந்த
சிவனருளு மைந்தனே நின்பாத தொண்டினிற்
சிறிதும்யான் புரிகிலாது
நீடெழில்கொண் மங்கையர்க ளாசையிற் புக்கியா
னேருமறி வற்றயர்ந்தேன்
நேசமுடனமரர் தொழு மாவினன் குடிமருவு
நிருமலம் தாயவடிவே
வாடைய தெழுந்தறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## திருவேரகம்

அருவாகி யுருவாகி நின்றிடுந் தன்மைதா
னறியுந் தரத்ததேயோ
ஆதியுறு மகரமுட னுகரமாய் மகரமா
யறைவிந்து நாதமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாது நின்றுநீ யுபகரிக் குந்தன்மை
யோர்ந்தவரு னடியையன்றி
யுன்னுவர்க ளோவொன்று நாடுவர்க ளோ சொல்
யுள்ளங் கடந்தமுதலே (வை
குருவாகி வந்தென்னை யாளுமொரு காலமுங்
கூடுமோ கூறுநிமலா
கொடிதாய வினையகல வமரரும் வழிபடூஉங்
கோதிலே ரகமமர்ந்தோய்
வருவாத முற்றறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## குன்றுதொறாடல்

கருத்தினை யடக்கியொரு கணமேனு நின்னுடைய
கழலடி நினைந்துமில்லேன்
காயத்தி னாற்செயுந் தொண்டினிற் சிறிதும்யான்
களிப்பினொடு செய்துமில்லேன்
அருத்தியொடு நின்புகழை நாவினாற் சொல்லியு
மறிந்திலேன் பாவியென்றான்
அருமாவை யிடைமருவி யகவாத துயரடைந்
தவசம தடைந்தலைந்தேன்
செருத்தணிகை முதலாய மலையெலாஞ் சென்றாடு
சேவகா சிறியேனிடந்
தேடிநீ குருவடிவ மாகிவந் தெனையடிமை
செயிலுன தருட்கிழுக்கோ
மருத்துற வெழுந்தறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பழமுதிர்ச்சோலை

அன்னையொடு தந்தைமனை மக்கள்சுற் றத்தார்க
ளாருமெற் குதவுவாரோ
அந்தகன் வீசலுறு பாசத்தை நீயன்றி
யாருந் தடுக்கவலரோ
என்னையே யிவையெலா மறிந்துமெம தறிவுநின்
னிணையடிக டஞ்சமென்று
இம்மியள வாயினும் பற்றுகின் றிலதிந்த
விசைவுநின் புணர்ப்பதன்றோ
உன்னைவிட வெனையாள வல்லதொரு தெய்வமு
முண்டுகொலப் பரமுநீயே
ஓதுபழ முதிர்சோலை மேவியமர் குமரனே
யுன்னடிமை தவிர்கிலேனை
மன்னுயிர்ப் புறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

### கதிர்காமம்

#### வேறு

வெளியிற் செறிந்துபுவி யதனிற் பரந்தனலின்
மீதிற் படர்ந்துகாலின்
மேவிப் புகுந்தலர்கொ ணீரிற் பிறந்தைந்து
விதமாய்ப் பொருந்துபரிசு
எளிதிற் றெரிந்துனந லருளிற் பொருந்தமிக
வினிதிற் றெரித்தகருணை
யாரும் வரைந்தளவு மொழியத் தகுங்கொலுய
ரிமையம் பிறந்தமுதல்வி
களியிற் பொருந்தியொரு வடிவிற் றுலங்கவிரு
கையிற் றழூஉங்கந்தனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்திற் கொளுங்கதிரை மலையின் மிசைக்குலவு
காலா யுதத்துவசனே
வளியின் மிகுந்தறிவு மூடிக் கலங்குமுனர்
வந்திங் கெனக்கருள்வைநீ
மாவைப் பதிக்கண்மயின் மீதிற் றுணைச்சத்தி
மருவத் துலங்குகுகனே.

**வெண்பா**

வேத முதல்வா விளங்குசுடர் வேலவனே
நாதங் கடந்துநின்ற நம்பனே - மாதவர்க
ளேத்துகின்ற மாவை யெழினகரில் வீற்றிருக்குங்
கார்த்திகைமைந் தாவெனைநீ கா.

*திருச்சிற்றம்பலம்*

*முற்றிற்று.*

வந்தவினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்று சொல்லக் கலங்குமே - செந்திநகர்ச்
சேவகா என்று திருநீறணி வார்க்கு
மேல் வராதே வினை.

- அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவைக் கந்தன்மேற் கவிதை

என்முகம் பாரா திருப்பதற் கேழைநான்
என்னகுறை செய்தே னந்தோ
யாதானு மொருகுறை இருப்பினும் மன்னிப்ப
தெந்தையுன் கடமை யலவோ
புன்புலால் மதுவண்டு நிரயவழி மால்புகுது
புலையருற வன்றி ஞானம்
போதிப்ப வாக்குநீ நண்புடை யனல்லவோ
போந்தமுன் வினைவ சத்தால்
என் பையெனி லச்சுமை சுமந்திறக் கிக்கடைத்
தேறுநா ளெந்த நாள்தான்
எவருக் குரைத்தழுவ திக்கலி யுகத்தினீ
யேயிறைவ ணெனக்கிலையா
பொன்குலவு தெய்வானை குறவள்ளி கவமுப்
புரதகன சிவகு மர சீர்
பொலிகாவை யுறுமாவை நகர்வாச முருகேச
புகழா றுமுக தேவனே. 1

சென்ம மெத்தனை முன்னெடுத்த தறியேன் தீமை
செய்த தெத்தனை முன்னறியேன்
தேவர் முன் னெத்தனை பணிந்த தறியேன்சுகஞ்
சேர்ந்த தெத்தனை முன்னறியேன்
இன்ன லெத்தனை முன்னடைந்த தறியேன் பிறவி
யின்னு மெத்தனை யறிகிலேன்
இகமீதிலே சிறியனே தனுபவிப்பநின்
இன்பஞ் சிறிது மறியேன்
பின்னையெற் கேது தெரியும் ஞானமற்ற சிறு
பிள்ளைக்கு மெற்க மேதும்
பேதமிலையே யிவை களறியாத நானுனைப்
பின்பற்ற வழியறிவனோ
பொன்னுற்ற பொன்மருமகனே புனித சரவணப்
பொய்கை விளையாடு குகனே
பொலிகாவை யுறு மாவை நகர்வாச முருகேச
புகழாறு முகதேவனே. 2

– ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை (சு. நா. 1906ஆம் ஆண்டு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வைபவ கௌமுதி

## ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

**மாருதப்புரவீகவல்லி** - இது நிகழ்ந்த எட்டாம் வருடத்திலே சோழ மண்டலாதிபனாகிய திசையுக்கிரசிங்க சோழனின் அரிய புத்திரியாகிய மாருதப்புரவீகவல்லியென்னுங் கன்னி தனக்குற்ற குன்மநோயால் மிகவருந்தி வைத்தியரின் ஔடதப் பிரயோகத்தால் ஆரோக்கியமடைதல் கூடாதெனக்கண்டு, கீரிமலைச் சாரலில் ஓடும் நன்னீரருவியின் விசேடத்தைக் கேள்வியுற்றுத் தன் பரிவாரத்தவருடன் அங்குசென்று பாளயமிட்டுப் பலநாட்களாய் வாசம் பண்ணி, அக்கீரிமலையில் வசித்த நகுல முனிவரின் ஆசி பெற்று அவ்விட மகிமைகளைக் குறித்துக் கேள்விப்பட்டு அச்சிற்றாற்றில் ஸ்நானஞ் செய்து வந்தனள்.

**மாவிட்டபுரம்** - சிலகாலத்தால் அவளுடைய குன்மவலி நீங்கிக் குதிரைமுகம் மாறிற்றென்றும், அக்காரணத்தால் அக்குறிச்சிக்கு மாவிட்ட புரமெனப் பெயர் வந்ததென்றும் பழங்கதையாய்ச் சொல்கின்றனர். "மாருதப்புரவீகவல்லி" கதையை பாமாலையிலே விஜயனின் பின் வைத்திருக்கிறது. மாருதப்புரவீகவல்லியுடைய குதிரைமுகம் என்பது ஓர்வகை நோய்போலும். சமஸ்கிருதத்தில் "அசுவமுக" என்பது கின்னரருக்குப் பெயர். கின்னரரென்பது குரூபமுள்ளவர்களுக்குப் பெயர். இது உற்றுநோக்கத்தக்கது. (ச. வே. பாதுகாவலன்)

**காங்கேயன்துறை** - அந்த இராசகுமாரி தனக்குற்ற நோய் நீங்கியமையால் நகுலமுனியின் யோசனைப்படி அவ்விடத்தில் ஓர் கந்தசுவாமி கோயில் கட்டுவிக்க நினைத்து வேண்டிய பணத்தையும், தளபாடங்களையும் அனுப்பும்படி தன் தந்தைக்குத் திருமுகமனுப்பினாள். அத்திருமுகத்தை வாசித்த தந்தை தன்னருமருந்தன்ன குமாரத்தியின் சுகத்தில் அகமிகமகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, தில்லையிற் பிராமணனாகிய பெரிய மனத்துள்ளாரை அழைத்து அவரிடம் வேண்டிய பணத்தையும், கந்தசுவாமி, வள்ளியம்மை விக்கிரகங்களையும் கொடுத்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினான். அவர் அவைகளையுங் கொண்டு கசாத் துறையில் வந்திறங்கினார். காங்கேயன் விக்கிரகங் கொண்டு வந்து அவ்விடத்தில் இறக்கியபடியால் அத்துறை அன்றுமுதல் காங்கேயன்துறை என அழைக்கப்பட்டு வருகின்றது.

**மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவில்** - தந்தையனுப்பியவைகளை மாருதப்புரவீகவல்லி மகாகளிப்புடன் ஏற்று ஓர் கோவிலெழுப்புவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கிராரம், அன்னசத்திரம், மடமாகிய கட்டடங்கள் கட்டுவித்துச் சுற்று மதிலிட்டுக் கந்தசுவாமி கோவிலெனப் பெயர்சூட்டிப், பெரிய மனத்துள்ளாரையே பூசகராக நியமித்து நித்தியபூசை தவறாது நடக்க ஒழுங்கு செய்து ஆனி உத்தரத்தன்று கும்பாபிஷேகம் பண்ணிக் கொடித்தம்பம் நாட்டி விழாக் கொண்டாட்டம் நடைபெறும்படி செய்தனள். இக்காலத்திலும் அத்தினந் தொடங்கியே விழாக் கொண்டாட்டம் நடைபெற்று வருகின்றது.

**உக்கிர சிங்கராசனின் விவாகம்** - இக்காலத்திலே உக்கிர சிங்கராசன் மறுபடியும் நகுலேசர் கோவிலைத் தரிசனஞ்செய்யும்படி வந்து தங்கியிருக்கையில், மாருதப்புரவீகவல்லியின் சவுந்தரிய ரூபத்தைக் கண்டு மயங்கி எப்படியும் அவ்விராசகுமாரியை விவாகஞ் செய்யத் தீர்மானித்து அர்த்தசாமத்தில் அவ்விராசகுமாரி தங்கியிருந்த பாளையத்திற்குச்சென்று ஒருவருமறியாவண்ணம் அவளைத் தன்பாரியாராக்கித் தன்பாளையத்திற் கொணர்ந்து வைத்துக் கொண்டான். காலையில் அவளுடைய தாதியர், சேடியர், சேனாவீரராதியர் உறக்கம் நீத்து எழுந்து இராச கன்னியைக் காணாது மிகக்கவலைப்பட்டுக் கலங்கி ஆராயும் பொழுது அரசன் பாளையத்தில் அவள் உலாவுவதைக் கண்டு அங்கு சென்று அரசனை வழிபட்டு நின்றனர். வேந்தன் அவர்களை நோக்கி "இம்மாதை என் பட்டத்துத் தேவியாக்கினேன்" இம்மங்கள செய்தியைச் சோழ தேசஞ்சென்று தந்தையாருக்கு அறிவியுங்கள் எனக் கற்பித்து வழிச் செலவுக்கு வேண்டிய பணமுங் கொடுத்து அனுப்பினான். உக்கிரசிங்கன் கந்தசுவாமி கோவிலின் விழாக் கொண்டாட்டம் முடித்துப் பின் மாருதப்புரவீகவல்லியுடன் தனது இராசதானிக்குச் சென்று அங்கே வேதியர்முன் தன் விவாகச் சடங்கை நிறைவேற்றி அவளுடன் இனிதாய் இல்லறத்தை நடாத்திச் சுகானுபோகமுற்று வாழ்ந்தான்.

**பெரியமனத்துள்ளார் விவாகம்** - கந்தசுவாமி கோவிற் பூசகராகிய பெரியமனத்துள்ளார் கீரிமலைச் சாரலிலிருந்த வாமதேவாசாரியரது வம்சத்திலுதித்த சாம்பசிவ ஐயரின் மகள் வாலாம்பிகையை விவாகஞ் செய்து, அப்பெண்ணுக்குத் தில்லைநாயகியென்னும் பெயர்சூட்டி, கந்தசுவாமி கோவிலின் தெற்கு வீதியிலுள்ள தமது அக்கிராரத்தில் வசித்துக் கோவிற் பணிவிடைகளை ஒழுங்காய் நடத்தி வந்தனர். இவ்விவாக சம்பந்தத்தினால் இக் கந்தசுவாமி கோவிலின் பாகத்திலுங் கீரிமலைச் சாரலிலும் வசித்த இருதிறப் பிராமணக் குடும்பங்களும் ஒரு குடும்பமாய் ஐக்கியமாய் வாழ்ந்து ஈரிடக் கோவில்களுக்கும் ஒருவரே விசாரணைக்கர்த்தாவாயினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1978 – மாவை ஷண்முகர் சம்புரோஷண

## மகா கும்பாபிஷேக மலருக்கு

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் வழங்கிய

# பிரார்த்தனை உரை

***மா***விட்டபுரம் என்ற பெயர் மிக்க பழமையையும், அற்புதமான தோர் அருள் நிகழ்ச்சியையும் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

தமிழ் அரசர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளுக்கும், யாழ்ப்பாணம் என்ற பெயர் உண்டாவதற்கும், முந்தியது மாவிட்டபுரம்.

சோழராசாவின் புதல்வியாகிய மாருதப்புரவீகவல்லி, ஊழ் வயத்தால் தனக்கமைந்த குதிரை முகத்தை நீத்ததற்கு உபகாரமா யமைந்த புனித புண்ணிய சமுத்திர தீர்த்தத்தைக் கொண்டது மாவிட்டபுரம்.

மாவிட்டபுரம் என்ற பெயர் மாமுகத்தை நீத்த மாருதப் புரவீகவல்லியால் இடப்பட்டது. தனக்குக் கிடைத்த அருட்பிரசாத தலவிசேடத்தைக் காட்டும் முகமாக இடப்பட்டது அப்பெயர்.

மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயில் தந்தையாகிய சோழராசாவின் கட்டளைக்கிணங்க, சிதம்பரம் தீட்சிதர்கள், பெரியமனத்துள்ளார், சின்ன மனத்துள்ளார் ஆகியோரின் சாஸ்திரோக்தமான ஆலோசனைப்படி மாருதப்புரவீகவல்லியால் அமைக்கப்பட்டது.

இந்த ஈழவள நாட்டில் வேதாகம சம்மந்தமான ஒரே ஒரு கந்தன் கோயில் இ·.தொன்றே என்று ஒரே ஒரு விரலைமட்டும் மடிக்கத்தக்க வகையில் முதன்முதல் அமைந்தது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் 'மா' விலங்கு என்ற பொருளையுந் தரும். இப்பொழுதைய மக்கள் மாக்களாய் விட்டார்கள். மனிதரை மனிதர் வதைத்து வாழும் எண்ணம் உலகம் எங்கனும் தலைதூக்கிவிட்டது.

இந்தக் கொடூர சந்தர்ப்பத்தில் மாருதப்புரவீகவல்லி செய்து வைத்த மாதவம் பலித்தது என்று சொல்லத்தக்க வகையில் மாவைத் திருமுருகனின் கருணை கூர்முகங்கள் ஆறிலும் அருட்பிரவாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றெடுக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. அவனைச் சரணடைந்தாரை அவன் காத்தருளுவன் என்ற தைரியம் பிறக்கின்றது.

மாவைத் திருமுருகன் ஆலயவளர்ச்சி நாளொரு வண்ணம் வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்கள் கண்டு களிக்கின்றன.

வேதாகம வகுப்புக்கள், திருமுறைப் பண்பயிற்சி, சமய சாஸ்திர ஆய்வு என்றின்னோரன்னவைகளைக் கொண்ட குருகுலம் மாவை வீதியில் அமைவதாக!

ஈழத்திலும், தமிழகத்திலும் உள்ள சாஸ்திரம்வல்ல தக்கோரின் புத்திமதிகள் மாவையாதீனத்துக்குக் கிடைத்துக் கொண்டிருப்பதாக!

கலியுகவரதனாகிய மாவைத் திருமுருகன் கலியிருள் போக்கி அருட்கிரணங்களை எங்கும் பரப்புவானாக!

என்றிங்ஙனம் திருவருளை வேண்டுதல் செய்து பிரார்த்திப்போமாக!

***மாவை முருகன் மலரடி சரணம்***

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

---

*உன்னை ஒழிய ஒருவரையும் நம்பிகிலேன்*
*பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்*
*கோலம்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்*
*வேலப்பா செந்தி வாழ் வே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1978 – மாவை ஷண்முகர் சம்புரோஷண

## மகா கும்பாபிஷேக மலருக்கு

### பண்டிதர். இ. நமசிவாயம் அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

ஈழவள நாட்டில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றும் சிறப்புற அமைந்ததும், சைவாகம விதிப்படி நடத்தப்படுவதும், பழமை வாய்ந்ததுமான மாவை முருகன் ஆலயக் கட்டடங்கள் இற்றைக்குப் பல ஆண்டுகளின் முன்பிருந்தே பகுதி பகுதியாகத் திருத்தப்பட்டு வருகின்றன. புதிய ஆதீனகர்த்தாவாகிய சிவாகம வித்தியாபூஷணம் மஹாராஜஶ்ரீ. சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களின் நிர்வாகத்தில் அப்புனருத்தாரணம் அதிவேகமடைந்திருப்பது யாவருமறிந்தது. நித்திய, நைமித்திகச் சிறப்புக்களாலும், பலவித கலைகளையும் பேணி வளர்த்தலாலும், கலைஞர்களை மதித்து ஆதரித்தலாலும், இன்னும் பல ஏதுக்களாலும் இவ்வாலயம் புதுப் பொலிவுடன் விளங்குகின்றது. ஆதீனகர்த்தாவைத் தலைவராகக்கொண்டு, ஊக்கத்தோடு ஆக்கப் பணிபுரியும், திருப்பணிச் சபையும் இங்கு கருதத்தக்கது.

இவ்வாலய வளர்ச்சியின் சின்னங்களில் ஒன்றாக 27-03-78 திங்களன்று சம்புரோக்ஷண கும்பாபிஷேகமொன்று நிகழ இருக்கின்றது. அவ்விழாவையொட்டி, அன்று மலர இருப்பது இந்த மலர். பல கலையம்சமும் மணக்க, அவ்வவ்வவற்றில் துறைபோய பெரியார் பலரின் கட்டுரைகளைத் தாங்கி மிளிர்கின்றது.

கலியுக வரதராகிய அந்தப் பெருமான் திருவருளால், இம்மலர், பக்தர்களாகிய வண்டுகளைக் கவர்ந்து, ஆலயத் திருப்பணிகள் நிறைவெய்தலாகிய நற்பயனைத் தருவதாக.

*உருவாய் அருவாய் உளதாய் இலதாய்*
*மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்*
*கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்*
*குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.*

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.
21 – 03 – 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஸ்ரீ மகாவல்லி – தேவசேனா சமேத ஷண்முகப் பெருமானின் மகத்தான திருவிழாக்களின்

# சிறப்புகளும் வரலாறுகளும் – 1978

மாவை ஆதீனகர்த்தா

சிவாகம வித்யாபூஷணம் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்

**ஆ**தியாய், அநாதியாய், அன்பே வடிவாய், அழகே உருவாய், ஆனந்த அமுதமாய், அவனிவாழ் மக்கட்கெல்லாம், அருள் பாலிக்கும், மாவை வளர் அறுமுகப் பரஞ்சுடரின் கருணைபொழி திருமுகங்களும், அழகிய மணி மகுடமும், அணிபணிகளேந்திய அகண்ட மார்பும், ஆயுதம் பல தாங்கிய பத்துக் கரங்களும், அபயவரத கரமிரண்டும், அவற்றில் தாங்கிய அழகிய வேலும், குக்குடக் கொடியும், சிறகு விரித்த மயில் வாகனமுமாய்க் காட்சிதரும், முழுதும் அழகிய மூர்த்தியையும், அவனருகே, மலர் மாலையணிந்த தோள்களும், முழுமதியன்ன வதனங்களும், தெய்வமொழித் திருவாயில் புன்னகையும், அணிபணிகள் பூண்ட திருமேனியும், சிலம்பணி திருவடிகளையுமுடைய தேவியர் இருவரையும் பார்க்கும் போது,

*"பக்தித் திருமுகமாறுடன், பன்னிரு கைகளுமாய்த்*
*தித்தித்திருக்கும் திரு அமுது கண்டேன்"*

என்ற அருணகிரியார் திருவாக்கு எம்முள்ளத்தில் வராமல் விடாது.

எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, எதையும் கடந்து, இப்பாலுக்கிப்பாலாய், அப்பாலுக்கப்பாலாய், அகில உலகமும், அளாவி நிற்கும் அறுமுகப் பரம்பொருளை கச்சியப்ப சுவாமிகள்,

*"எங்கனும் திருவதனங்கள், எங்கனும் விழிகள்*
*எங்கனும் திருக்கேள்விகள், எங்கனும் கரங்கள்*
*எங்கனும் திருக்கழல்கள், எங்கனும் வடிவம்*
*எங்கனும் செறிந்து அருள்செயும் அறுமுகத்திறைக்கே"*

எனக் கந்த புராணத்தில் ஓர் விசுவரூப சித்திரமாக மிக நுட்பமாகக் காட்டுகிறார் இப்பரஞ்சுடர்.

*"அயனெனவாகி, அரியெனவாகி, அறியொணாப் பொருளதுவாகி"*

விளங்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"திசையாகி, அத்திசைக்கோர் தெய்வமாகி"*

நான்கு திசைகளுடன், கீழ், மேல் ஆகிய ஆறு திசைகளிலும் வாழ்கின்ற மக்கட்கெல்லாம் அருள் சுரக்கும் ஐயனாக அறுமுகம் தாங்கி நிற்கிறான். இவ்வழகிய பெருமானைப் பார்த்தாலும், அவன் புகழ் கேட்டாலும், அவன் திருநாமம் ஓதினாலும் உள்ளமெலாம் தித்திக்கும் பேரானந்த அனுபவம் பெறலாம். தேறுமுகமில்லாத அடியார்க்கு, தன் அருள்பொலி ஆறுமுகங் காட்டி, அழகுபொலி உருக்காட்டி, தன் அழகாலும், அருளாலும், அவர்தம் பாவம் தணிந்து, பிறவித் தாபம் தணிக்கும் பேரருளாளனாக மாவைப்பதியில் திகழ்கிறான். இவ்வருள் மாட்சியைத் தானே, மாவை முருகன்மேல் ஆறாத பக்திகொண்ட அடியவரொருவர்,

*"தெய்வநிறை சந்நிதிச் செந்நின்று கைநீட்டித்*
*திருவருட் டிறங்க லூன்லித்*
*தேயுமன மழியுமவர் செங்கைக்கு மெட்டுநீ"*

என்று பாடுகிறார்.

இவ்வழகான திருப்பெரும் வடிவத்தையுடைய எம்பெருமானின் விக்கிரகத்தைச் சகல கலைகளிலும் பாண்டித்தியம் கொண்டவரும், சிற்ப சாஸ்திரங்களில் மிகத் திறமான ஞானத்தை உடையவரும், சங்கீதப் பிரியரும், சைவானுஷ்டானங்களில் அதிசிரத்தை உடையவரும், தர்ம சிந்தனையாளருமான பிரம்மஸ்ரீ. ஏரம்பையர் அவர்கள் தமது கைகளாலேயே உருவாக்கினார் என்பதைக் கர்ணபரம்பரைக் கதையாகவும் நாம் அறிகிறோம். இவர் கந்த சஷ்டியில் உபவாசமிருந்து, திருக்கார்த்திகையன்று, மெழுகிலே இச்சுவரூபங்களை வார்த்தெடுத்து, வைகாசி விசாகத்தன்று, பஞ்சலோகங்களினாலே பூர்த்தி செய்தார் எனப் பதிவேடுகள் கூறுகின்றன. சிவபூஜாதுரந்தரர்கள் வேதகீதம் ஒலிக்க, மெய்யடியார்கள் திருமுறை ஓத, இளமங்கையர் இன்னிசை வாத்தியங்கள் ஒலிக்க, ஜன்னிய இராகங்களை ஆதீன இசையாளர் நாதஸ்வரமூலம் இசைக்க, அஷ்டமங்கள சகிதம் பூரணத்துவம் பெற்றதோர் யாகசாலையுள் வைத்து ஷண்முகப் பெருமானையும், வல்லி தேவசேனா சக்திமார்களையும் பஞ்சலோகத்தினாலே உருப்பெறச் செய்தாரென ஏடுகள் மூலம் அறியப்படுகிறது. ஜெயவீர சிங்கையாரியச் சக்கரவர்த்தியும் இவ்வுருவங்களைத் தரிசித்தாரெனவும் அறியப்படுகிறது. *(1458 - 70)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்திருவுருவங்கள் ஆனி உத்தரத்திற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, முதன்முதலாக மகோற்சவ காலத்தில் ஐந்தாம் திருநாளன்று ஆனந்தத் திருநடனத்துடன் எம்பெருமானின் சிறந்த உற்சவங்கள் ஆரம்பமாயின. இத்திருநடன உற்சவத்தை இங்கிருந்த நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஆரம்பித்து வைத்தனர். தாந்தாம் வேண்டியவற்றைச் சித்திகரமாகத் தந்தருளிய ஷண்முகப் பெருமானிடத்து அளவிலாப் பக்தி கொண்ட இச் செட்டிமார் திருச்செந்தூர் விழாக்களை அடியொற்றி இத்திருநடன உற்சவத்தை ஆரம்பித்து வைத்தனர். இன்றும் இத்திருநடனம் மிகவும் சிறப்பாக இடம் பெறுவதை யாவரும் அறிவர்.

மகோற்சவ காலங்களில் அதி முக்கியமாக இடம்பெறும் 'இரதோற்சவம்' பிரசித்தமானதாகும். இங்கே, விக்னேஸ்வரர், முத்துக்குமாரர், மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரர் தேரில் முன்செல்ல, பின்னால் இரதாரூடராய்ச் சண்டேசுவரர் தொடர, நடுநாயகமாக அழகிய சிற்பங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் 'முகோத்தர மகாரத'த்திலே ஷண்முகப் பெருமான் சக்திகளுடன் திருவூஞ்சலிற்றிருக்குங் காட்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது.

வருட முழுவதும் இடம்பெறும் விழாக்களுள் ஷண்முகப் பெருமானின் இரதோற்சவக் காட்சியே அதிசிறப்பு வாய்ந்ததாகும். அதிகாலையிலிருந்து மாலைவரையும் தேர் விழாவின் சிறப்புக்களையும் திருவருள் சுரக்கும் திருக்கோலப் பொலிவையும் வேறு எங்கேயும் காணமுடியாது. உற்சவங்களை நடாத்துவதற்கு எத்தனையோ புண்ணியங்கள் சேரவேண்டுமாம். அதுவும், இரதோற்சவம் செய்வதற்குப் பெரும்பெரும் தவங்களையும் செய்ய வேண்டுமாம். பெருந் தவமுடையார்க்கே இச் சிவபுண்ணியம் கிடைக்குமென நூல்கள் இயம்புகின்றன. மாவிட்டபுரத்திலும் உற்சவங்களை நிகழ்த்துவோர் பூர்வகன்மப் பயனுடையர் என்றே பகர வேண்டும். அதனால் உற்சவங்களும் புனிதமடைகின்றன.

பறங்கியர் காலத்தில் தரைமட்டமாக்கப்பட்ட இவ்வாலயத்தை, ஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்த வேளை - 1782ம் ஆண்டளவில் தீட்சிதர், சபாபதிக்குரு அவர்கள் மீண்டும் நிர்மாணித்து, திருமஞ்சனக் கிணற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பாக ஜலாதிவாசம் செய்யப்பட்ட மூர்த்திகளை வெளிக் கொணர்ந்து, பிரதிஷ்டை செய்து உடனேயே மகோற்சவங்களை ஆரம்பித்தபோது பஞ்சரதங்களையும் ஓடவிட்டுச் சிறப்பாக மகோற்சவங்களை நடாத்தினர் எனக் கச்சேரியிலுள்ள பதிவேடுகள் சான்று பகர்கின்றன. இப்பஞ்சரதோற்சவத்தை முன்னின்று நடாத்திய கந்தரோடை விஸ்வநாதர் அவர்கள் எக்காலமும் தமது சந்ததியினரே இதனை நடாத்தி வரவேண்டுமெனப் பிரார்த்தித்து அதற்கான சாசனங்களை நெறிப்படுத்தினார். 1825ம் ஆண்டிலும் 1896ம் ஆண்டிலும் 1910ம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்ட உறுதிகளின்படியும் இச்சந்ததியினரே இன்றும் இவ்விழாவை நடாத்துகின்றனர். அதுவே ஓர் உன்னத தவமாகும். 1927ம் ஆண்டு இப்பரம்பரை வழிவந்த ஆறுமுக ஞானியாரது இரண்டாம் புத்திரன் சுப்பிரமணியர் மகன் வைத்திய கலாநிதி ஆறுமுகம் அவர்களின் திருக்குமாரத்திகளான பிரகத் சுந்தரகுகாம்பாள், மரகதவல்லி என்போரை வதுவை செய்த, மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி வாசகரான புண்ணியசீலர் சின்னத்தம்பி (சாணையர்) யின் குமாரர்களான கந்தையா, சரவணமுத்து என்போர், இந்த இரதோற்சவத்தை நடாத்தும் சிவபுண்ணியத் திருத்தொண்டைப் பொறுப்பேற்றனர். ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து, இன்றும், இவர்களே இவ்விழாவினைச் சிறப்புற நடாத்துகின்றனர். இவர்கள் கல்வி, செல்வச் சிறப்போடு, குடும்பச் சிறப்பும் பெற்றதோடு, எந்நாளும் மலர்ந்த முகத்தோடும், தெய்வீக உணர்வோடும் இன்புற்று வாழ்கின்றனர். இவர்களை நாடு நன்கறியும்.

"*நகை, ஈகை, இன்சொல் இகழாமை நான்கும்*
*வகை என்ப வாய்மைக் குடிக்கு*"

என்னும் குறளுக்கமைய வாழ்ந்து வரும் இப்பெருந்தகையார்கள் குடிச்சிறப்பு இந்நாட்டின் மேன்மைக்கு உறுதுணை தருகிறது. இவர் முன்னோர்கள் ஆரம்பித்து வைத்த பெரும் புண்ணிய தர்மங்களை இன்றும் இவர்கள் மிகு சிறந்த சக்தி வாய்ந்தனவாக நடாத்தி வருகின்றனர். இவர் எண்ணங்கள் யாவும் தெய்வீகமுடையவையே, செயல்கள் எல்லாம் அதன் வழியனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார்*
*அடியார்தமை அமுது செய்வித்தல்*
*கண்ணினால் அவர்தம் விழாப் பொலிவு கண்டு ஆர்தல்"*

என்னும் பெரியபுராண அடியொற்றி மண்ணிலே வாழும் மாந்தர்களில் இறைவனைக் கண்டு, அமுது செய்வித்து ஆனந்த பரவசங் கொள்வார்கள், அன்னதானம் செய்து செய்து அளவற்ற திருவருளுக்காளாகிவிட்டனர். தமது தேர்த்திருவிழாவன்று திருமுருகப் பெருமானுக்கு சர்க்கரைப்பொங்கல் திருவமுது செய்வித்து வேதியர்கட்கெல்லாம் ஊண் பொருளீந்து, அன்றைய தினம் தேர்த்திருவிழாக் காணவரும் அடியவர்களுக்கு அமுது கொடுத்து மகிழ்வதை எங்ஙனந்தான் வார்த்தைகளாற் கூறமுடியும்! "ஷண்முகப் பெருமானுக்கு" எனக் கூறினாற் போதும்! உடல், பொருள், ஆவி அத்தனையும் ஒருங்கே அர்ப்பணிப்பர் இப் பெருந்தகையோர். முந்தையோர் ஷண்முகப் பெருமானுக்கு வெள்ளைக் கல்லினாலான ஒரு திருக்கோவிலை நிர்மாணித்தனர். கந்தையா, சரவணமுத்து அவர்கள் 1961ம் ஆண்டு ஷண்முகப் பெருமானுக்கு மகா மண்டபத்தில் ஒரு கருங்கற் திருக்கோவிலை நிர்மாணிக்க முன் வந்தனர். 1968ம் ஆண்டு இத் திருக்கோவிற் கருங்கற் திருப்பணியை முற்றுவித்து முழுமையான ஒரு ஷண்முக ஆலயம் அமைத்துவிட்டனர்.

இக் கும்பாபிஷேகத்தையும் தம் பொருட் செலவிலேயே நடாத்துகின்றனர். ஷண்முகப் பெருமானின் இரதோற்சவ உபயம் மூலம் நிரம்பிய திருவருளுக்காளான இவர்களும், இவர்தம் குடும்பத்தினரும் திரும்பத் திரும்பத் தமது செல்வங்களை மகேஸ்வர பூசை, அதிதி பூசை ஆகியவற்றிற்குச் செலவிடுவதால் இவர்களது குடும்பம் பரந்து விரிந்து இன்புற்று வாழ்வதை நாம் காணமுடிகிறது. ஷண்முகப் பெருமானின் இரதோற்சவத்தைப் பற்றியும் அவ்வுபயத்தை நடாத்துவது பற்றியும் ஒரு கதையுண்டு. இரதோற்சவத்துடன் ஒரு பரம்பரையும் வளர்ந்து வருகிறது. ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்துவரும் இப்பரம்பரையினர் எம் பெருமானின் திருவருளுக்காளாகி அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று வாழ்வதைக் காணும்போது ஏனையோர் உள்ளம் பூரிப்பதுபோல எமது உள்ளமும் பூரிப்படைகின்றது. "ஆறுமுக ஞானியார்" என்பவர் ஆறுமுகப் பரஞ்சுடரில் அளவிலாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி பூண்டவர். பெருமானின் நிழலில் வாழும் நோக்கோடு கீழை வீதியில் மடம் ஸ்தாபித்து ஜபதபங்களை இயற்றி வாழ்ந்து வரும்போது இப்போதிருக்கும் விசாலமான தேரோடும் வீதியை அமைப்பதற்கு அயராது உழைத்தனர். இவர் கந்தரோடை விசுவநாதரது மகன் கதிரித்தம்பி அவர்களின் புதல்வராவர். எக்காலமும் மாவை முருகப் பெருமானின் ஆலயம் வைதீக சமய அனுஷ்டானங்களின் கோட்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டுமென்ற அவாவினைக் கொண்டு பூசைகள் யாவும் தவறாது நடைபெற வேண்டுமென்பதற்காக சாதனங்களையும் உருவாக்கியவர்.

1838ம் ஆண்டளவில் கதிரித்தம்பி சிவபதமடைந்ததும், ஆறுமுக ஞானியார், முற்றுந் துறந்த முனிவர் போல கிழக்கு வாயிலிற் கட்டப்பட்ட தமது மடத்திலேயேயிருந்து நல்லறம் நடாத்திவருங் காலை 1849ம் ஆண்டில், இப்போது ஷண்முகப் பெருமானின் திருத்தேர் நிற்குமிடத்துக்கு முன்பாக இறைவனடி சேர்ந்ததும், அவ்விடத்திலேயே சமாதி வைக்கப்பட்டார். இன்றும் ஷண்முகப் பெருமானின் 'முகோத்தர மகாரதம்' இச்சமாதிக்கு முன்பாகவே நிலை கொண்டிருக்கிறது. ஆறுமுக ஞானியாரது மௌனாஞ்சலியும், தெய்வீகத் திருத்தொண்டின் பெறுபேறுகளும், உயர்ந்த புனிதமான சிந்தனைகளும் அவ்விடத்தில் இன்று நிலை கொண்டிருக்கின்றன. ஆறுமுக ஞானியாரது பேரன் வைத்திய கலாநிதி மூலம் இச்சந்ததியாரது வாரிசுகளாக வந்துள்ள கந்தையா, சரவணமுத்து ஆகியோரும் எவ்வித குறைவுமில்லாது தமது முன்னோரது பணிகளை நடாத்தி வருகின்றனர். இவர்களும் இவ் விழாவினைச் சிறப்புற இயக்குவதற்கு 1972ம் ஆண்டில் ஒரு சாதனம் இயற்றியுள்ளனர்.

திரு. கந்தையா அவர்களின் வாரிசு திருமதி. இராசேஸ்வரி கலியாணசுந்தரம், வைத்திய கலாநிதி திரு. சிவகுமாரன் அவர்களும், திரு. சரணவமுத்து அவர்களின் வாரிசாக, திருமதி. இராஜலட்சுமி - மகேஸ்வரன், பிரகத் சுந்தரகுசாம்பாள் - கந்தையா, வைத்திய கலாநிதி திருமதி. தனலட்சுமி, சரவணபவானந்தன் ஆகியோரும் இத்தேர்த் திருவிழா உபய தர்மகர்த்தாக்களாகச் செயற்படுவதோடு, ஒவ்வொரு வருடமும் முறை முறையாகச் சங்கற்பங்களை ஏற்று விழாவினைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக நடாத்த வேண்டுமென்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கந்தையா, சரவணமுத்து சகோதரர்கள் 1927ம் ஆம் ஆண்டில் இப்பஞ்சமகாரதோற்சவ உபயப் பொறுப்பை ஏற்று ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைகின்றனவெனில் அவர் தம் பெருமை சொல்லவும் ஆகுமோ? இதே வேளையில் ஷண்முகருக்கும் பூரணத்துவம் கொண்டதோர் திருக்கோவிலையும் நிர்மாணித்து பெருமாளை அங்கு எழுந்தருளுவித்து கும்பாபிஷேகமும் செய்விக்கின்றனர். ஆனந்தத் திருநடனத்துடன் மகாவல்லி, கஜவல்லி சமேத ஷண்முகப் பெருமான் வசந்த மண்டபத்திலிருந்து தமது புதிதான கருங்கற் திருக்கோவிலுக்குச் செல்லுங் காட்சியை என்னென்றுதான் வர்ணிப்பது! யசுர் வேதகீதங்களை அந்தணர்கள் ஒலிக்க, ருத்திரகான இசையோடு வேதியர்கள் கையிலேந்திச் சூழ்ந்துவர, அருணகிரியார் திருப்புகழ்ப் பாடல்களை மாவையாதீனத்து இசையாளர், நாதஸ்வர மூலம் அஞ்சலி செய்ய, சங்கும், முரசு, சேமக்கலம், சல்லரி ஓசைகளோடு அறுமுகப் பரஞ்சுடரின் திருவடிகள் தாம் துணையென வாழும் அடியார்களின் முருக பஜனைக் கூட்டம் பின்வர எம் பெருமான் தொண்டர்களின் தோள்மேலேற்றப்பட்ட அழகிய சிம்மாசனத்தில் வீற்றிருந்து அழகிய மரகத மயிலுடன், பன்னிரண்டு திண்டோளும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைத் திருவரையும், சீறடியும், செங்கையும், ஈராறு அருள் விழியும், மாமுகங்கள் ஆறும், விரிகிரணம் சிந்தப்புனைந்த திருமுடிகள் ஓராறும் எந்தத் திசையும் எதிர்தோன்ற வந்து அடியார் இடுக்கணெல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து உல்லாசமாக உளத்திருந்து, அடியாருடன் கூட்டித் தோயும் பரபோகம் துய்ப்பித்து, சேய கடியேமுக்கும் பூங்கமலக் கால்காட்டி எம்மையெல்லாம் ஆட்கொள்ளும் காட்சியை வேறெங்கேனும் காண்போமோ? முடியாது!

இக்காட்சியை என்னென்று தான் சொல்வது! இந்த வையகமே இதன் மூலம் புனிதமடைகின்றது. இதுபோன்ற, பெருந்தவப் பயனாக வந்ததொரு சந்தர்ப்பத்தை எமக்கு ஏற்படுத்திய மகான்களை, "நீங்கள் எங்கு தான் பிறவி எடுப்பினும் அங்கெல்லாம் உங்கள் தருமம் துணை தருவதாக" என நாம் ஆசீர்வதிப்பது போல, ஏனையோரும், கந்தையா, சரவணமுத்து சகோதரர்களுக்கு எக்காலமும் ஷண்முகப் பெருமானின் திருவருள் துணை நிற்கவேண்டுமெனப் பிரார்த்திப்பார்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சரத உற்சவ சிறப்பால் இந்நாடே செழிப்புறுகிறது. 1927ம் ஆம் ஆண்டில் இவ்வுற்சவத்தைப் பொறுப்பேற்றபோது, ஈழநாட்டிலே, முதன்முதலாக 1789ம் ஆம் ஆண்டில் தென்னிந்திய காரைக்குடி ஸ்தபதிகளால் அழகாக உருவாக்கப்பட்ட "முகோத்தர மகாரதமும்" வேறும் நான்கு பழமையான தேர்களுந்தான் இருந்தன. 1782ம் ஆம் ஆண்டில் உள்ளூர்ச் சிற்பிகளால் ஆக்கப்பட்ட ஷண்முகரது தேரானது, 1789ம் ஆம் ஆண்டிற்குப்பின் மீனாட்சி சுந்தரேஸ்வரர் தேராக 1952ம் ஆம் ஆண்டு வரை பவனி வந்தது. பின்னர் இத்தேர் கீரிமலைச் சிவாலயத்தின் உபயோகத்துக்கு விடப்பட்டது. 1945ம் ஆம் ஆண்டிலிருந்து விக்னேஸ்வரர், முத்துக்குமாரர், மீனாட்சி சுந்தரேஸ்வரர் சுவாமிகளுக்குப் புதிய தேர்கள் உருவாக்கப்பட்டன. இத்தேர்த் திருப்பணிக்குப் பொதுமக்களிடமிருந்தும் நிதியுதவி வேண்டப்பட்டது. சகடைத் தேர்களாகக் காணப்பட்ட இத்தேர்களை மாற்றிப் புதுச் சிற்பத் தேர்களாக உருவாக்கிய பெருமை எமது கோவிற் சிற்பாசாரியர் களான மாவை திரு. செ. சுப்பிரமணியம், திரு. நடேசு ஆகியோர்களைச் சாரும்.

1782ம் ஆம் ஆண்டில் ஷண்முகருக்கு உருவாக்கப்பட்ட புதிய 'முகோத்தர மகாரதம்' 1955ம் ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதும் கந்தையா, சரவணமுத்து குடும்பத்தினர் உடனடியாக எனது தந்தையாரைக் காரைக்குடிக்கு அனுப்பிவைத்து, இந்தியாவிற் தலை சிறந்த சிற்பியான சோமசுந்தர ஸ்தபதியை அவரது ஆட்களுடன் இங்கே வரவழைத்து இவ் இரதத்தைத் தமது செலவிலேயே புதுப்பித்தனர். இவ்வேளையில் சோமசுந்தர ஸ்தபதி தனது மகன் லெட்சுமணனுக்கு எமது கோயிலில் வைத்துச் சிற்ப சாஸ்திர வித்தியாரம்பத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது தந்தையாரையும் விஞ்சிய சிற்பியாகி, இன்று அனலைதீவு ஐயனார் கோவிலில், ஈழமே பிரமிக்கத்தக்கதோர் முகோத்திர மகாரதத்தை, எமது இரதத்தின் சாயலிலேயே செய்துள்ளார். இன்றும் இவ் இலட்சுமண ஸ்தபதி மாவை முருகப் பெருமானின் திருவருளை நாடி அடிக்கடி இங்கு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நான்கு தேர்களும், அழகு வாய்ந்ததோர் பெருங் காட்சியைத் தேர்த்திருவிழாவினன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிப்பதனால் இந்நாடே மேன்மையடைகின்றது. இருப்பினும், ஐந்தாவது தேரான சண்டேஸ்வரருடைய தேர் அழகற்றதாயிருக்கும் குறை ஒன்றுண்டு. இக்குறை விரைவில் நீக்கப்பட வேண்டுமென்பது எமது பிரார்த்தனையாகும்.

தேர்த்திருவிழாவன்று அன்னதானம், வஸ்திரதானம், ஹிரண்யாதானம், அதிதி பூசை, கோபூசை, தேவபூசை என்றெல்லாம் இவ்வுபயகாரர்கள் இயற்றுவது வழக்கமாகிவிட்டது. இறைவனும் இவர்களுக்குத் திரவியம் வழங்க வழங்க இவர்களும் அதனை இறைவனுக்கே வழங்கி வருகின்றனர். அதிகாலையில், வேத சிவாகமங்கள் கூறும் அபிஷேக பூசைத் திரவியங்களால், இறைவனை அபிடேகித்து விசேஷ பூசைகள் நடாத்தி, அதிமதுரமான சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து பஞ்சமூர்த்திகளைப் பஞ்சரதங்களில் எழுந்தருளச் செய்து, தமது தர்மங்களைச் சோரவிடாது நீடூழி நிலைபெற்று இயங்க வேண்டுமென்பதற்காகப் பெருந்தொகைப் பணத்தில் புதிதாக்கிய அன்னசத்திரம் போன்று வழங்கும் கீழ் வீதியிலுள்ள தமது மடத்தில் நைவேத்திய பூஜைகளை ஒழுங்கு செய்து, அங்கிருந்து உரிய உபசாரங்களோடு பஞ்சரதங்களை வலம்வந்து சங்கற்பங்களைக் கொண்டு விலையுயர்ந்த பட்டு வஸ்திரங்கள், சுகந்த மலர்மாலைகள் ஆகியவற்றை அணிவித்துத் தத்தமது நேர்த்திக் கடன்களைச் சமர்ப்பித்த பின் மகேசுவர பூசைகளை நடாத்துவர். அன்று மாலை இந்த இரதோற்சவத்திற் பங்குபற்றிய நாதஸ்வர காரர்களுக்கும், பூமாலை சாத்தி அழகு செய்தவர்களுக்கும், தேரினை நெறிப்படுத்திப் பவனி செய்வித்த சிற்பிகளுக்கும், தேர்களை அலங்கரித்த ஊழியர்களுக்கும், இன்னும் யார் யாரெல்லாம் இவ்விழாவில் ஊழியஞ் செய்தனரோ அவர்கள் யாவர்க்கும் வஸ்திரதானம், ஹிரண்ய தானம் ஆகியன கொடுத்து உபசரிக்கும் மாண்புமிகு பெருந்தொண்டை நினையுந்தோறும், இத்தொண்டினைச் செய்வதற்கு நாம் எத்தனை தவம் இயற்றவேண்டும் என்பது புலனாகும். கொல்லங்கலட்டி, "சங்கர சாணையர்" என்றால் எல்லோருக்கும் இவரைத் தெரியும். எந்நேரமும் மாவை முருகனின் வாசலிலேயே நிற்பார். இவரது மூத்தவர் சங்கரப்பிள்ளையோ தர்மங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுவதற்குப் பின்நிற்கார். மிகுந்த குருபக்தி கொண்டவர். சிவாச்சாரியார் இடும் கட்டளை எதுவாயினும் அதனைக் குருவாக்கெனக்கொண்டு உடனியற்றுவர். தனது சகோதரர்களான கந்தையா, சரவணமுத்து ஆகியோருக்கு அவர்களாற்றும் திருத்தொண்டில் உறுதுணையாக நின்று செயலாற்றும் கர்மவீரர். இவரது நல்லறங்களை நாடு நன்கறியும். ஷண்முகரது பூரண திருவருளுக்காளாகிய இவர்களும், இவர்களது குடும்பமும் குறையெதுவுமின்றி இனிது வாழ வேண்டுமென்பதே எமது நித்திய பிரார்த்தனை. இரதோற்சவத்தையடுத்து ஷண்முகப் பெருமானின் அடுத்த உற்சவம் தைப்பூச விழாவாகும். திருக்கார்த்திகை திருநாளின்போதும் ஷண்முகப் பெருமானுக்கு விசேஷமான அபிஷேகமும், ஷண்முகார்ச்சனைகளும் நிகழும் மகர மாதத்தில் இடம்பெறும். இலட்சார்ச்சனைப் பூர்த்தியிலன்று மஞ்சத்தின்மீது பவனி வருவார். இலட்சம் உருப்பெறுவதற்காக வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளும் ஷண்முகர் பத்துத் தினங்கள் வரை அபிஷேக ஆராதனைகளைப் பெற்று இலட்சம் உருக்கொண்டு மஞ்சத்தின் மீதிருந்து அடியார்களை ஆட்கொள்ளும் காட்சி மகா அற்புதமானது. இந்த இலட்சார்ச்சனை உற்சவங்களைப் பலர் பங்கு கொண்டு நடாத்துகின்றனர். இவற்றோடு பலர், தத்தமது இஷ்டகாமிய சித்திகளைப் பெறுவதற்காக ஷண்முகர்க்குச் ஷண்முகார்ச்சனை நடாத்துவதும் வழக்கம்.

மாவையம்பதியிலே ஷண்முகப் பெருமானுக்கு நடாத்தப்படும் உற்சவங்களை நடாத்துவோரும், தரிசிப்போரும் உண்மையில் இக்கலியுக இடர்கள் நீங்கப்பெற்று பேரின்ப சுகத்தைப் பெறும் அதிக வாய்ப்புகளைப் பெறுவர் எனக்கூறி முருகப் பெருமான் குருவாய் வந்து எல்லோருக்கும் அருள வேண்டுமெனவும் பிரார்த்திக்கிறேன்.

கலியுகம் 5079
பாற்குண மீ உம் நாள் புதவாரம்
(15 - 03 - 1978)

(இந்த மகோன்னதமான தேர்கள் அனைத்தும் பாவனை செய்ய முடியாத நிலையில் இருப்பது வருந்தத்தக்கது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஸ்ரீ மஹாவல்லி, கஜவல்லி உற்ஸவ மூர்த்திகள் பிரதிஷ்டா

# கும்பாபிஷேக வைபவ விஞ்ஞாபனம்

**(21-06-2002 வெள்ளிக்கிழமை)**

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

**மாவை ஆதீனகர்த்தா – பிரதம குரு**

**யாதினுமினியீர்,**

வாழ்வுபெற்ற வல்லி மாருதப்புரவீகவல்லியின் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து இடம்பெற்ற சுக்கிரவாரோற்ஸவம், கிருத்திகா மகோற்ஸவம் மற்றும் முக்கிய உற்ஸவ தினங்களில் அடியார்கட்கெல்லாம் அருள்பாலிக்கும் உற்ஸவ மூர்த்திகளான மஹாவல்லி, கஜவல்லி மூர்த்திகளும் 1200 வருடங்களின் பின் இப்போ காணாமல்போயின. 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20ம் நாள் ஆலய சுற்றாடலில் நிகழ்ந்த இராணுவ நடவடிக்கைகளால், மக்களனைவரும் அவசர அவசரமாக உயிர்காப்பிற்காக இடம்பெயர்ந்து வெளியேறும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நாமும் இடம்பெயர்ந்தோம். ஆறு வருடங்களின் பின் 1996ம் ஆண்டு வைகாசி மாதம் 20ம் நாள் கோவில் வளாகத்தை பார்வையிட்டபோது உற்ஸவ மூர்த்திகள் பலதும் காணப்படவில்லை. அவற்றுள் மேற்படி மகாவல்லி, கஜவல்லி மூர்த்திகளும் காணப்படவில்லை. ஆலய பூர்வீகத் தொன்மை, சைவத் தமிழர்களது சரித்திர முக்கியத்துவம், சமய அனுஷ்டானங்களால் வளர்த்தெடுக்கப்பட்ட அருட் சூழல், சமய விழாக்களில் மேற்கொள்ளும் கிரியைகளினால் பெருக்கப்பட்ட சிவபுண்ணிய கைங்கர்யங்கள் என்பனவற்றை தன்னகத்தே கொண்ட ஆலயங்களையும், சைவக் கலை, கலாசாரங்களை வாழ வைத்துக் கொண்டிருந்த ஸ்தாபனங்களையும் அக்காலத்திய அரசு போர்ச்சூழல் நிலை என்ற காரணத்தைக் கூறிக்கொண்டு அழித்தொழித்தும் வேண்டப்படாத. தகாத செயல்களால் மாசுபடுத்தியும் சைவத்தமிழர்கட்கு, கொடுமைகளையும் புரிந்தனர். மாவிட்டபுர ஆலயமும் சூழலும் இந்த கொடுமைகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி நின்றன. முன்பு ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்கூட இவ்வாறுதான் சைவர்கட்கு தொல்லை கொடுத்து வாழ்ந்தனர்.

ஈழ மண்டல சைவமக்கள் காலத்தால் சேதங்கொண்ட தமது கலை, கலாச்சாரங்களை முன்னெடுத்து நிற்க வேண்டுமென்ற வகையிலும், அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வளரவேண்டுமென்ற சிந்தனைகளுக்கு உயிரூட்டி நிற்கிறார்கள். இவ்வகையில் யாமும் மாவிட்டபுரம் ஆலயத்தை முன்பிருந்த ஸ்தானத்தில் அமைத்தது போன்று அமைக்க சங்கல்பங்கொண்டு அதற்கான முழு ஆயத்தங்களையும் எடுத்து வருகின்றோம். இறைவன் திருவருளால் எமது எண்ணங்கள் மெல்லமெல்ல கைகூடி நிற்கிறது.

உற்ஸவ மூர்த்திகளை முதலாவதாக விக்னேஸ்வர உற்ஸவ மூர்த்தியை மீளமைக்க வீமன்காமம் ஆறுமுகம் மகேந்திரன் குடும்பத்தினர் முன்வந்தனர். விக்னேஸ்வர மூர்த்தியும் எதுவித இடையூறுகளுமின்றி மாவையாலயத்திற்கே வந்து சேர்ந்துவிட்டதும் ஓர் அற்புதமே.

இரண்டாவதாக வள்ளியம்பாள் உற்ஸவ மூர்த்தியை மீளமைக்க தெல்லிப்பழை நா. தம்பிராசா அவர்களும், தெய்வானையம்பாள் உற்ஸவ மூர்த்தியை மீளமைக்க தெல்லிப்பழை பொ. தங்கராசா அவர்களும் உடனேயே உதவிபுரிந்தனர். இவ்விரு உற்ஸவ மூர்த்திகளும் இந்தியாவிலிருந்து எதுவித இடையூறுமின்றி அருமையானதோர் உத்தர நட்க்ஷத்திர முகூர்த்த நன்னாளில் மாவையாலயம் வந்துசேர்ந்தன. இதுவும் ஓர் அற்புதமே.

திரு. தம்பிராசா, திரு. பொ. தங்கராசா ஆகியோர் மாவை யாலயத்தின் பரம்பரைப் பக்தர்கள். ஆலய வளர்ச்சிக்கும், ஆதீனத்தின் மாட்சிமைக்கும் உடல், பொருள், ஆவி அத்தனையாலும் உதவிவரும் சிவதொண்டர்கள். ஆலய மஹோற்ஸவ கால பத்தொன்பதாம் திருநாள் உபயத்தின் நடைமுறைகட்குச் சார்பானவர்கள். புண்ணிய தர்மங்களை ஆற்றி வருபவர்கள். திரு. N. தம்பிராசா அவர்கள் தனது மகன் ஸ்கந்தராசு அவர்களதும் ஞாபகார்த்த புண்ணிய உபயமாக வள்ளியம்பாள் உற்ஸவ மூர்த்தியை மாவைக் கந்தனிடம் சமர்ப்பிக்கின்றனர். திரு. பொ. தங்கராசா அவர்கள் தமது தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வானைப்பிள்ளை அவர்களது ஞாபகார்த்தமாக தெய்வயானையம்பாளை மாவைக்கந்தனிடம் சமர்ப்பிக்கின்றார். இந்த இரு உற்ஸவ மூர்த்திகளது பிரதிஷ்டா கும்பாபிஷேகம் மாவைக் கந்தனது கும்பாபிஷேக நினைவு தினமான சித்ரபானு வருடம் ஆனி மாதம் 7ம் நாள் 21-06-2002 ஏகாதசியும், சுவாதி நக்ஷத்திரமும் கூடிய வெள்ளிக்கிழமை இடம்பெறத் திருவருள் கூடியிருக்கிறது. இனிவரும் உற்ஸவ சுப தினங்களில் இம்மூர்த்திகளும் சுப்ரமண்ய பெருமானோடு இணைந்து எழுந்தருளப்படும்.

அறிவாலறிந்து இறைவன் இருதாள் நினைந்து, மனதால் மகிழ்ந்து, மந்திரமான நீறணிந்து மனதால் நினைக்கும் கருமங்கள் இறைவன் துணையால் இனிதே நிறைவுகொள்ளும் என்றவாறு திரு. நா. தம்பிராசா அவர்களும், திரு. பொ. தங்கராசா அவர்களும் சைவ உலகிற்கு மாவை கந்தசுவாமியார் ஆலயம் மூலம் வழங்கிய சிவதர்ம கைங்கர்யத்தை நினைந்து சைவ மக்கள் ஆனந்திக்கிறார்கள். இவ் இருவர்களது குடும்பம், சுற்றம் என்றும் நீடூழி வாழ்ந்து மாவைக் கந்தனது திருவருளுக்கு ஆளாக வேண்டுமென யாம் என்றும் பிரார்த்திப்போம்.

மேற்படி கும்பாபிஷேக வைபவத்தில் அனைவரும் இணைந்து தரிசித்து இஷ்ட காம்யங்களைப் பெற்று உய்வீர்களாக.

**பெரிய புராணம்**

*தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று*
*மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பம்ஆம் என்று*
*கண்ணில் ஆனந்த அருவிநீர்சொரியக் கைம்மலர் உச்சிமேற் குவித்துப்*
*பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார் பரவினார் பணிந்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மாவைக் கந்தசுவாமி பேரிற் பாடிய
# ஊஞ்சற் பாக்கள்

இஃது சாலிவாகன சகாப்தம் 1764 ஆம் வருடம் சுபகிருது வருடம் (1842ஆம் ஆண்டு) ஆடிமாதம் யாழ்ப்பாணம் நல்லூர், ம. சரவணமுத்துப் புலவனாரவர்களால் இதற்கு முந்திய ஊஞ்சற் பாக்களோடு ஒப்பிட்டுத் திருத்தியுஞ், சேர்த்தும், புதிதாக்கிக் கோவில் வஸந்த மண்டபத்தில் வைத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பெருமக்கள் என்போர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

**காப்பு**

சீர்பூத்த திருமாது மகிழுஞ் செல்வத்
திறம்பூத்த தென்னிலங்கைத் தேசந் தன்னில்
ஏர்பூத்த நகுலகிரிக் கருகி லென்று
மிசைபூத்த மாவைநகர்க் கந்தர் மீது
பார்பூத்த பனிமலர்கைக் கொண்டு போற்றிப்
பண்பூத்த வூஞ்சலிசை பணிந்து பாட
கார்பூத்த கரடதட விகடம் பூக்குங்
கழிபூத்த கரிமுகன்றாள் காப்ப தாமே.

சுதியோங்கு நாதவிந்து கால்க ளாகச்
சுடரோங்குஞ் சத்திமணி விட்ட மாக
விதியோங்கு மந்திரமெல் லிழைய தாக
வியனோங்கு மறைநான்குங் கயிற தாகப்
பதியோங்கு சதாசிவமெய்ப் பலகை யாக
பரமோங்கு பிரணவமா சனம தாக
மதியோங்கு மவுனமறை முனிவ ரோங்கும்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 1

சொயமேறு தும்புருநா ரதர்பண் பாடச்
சுரமேறுந் தந்திரியாழ் சுருதி கூட
நயமேறு மரம்பையர்கள் நடன மாட
நண்பேறுங் கந்திருவர் நயந்து நாடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமேறும் பல்லியமெண் டிசையி னீடப்
பண்பேறுங் கொம்பினிசை பரவை மூட
வயமேறும் புகழேற வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 2

விண்பலிக்குந் துந்துமிவீ றெங்கு மேற
விதம்பலிக்குந் தவில்பம்பை மீது சேறக்
கண்பலிக்குங் கடிமுரசங் ககனங் கீறக்
கணம்பலிக்குஞ் சங்கோசை கடலை மீறப்
பண்பலிக்குந் தித்திமிமத் தாளங் கூறப்
பயன்பலிக்குந் தொண்டர்பரி பாகந் தேற
மண்பலிக்கும் வரம்பலிக்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 3

வெயிலிலங்கும் வெண்கவிகை விண்ணின் மேவ
விருதிலங்குங் கொடிகள்வெளி முகடு நீங்க
கயிலிலங்கும் வெண்கவரி மென்கா லேவக்
கதிரிலங்கு மாலவட்டங் ககனந் தாவக்
குயிலிலங்குஞ் சோலைமலர் கொண்டு தூவக்
கொடியிலங்குஞ் சேவல்குதி கொண்டு கூவ
மயிலிலங்கும் வடிவிலங்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 4

சுகந்தேடுஞ் சுத்தர்விழி யருவி சோரச்
சுழிதேடும் பரமுத்தர் தொழுது சேரச்
சகந்தேடுந் தனிவீரர் தயவு கூரச்
சமர்தேடும் பூதகணத் தலைவர் சார
அகந்தேடு மருளறிவா னந்த மார
அடிதேடும் பழவினையே னவலந் தீர
மகந்தேடும் மறைதேட வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 5

சினந்துதிக்குஞ் செந்திருமால் சென்று தாளச்
சீர்துதிக்குந் திசைமுகன்சே வடியில் வீழ
இனந்துதிக்கு மிமையவரெங் கெங்குஞ் சூழ
விசைதுதிக்கு மிந்திரனா யிரங்கண் வாழ்க
கனந்துதிக்குங் காளமண்ட கடாகங் கீறக்
கலைதுதிக்கும் முனிகருணைக் கடற்க ணாழ
மனந்துதிக்க வாய்துதிக்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்திகழுஞ் செங்கனக முடிக ளாடத்
திசைதிகழுந் திருமுகஞ்செய் சோதி யாடக்
குருத்திகழும் விழிக்கருணை குலவி யாடக்
குலந்திகழுங் கோலமணிக் குழைக ளாடத்
தருத்திகழுந் தண்கடம்ப மாலை யாடச்
சயந்திகழுந் தனிவேலும் மயிலு மாட
மருந்திகழு மார்பாட வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 7

அரம்போற்று மயிற்கணையுஞ் சிலையு மாட
வரிபோற்று மரமகளி ரருகி லாட
உரம்போற்று முபவீத முலவி யாட
ஒளிபோற்றுங் கச்சுமுடை வாளு மாடக்
கரம்போற்றுங் கவினபய வரத மாடக்
கழல்போற்றுந் தண்டைகவின் கலினென்றாடப்
பரம்போற்றும் மறைபோற்ற வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 8

குலஞ்செயருட் கோலரே யாடீ ரூஞ்சல்
கூர்செய்சமர்க் கோலரே யாடீ ரூஞ்சல்
பலஞ்செய்யுமை பாலரே யாடீ ரூஞ்சல்
பழமறைக்கப் பாலரே யாடீ ரூஞ்சல்
புலஞ்செய்புரி நூலரே யாடீ ரூஞ்சல்
போதகஞ்செய் நூலரே யாடீ ரூஞ்சல்
வலஞ்செய்வடி வேலரே யாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 9

இறைசெழிக்கும் ராசமனு நீதி வாழி
இனஞ்செழிக்கும் வேதமிருக் காதி வாழி
முறைசெழிக்கும் முனிவர்கள்யா கங்கள் வாழி
மும்மாரி பொழிந்துலகத் துயிர்கள் வாழி
நிறைசெழிக்கு மாறெழுத்தும் நீறும் வாழி
நிதஞ்செழிக்கும் சைவம்நீ டூழி வாழி
மறைசெழிக்கும் வள்ளிதெய் வானை வாழி
மாவைநகர்க் கந்தர் தினம் வாழி வாழி. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
*சிவமயம்*

# மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்

**சுன்னாகம்**

**முத்துக்குமார கவிராசர் இயற்றியது**

**(1805)**

கோவிற் கடவைக் குருபரனா ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறுங் - காவிச்செலும்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனார்
தாவடியே ழஞ்சுமையைத் தான்.

## திருவிழாத் தரிசனச் சிறப்பு

கருவிழா உலகினிடைப் பிறந்துமெய்ம்மை
மறந்துழலுங் கன்ம சென்ம
உருவிழா முன்னெவரே யாயினுங்கோ
விற்கடவை யுறையுந் தேவைப்
பெருவிளாங் கனிக்கான்கன் றெறிந்தமான்
மருகன்வேற் பெருமா னுக்காந்
திருவிழாத் தரிசிக்கச் செல்லுவார்
யமதண்டம் வெல்லு வாரே.

## திருவிழாச் சேவையின் பலன்

கார்பழயு நகுல கிரித் திருக்கோவிற்
கடவையினார் கடவுஞ் செம்பொற்
தேரடியிற் பின்னடியார் திருக்கூட்டத்
துடன் வலமாய்த் தரிசிப் பார்கள்
ஓரடிக்கோர் பரிமகப்பே றடைவருடம்
பாலுருள்வா ருற்ப வத்தின்
வேரடியுங் கடந்துகந்த வேளடியின்
முத்திசென்று மேவு வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சப்பர மஞ்சத் திருவிழா

நூறுநா லாறுதிருக் குடையானுங்
கணங்களும்போய் நுவன்று நாமங்
கூறிநாத் தழும்புறவே தொழும்புறுங்கோ
விற்கடவைக் குகனார் கண்ணீ
ராறினார் திருமுகங்க ளாறினார்
படைக்கஞ்சா வயிலார் சங்கத்
தேறினார் சப்ரமஞ்சத் தேறினா
ரடியவரீ டேறி னாரே

### சுப்பிரமணியக் கடவுள் பவனி வருதல்

மல்லாக மாதகலான் மருகன்சுன்
னாகத்தான் மகன்பா வாணர்
சொல்லாச்சீ ரீவினையான் றுன்னாலை
யானத்தான் சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா
மத்தானைச் சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத்
திடைப்பவனி வரக்கண் டேனே.

### காதல் மகளிர் செயல்

கரைக்காற் புனல்வயற் றென்மாவைக்
கோவிற் கடவைச்செவ்வேள்
வரைக்கா லிரத மணிக்குர
லார்ப்பு வருமுன்னமே
அரைக்கான் முக்காற் கணக்குக்கு
மென்சந்த மளாவுநறு
விரைக்கா றரக்கடுங் காலாய்
விளைந்தது மெய்யெங்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பெருமைபெற்று விளங்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

**கா. சிவபாலன்**

இலங்கையிலே பிரசித்தி பெற்ற முருகப் பெருமான் வழிபாட்டுத் தலங்களில் மாவை முருகப் பெருமானும் ஒன்றாக மிளிருகின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுப் பெருமையும் கொண்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு செல்லும் நெடுஞ்சாலையில் பத்து மைல் தொலைவில் உள்ளது. காங்கேசன்துறை, தெல்லிப்பழை, மயிலிட்டி என்பனவற்றின் உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்த பகுதிகளை எல்லையாகக் கொண்டது.

"கோயிற்கடவை" என்னும் இடப்பெயர் மாவிட்டபுரம் ஆகியது. மாருதப்புரவீகவல்லிக்கு குதிரைமுகம் நீங்கியமையால் "மாவிட்டபுரம்" எனும் மறுபெயர் கொண்டது. மா-குதிரை, விட்டம் - நீங்கிய, புரம் - இடம் குதிரை முகம் நீங்கிய இடம் எனப் பொருள் தருகின்றது.

மாருதப்புரவீகவல்லி தன் நோய் நீங்கி, இளமையும் அழகும் உடையவளாக விளங்கிய காலத்தில் தங்கிய இடம் "தல்லிப்பள்ளி" என்பதாகும். இப்பெயர் மருவி "தெல்லிப்பழை" எனப் பெயர் பெற்றது.

ஊரின் சிறப்பை உரையாசிரியை ம. க. வேற்பிள்ளை தாம் இயற்றிய உரை செய்த ஈழமண்டல சதகத்தில் விரிவாகக் குறிப்பிடுகின்றார்.

மாவை முருகன் தலம் மீது அளவு கடந்த பக்தி கொண்ட முத்துக்குமார சுவாமிகள், இருபாலை சேனாதிராசா முதலியார், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வறுத்தலைவிளான் மயில்வாகனப் புலவர், சரவணமுத்துப் புலவர், அப்பாக்குட்டிப் புலவர், பூநகரி மு. கனகசபை, கரணவாய் செவ்வந்திநாத தேசிகர், கோப்பாய் சபாபதி நாவலர், தெல்லிப்பழை மு. பு. பொன்னம்பலபிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக் காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசஐயர், சைவப் பெரியார் இறைஒளி நமசிவப்பிரகாசம், அளவெட்டி அருட்கவி. சீ. விநாசித்தம்பிப்புலவர், ஏழாலை பண்டிதர் மு. கந்தையா போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

மாவை முருகன் வரலாற்றை உரைநடையில் தல வரலாறு எழுதியவர் மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள். இன்றைய மாவை ஆதீனகர்த்தாவாக விளங்கும் குருக்கள் ஐயாவின் பணியே இதுவாகும். கோயிற் கடவை என்னும் பெயரில் பிரம்மஸ்ரீ சுந்தரராசசர்மா எழுதியுள்ளார்.

நாடக நூல் வடிவில் "வாழ்வு பெற்ற வல்லி" என்னும் பெயரில் தமிழருவி த. சண்முகசுந்தரம் அதிபர் அவர்கள் எழுதியுள்ளார். மேலும் இவர் மாவை முருகன் காவடிப்பாட்டு இயற்றியுள்ளார்.

கலியுகத்தில் தன்னாட்சி செய்யும் மாவை கந்தப் பெருமானின் பெரும் புகழை தமது நூல்களில் எல்லாம் குறிப்புக்கள் வெளியிட்டுள்ளனர். கைலாய மாலை, திருக்கோணேசர தலபுராணம், நகுலகிரி புராணம், யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண சரித்திரம், யாழ்ப்பாண வைபவ விமர்சனம், இடம்பெயர் ஆராட்சி, யாழ்ப்பாண பூர்வீக வைபவம், ஈழமண்டல சதகம் என்னும் நூல்களில் எல்லாம் பரவக் காணலாம்.

கலாபூஷணம் பண்டிதர் சீ. அப்புத்துரை "மாவை முருகன் கவிப்பூங்கொத்து" என்ற பெயரில் 1977ம் ஆண்டு தொகுப்பு நூலாகப் பதிப்புப்பணி செய்து இருக்கிறார்.

மாவை முருகப் பெருமானின் மகோற்சவம் ஆண்டு தோறும் ஆடி அமாவாசைத் தீர்த்தத்தை அந்தமாகக் கொண்டு இருபத்தைந்து தினங்கள் நடைபெறும். நாட்டு நிலைமை காரணமாக தற்போது கொடி ஏற்றம் நிகழாது அலங்கார உற்சவமாக நடைபெற்று வருகின்றது.

காலனார் வருதல் கண்டு கலங்கிடும் போது மாவை
வேலனே யென்று உன்னை விருப்பொடு அழைப்பேன் நீயும்
கோலமா மன்னரை மீது குலவிட வந்த காட்சி
ஞானம் தெனக்குத் தந்து நல்லருள் புரிகுவாயே!

என மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற மாவை முருகப் பெருமானை வழிபாடு செய்து உய்தி பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டின் கீர்த்தி மிக்க முப்பெரும் முருக ஷேத்திரங்கள்

ஊரெழு அ. கனகசூரியர்

"அருவமும் உருவுமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய"

முருகப் பெருமானின் அவதாரத்தை கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் மிகவும் அழகாகச் சொல்கிறார். இவ்வாறு தோற்றம் பெற்ற முருகன், தமிழ் தெய்வமாக தமிழ் மக்கள் வதியும் இடங்களிலெல்லாம் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

நமது இலங்கைத் திருநாட்டில் பல முருகன் ஆலயங்கள் இருந்தும், ஒரு சிலதான் வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், பலராலும் அறியப்பட்டதுமாக விளங்குகின்றன. அவற்றுள் கதிர்காமம், மாவிட்டபுரம், நல்லூர், செல்வச்சந்நிதி முருகன் ஆலயங்களை சிறப்பாகக் குறிப்பிடலாம். கதிர்காமத் திருத்தலம் அருணகிரிநாதரின் திருப்புகழ் மூலம் புகழ்பெற்றது. இது தென்னிலங்கையில் உள்ளது. ஏனைய மூன்று ஆலயங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்துள்ளது. இவை நீண்ட காலத்திற்கு முற்பட்ட சரித்திரப் பிரசித்தி பெற்றவைகளாகும்.

சொற்பதங் கடந்த அற்புதக் கந்தனாக, கோயில் கொண்டருளிக் காட்சி தரும் மிகப் பழம்பெருமை வாய்ந்தது மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமாகும். இது, யாழ். மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு பகுதியில் அமைந்துள்ளது.

மாவிட்டபுரத்திற்கு மிக அண்மையிலுள்ளது "கண்டகி" என்னும் புனித தீர்த்தமாகும். அது இப்பொழுது கீரிமலை என வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் நீராடி உடல் ரீதியான பிணிகள் நீங்கியோர் பலர் என்பது வரலாறு.

திசையுக்கிரசோழன் மனைவியாகிய கனகாங்கி என்பவள் குதிரை முகமுடைய பெண் பிள்ளையொன்றைப் பெற்றெடுத்தாள். மாருதப்புரவீகவல்லி என்ற பெயருடைய அந்த அரசகுமாரி குன்ம நோயினாலும் பீடிக்கப்பட்டிருந்தாள். அவள் சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து "கண்டகி" யில் (கீரிமலை) தீர்த்தமாடிவிட்டு வரும் வழியில் அவளது குதிரை முகம் மாறி அழகுத் தோற்றத்தைப் பெற்றதாகவும், அந்த இடமே மாவிட்டபுரம் (மா - குதிரை, விட்ட - நீங்கிய, புரம் - நகரம்) என அழைக்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. தனது குதிரை முகம் நீங்கியதால் மகிழ்ச்சியடைந்த அரசிளங்குமரி மாருதப்புரவீகவல்லி, அவ்விடத்தில் முருகனுக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தை தெரிவிக்கவே, சோழமன்னனும் அங்கிருந்து ஆலயம் அமைப்பதற்கு வேண்டிய பொருட்களுடன் தொழிலாளர்கள், ஆலய விக்கிரகங்கள், சிதம்பரத்தைச் சேர்ந்த அந்தண பெரியார்களையும் அனுப்பிவைத்து, சிவாகம முறைப்படி பெரும் இராஜ கோபுரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட ஆலயமே இன்று அழகுறக் காட்சியளித்துக் கொண்டிருப்பதாகும்.

மாவிட்டபுரம் முருகன் ஆலயத்திலே வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறுவது வழக்கம். இறுதி நாளான தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசை தினத்திலே நடைபெறும். மாருதப்புரவீகவல்லி தீர்த்தமாடி அருள்பெற்ற "கண்டகி" எனப்படும் கீரிமலையிலேயே புனித தீர்த்தமாடுவதற்காக முருகப் பெருமான் எழுந்தருளுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தீயவை அகற்றும் மாவையூர் முருகன்

புலவர் ம. பார்வதி நாதசிவம்

கற்றவர் நிறைந்த ஊராம்
கலையெலாம் வாழும் ஊராம்
உற்றநல் விருந்து பேணும்
உயர்பண்பாற் சிறந்த ஊராம்
நற்றவம் மிகுந்த ஊராம்
ஞானமே சிறந்த ஊராம்
பொற்புறு தெய்வ பக்தி
பொருந்திடும் மாவை ஊரே
தீயவை அனைத்தும் நீக்கிச்
செகத்தினைக் காத்தல் செய்யும்
மாவையம் பதிவாழ் கந்தன்
திருவிழாக் காண்போர்க்குற்ற
பாவம் போம் பிணிகள் நீங்கும்
பல்கிடும் துயர்கள் மாறும்
மேவுமே செல்வம் யாவும்
மேனிலை எய்தும் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தனை நினைந்து கைதொழுவோம்

சு. குகதேவன்
தெல்லிப்பழை

திசையுக் கிரசோழன் திருமக ளானதோர்
மாருதப் புரவல்லியும்
தீராத குன்மபிணி குதிரைமுகம் எனமாறி
கூடியே மிக வாட்டவும்
வசையற இதுமாறும் வழிநாடி வந்தவள்
கங்கைகா விரியாடியும்
வனப்புறு நிலைகாண முடியாத நிலைகண்டும்
கண்டகியில் வந்தாடியும்
இசையுறு கோயிற் கடவைதனை நாடியவள்
இனியவேல் தனைவணங்கவும்
இன்பமுறத் தன்பிணியும் நீங்கிய பெருமையினால்
காங்கேயன் தனைவைத்துமே
விசையுற எழுப்பிய பெருங்கோயில் மாவைநகர்த்
கந்தனா லயமாகவே
விரிபொழில் காஞ்சிமா வடிவைகும் காங்கேயப்
பெருமானைப் போற்றுவோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum

# MAVIDDAPURAM KANDASWAMY KOVIL MAVAI ADHEENAM

## *A Humble appeal*

*Maharajasri S. D. Shanmuganatha Kurukkal*

On the northern – most seaside of the lovely Isle of Sri Lanka, Adorning the ancient city of YALPANAM, Known more as JAFFNA, there looms large a trimly town deriving its historic name KANKESANTURAI from the fact of the arrival of the image of lord KANKEYAN, Another Manifestation Of Lord Skantha, affording sight seer an opportunity to enjoy a kaleidoscopic view of the town ship that comprises several workshops, Factories, built – up areas featuring modern mansions, star hotels and developed lands. In this locality that prides in a historic background of spiritual wonders, the people live a well disciplined life conscious of religious responsibilities and showing reverence to gurus and elders.

"Kovitkadavai" was the lovely name by which, the area that formed the three important villages of Maviddapuram, Kankesanturai and Keerimalai was known in the past. History records that in the Seventh century a Chola princess on instructions lot from Shanthalinga Swamy of India while on a pilgrimage undertaken to get herself cured of a lingering intestinal disorder arrived at the seaside resort of Keerimalai, famous for its specific springs and immediately took a plunge prayer – fully in the fresh water oozings at the confluence with the blackish waters of the narrow Palk Strait. The story goes on to narrate how the princess, to her utter but pleasant surprise, found that her dyspeptic disorders had vanished as if by magic and that her facial abnormality, its likeness to a horse's head, had changed and recovered human shape. Hence her resolution to Renovate the shrine that excited for Five thousand



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

years as a small place of worship into a full flexed Temple in accordance to Agama Sastras as a lasting reminder of the rare spiritual experience she had enjoyed in the from of the disappearance of both her dyspepsia and her physical de – formity. The result was the founding of the KANDASWAMY TEMPLE at Maviddapuram now Known to the Hindu world as MAVAI KANTHAN SHRINE.

That was not all. The images for this Historic Temple were brought from South India by sea to a port in close proximity to Keerimalai, known then as Gayathurai, which place has now become known as Kankesanturai because of the fact that the particular image of Kankesan another name identifying Lord Skantha, first arrived at this place Here is a History of great religious significance and the place thus consecrated has a story extending to five thousand years.

This ancient Temple had been a source of inspiration and guidance to the people of Jaffna in their religious, social, educational and cultural activities for several centuries when Tamil Kings had founded endowments for it. As a centre of central religious activities, this temple had been supplying its congregation and dependants with all facilities and necessaries of religious life till that fateful occasion in the 15$^{th}$ century when **With the unfortunate arrival of the Portuguese and Dutch as conquerors of this land, Several Saiva shrines including this ancient Temple were razed to the ground by the bigoted foreigners, headed by Christian Missioneries**.

However, there dawned a bright patch in the history of this country when the Britishers set foot here in the 17$^{th}$ century. The British governor was helpful enough in allowing the reconstruction of this ruined shrine. Then onwards the Temple has been growing in its importance and usefulness to the people providing for all religious ceremonies and social activities.

Today this Temple, situated as it is in almost twelve acres of land, is a pleasing complex with the Sanctum Sanctorum at the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

centre, the Raja Gopuram, the tallest and most picturesque of its kind in this District, the shrines in the praharams. The flower garden where fragrant and choosen plants riot in delightful fascination, the spacious Hall for Ceremonial occasions, pilgrim rests and madams. However all these do not satisfy the conditions of modern requirements and facilities, lacking as they are in extent and content. During times of floods, distress, epidemics and other abnormal circumstances large numbers seek shelter here. Devotees in their performance of religious rites, Ceremonies such as initiation, ceremonial starting the studies of children, first feeding of infants, wearing of the golden thread Thali in holy wedlock congregate in large numbers in these premises because of the spiritual background, antiquity and more particularly due to the priority of place this temple has among places of Worship.

All these occurrences demand the provision of proper facilities by the Temple Authorities but owing to the growing number of devotees and the increasing activities of the congregation such facilities are in short supply. To meet the immediate demand of the temple itself, the construction of an Exhibition Hall called **VASANTHA MANDAPAM,** two hundred feet in length, forty feet in breadth and twenty feet in height has been planned and commenced with the initial contributions of willing and wealthy worshippers. However, even the whole hearted donations could not make up the stipulated sum of Rupees estimated for the completion of this massive structure. It was at this juncture that His Excellency J. R. Jayawardhana on the request of Mr. S. Suntharalingam ex M. P. & Minister, and Mr. A. Amirthalingam, M. P. came to our rescue by allocating from the presidential fund One Lakh of Rupees toward this important religious project having known about the antecedents of this ancient shrine and the solemnity and efficiency of the undertakings of the Temple Administration at present. Even this great gesture could not help fill the gap of the huge deficit needed for completion of the Building.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hence our effort in making a reasonable appeal to all Charitable Organizations in this Island and in extending our humble request to similar Institutions Overseas particularly to foreign Governments. In making this special request it is our duty to acquaint every one with some salient facts relating to the scope, extent and significance of the congregation of this Ancient Temple.

The Annual High Festivals of this Temple commence on the fifth day after the new moon of the Hindu month of AANI corresponding to June 15th – July 15th and extending up to the new moon of AADI (July 15th – August 15th) determined according to the spiritual specifications laid down by Vedic Scholars. The crowning ceremony is the well – known AADI AMAVASAI THEERTHAM at the confluence of the Holy springs of Historic Keerimalai with the placid waters of the palk Srait. At a Minimum, nearly ONE HUNDRED THOUSAND worshippers gather at this shrine during the sacred annual festivals. Another significant occasion in special reference to the worship of Lord Skantha is the SKANTHA SHASTI - a six Day FAST PENANCE AND PRAYER, occurring during the months of Aippasi (October – November) when more than Ten Thousand Devotees attend these Special festive poojas and festivals. There is also the Weekly special Feature – FRIDAY POOJA, a festival that is always attended by more than One Thousand worshippers. We may also make mention of other special occasions when students engaged in discovering facts by Scientific study of Arts, Archaeology Sculpture and other specialized intellectual studies, pay regular visits to this ancient shrine because of the general assumption that this locality known for its religions and cultural history is a suitable centre for such intellectual pursuits. These researchers hail from all over the World, particularly from Singapore, Malaysia, Germany, France, Britain, America, Japan and of course our neighbouring sub continent India.

It will be quite appropriate to mention about the enormous destruction caused by the ethnic conflict which resulted in war.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Against our wishes we were compelled to vacate from the Temple premises in October, 1990. Opportunity was not at all given to us to remove the valuables or to keep them in safe places. After a lapse of about five and a half years we were allowed to visit the Temple on the 18th May, 1996 by the security forces. We were much horrified by the prevailing site at the temple vicinity. The temple its belongings and the surroundings were very much damaged and destroyed. This havoc was caused by heavy aerial bombings and random artillery attacks at the Temple and its vicinity. During this long duration this area was taken charge of and was in full control of the security forces and civilian inhabitation was totally barred, The overall result is the severe destruction of the temple and all other buildings like Madams, Chatrams, and those residences of the priests and temple workers. It is very important to note that the "NIRTHA" Mandapam made out of Granite stones was damaged. The worshipping idols made out of "panchalogam" and some coated with gold have been robled and cannot be traced. The ornamental coverings of the flag-staff made of pure silver and which is a rate collection of this temple alone were missing. The Vaganams and Chariots were damaged and need major repairs. Very important rare Ola manuscripts, Valuable books and documents, Files pertaining to temple activities, and all other research documents and books were removed from the library and from the office. Several efforts to trace them did not prove fruitful. Ola manuseripts belonging to 11th cettury Disappeared.

The calm Sacred spiritual atmosphere which prevailed in this area was totally disturbed and the area now seems as a desert. This is a serious impact of the war on the Temple and its neigh bourhood in particular.

Now we think that it is the paramount duty of all of us to get together and rebuild the temple and its neighbourhood to its former order and bring back the sacred Atmosphere of this area. In this divine venture everyone should join hands with us and have to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

participate without any distinctions, and make our endeavour a success in the interest of the future. It may be that it is a major project which needs a couple of years, yet it is very urgent and important that every one should participate in one way or other in this noble venture towards the restoration of this Ancient Historical Temple which has a very long history of many centuries.

Thus this is the duty of every noble Religious and Cultural minded citizen to take part in this sacred venture and restore the Religious and Cultural practices and noble functions of this ancient Temple. These functions and practices have been continuously observed and are characteristics of this temple for centuries and has now become mixed with regular religious customs and observations. These highly religious observances and practices have its origin from the Hindu Agama Shastras and will enhance, on observations, towards the development of a highly sophisticated and an orderly society.

Reference has necessarily to be made to the present economic position of the people of this area weakened and depressed as they are by unusual happenings and an inexplicable revolt of nature in the from of ravaging floods and storm. Hence our eyes naturally turn elsewhere, particularly to the governments of sympathetic nations that are inherently philanthropic enough to lend a helping hand to deserving cause and people in distress.

The vast damages and destruction caused to this temple was brought to the notice Her Excellency the president Mrs. Chandrika Kumaratunka by me and by members of parliment Mr. S. Sivasithamparam (MP), Neelan Thiruchelvam (MP) (TULF) and by S. Sivathasan (MP) (EPDP) through Memorandums and personal representations, and appealed Her Majesty the need to reconstruct this ancient historical temple in addition with Naguleswaram and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thirukkethеswaram temple. In Parliment also they stressed the need for the Renovations.

Having considered All these suggestions and informations about the damages Her Excellency the president Mrs. Chandrika Kumarathunga Granted financial assistant through "RAAN" from 01-09-1998 to 28-11-2001 amounting to Rs. 14098958/= for Building constructions. Up to now 60 percent of the works had been completed. During 2002 change of government forced us to halt the massive renovation works, the excuse given was lack of funds to grant for these projects. Yet the religious minded devotees help us with little drops of funds to carry forward the works that had been started. During 2002 the Minister of Hindu Religious Affairs Hon Mr. T. Maheswaran MP a prominent Saivite and a well wisher of this temple, while on a mission to assess the damages and destructions of temples visited this temple also. He inspected the ruins. Saw for himself the twelve acre temple complex area with full of ruins, rubbles etc. along with huge growths of unwanted trees, shrubs and creepers and so on. He got shocked and doubted whether the temple complex will regain the past glory at the Earliest. He prayed Lord Skantha to offer ways and means and the required wealth to complete the renovations at the earliest. He felt very sorry to wards the Financial Position of his Ministry that seemed insufficient to support for this hugh constructional Activities. Yet His Promise to grant substantial Aids within his limits of control surely symbolizes the gravity of his willingness. To see this temple complex stand Majestically as in the past. Having seen that the temple suffers in its travelling sections, the minister offered a charity by granting a three wheeled Auto for the use of the temple.

Here is an appeal in the course of the cultural religious and educational development of an area that is being served by this Ancient shrine. We are confident that our appeal is justified and therefore will appropriately yield fruitful result. Our congregation that



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is really representative of the Religious minded of this country and of the cultural enthusiast herein, will always be consciously great – ful to their benefactors and we the High Priests of this holy shrine will never fail to make special prayers to Lord Skantha daily for the benefit of those showering such benevolence on these associated with this spiritual centre.

*With all the blessings*

***Maharajasri S. D. Shanmuganatha Kurukkal***

*Governing Authority & Chief High Priest*

*Kandaswamy Kovil*

*Mavai Adheenam*

*Maviddapuram*

*Tellippalai*

*Sri Lanka.*

*Maviddapuram Kandaswamy Kovil*
*Mavai Adheenam.*

*Bank: Mavai Murugan Thiruppani Fund*

*Peoples Bank, Kankesanthurai Branch*

*A/C No: 1531*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருப்புகழ்

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகளவி யாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ

நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா

சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.


சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SKETCH OF MAVIDDAPURAM KANDASWAMY TEMPLE
## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மாதிரி வரைபடம்




நிலஅளவையாளர்: திரு. வ. இரத்தினம்
தெல்லிப்பழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுப் பெருமைமிக்க
மாவைக் கந்தன் ஆலயம்
திருத்தல வரலாறு
(ஆவணக் களஞ்சியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
முருகமயம்



மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

Printed By: Anush Printers, Colombo-11. Tel: 0777-244893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org